
133

# திங்கள்

ஜூலை '57 - 50 சதம்

10 JUL 1957
MADRAS





ஜூன் 14 முதல்
சென்னையில்
சித்ரா
பிரபாத்
காமதேனு
ஸரஸ்வதி
மற்றும் தென்னிடெங்கும்
ஜூபிடர்
கற்புக்கரசி
டைரக்ஷன்
A.S.A.சாமி

133/3-57

# திங்கள்

ஜுலை 1957

ஆண்டு 2 ★ ஹேவிளம்பி–ஆனி ★ மாதம் 6

இம்மாதம்


| | |
|---|---|
| வரலாற்று நூல்களின் அவசியம் ... | 11 |
| ஜெர்மனியில் சம்ஸ்கிருதம் ... | 12 |
| 1857 புரட்சி வரலாறு ... | 16 |
| கேரள முதன் மந்திரியுடன் பேட்டி ... | 17 |
| 'அமெரிக்க கட்டபொம்மன்' ... | 22 |
| நேபாளம் ... | 25 |
| நாடகத்தமிழ் ... | 31 |
| கோவூர் ... | 33 |
| சுதந்திரப் போரைத் துவக்கியது தமிழகமே ... | 37 |
| மனித குலம் ஒன்றே ... | 41 |
| வள்ளுவர் வாக்கு ... | 44 |
| இன்புளுயன்ஸா ... | 46 |
| ஸ்ரீ ரங்கபட்டினம் ... | 48 |
| சேதுநாட்டுக் கடற்கரையிலே ... | 59 |
| தேநீர் ... | 66 |
| ருஷ்ய இலக்கியங்கள் ... | 69 |
| திருமணமும் செவ்வாய் தோஷமும் ... | 73 |
| யானையின் வாழ்க்கை ... | 76 |
| அணுசக்தி ... | 79 |
| எலுமிச்சம் புல் ... | 84 |
| புதுவையில் புதைபொருள் ... | 87 |
| பிளேட்டோ ... | 89 |
| தேவாங்கு ... | 91 |
| உயிரூட்டும் ஒளிக்கதிர் ... | 94 |
| தமிழ் இலக்கியத்தில் தாலி ... | 96 |
| இயற்கையுடன் போராட்டம் ... | 99 |
| ஆற்றைத் தேக்குவோம்–அணைகட்டுவோம் ... | 105 |


படக்கட்டுரை :

ஸ்ரீ ரங்கபட்டினம்.

அட்டைப்படம் :

மஹாபலிபுரம் கல்யாணை


THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

# திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| உள்நாடு ஒரு வருஷம் | ரூ. | 6 |
| ,, அரை வருஷம் | ரூ. | 3 |
| வெளிநாடு ஒரு வருஷம் | ரூ. | 8 |
| தனிப்பிரதி விலை | அணா | 8 |

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| சாதாரண முழுப்பக்கம் | ரூ. | 100 |
| ,, அரைப்பக்கம் | ரூ. | 50 |
| ,, கால்பக்கம் | ரூ. | 30 |
| கடைசி அட்டை (மூவர்ணம்) | ரூ. | 300 |
| உள் அட்டை | ரூ. | 150 |
| முகப்புப் பக்கம் | ரூ. | 150 |

### கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

### போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறாது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

### கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்க முடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

**17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.**

![திங்கள்]

# திங்கள்

## வணக்கம்

"எவ்வளவு கதைகள் வேண்டுமானாலும் எழுதி விடலாம். ஆனால், உண்மைத் தகவல்களைச் சேகரித்து உங்கள் 'திங்க'ளில்வரும் கட்டுரைகள் போல ஒரு கட்டுரை எழுதுவ தென்பது கஷ்டம்தான்!" என்று டில்லியிலிருந்து வந்த ஒரு எழுத்தாள நண்பர், எழுத்தாளர் மகாநாட்டில் சந்தித்த போது தெரிவித்தார். இதற்கப்புறம்தான் 'திங்க'ளுக்கு உதவும் பல புத்தகசாலை (லைப்ரரி) ஸ்தாபனத்தைச் சேர்ந்த அன்பர்கள் செய்யும் உதவியின் பெருமை தெரிந் தது. அவர்களுக்குத் 'திங்கள்' சார்பில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கேரள முதல் மந்திரி நம்பூத்ரிபாதின் பேட்டி இந்த இதழில் வெளியாகியிருக்கிறது. அடுத்த மாதம் டாக்டர் ராம் மனோஹர் லோகியாவின் பேட்டி வெளியாகவிருக்கி றது. சங்கீத வித்வான்களுடன் நடத்தும் பேட்டிகளும் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகவிருக்கின்றன.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற போர் நிலைக்களனில் முக்கிய இடம் ஸ்ரீரங்கபட்டினம். அந்த இடத்திற்கு நேரில் சென்று, படங்கள் எடுத்து இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். ஐந்து வருஷத் திட்டங் களில் முதல் இடம் பெற்றிருப்பது நீர்ப்பாசனத் திட்டமா கும். அணைகள் கட்டுவது நம் நாட்டிற்குப் புதிதல்ல, இவை பற்றி மிக சுவாரஸ்யமான கட்டுரை புத்தகப் பகுதி யில் வெளியாகி யுள்ளது.

விஞ்ஞானம், ஜோதிஷம், சரித்திரம், சரிதை, விவ சாயம், இலக்கியம் முதலிய எல்லாத் துறை சம்பந்தமான கட்டுரைகளும் இவ்விதழில் வெளியாகி யுள்ளன.

# திங்களுக்குத் திங்கள்

சென்ற திங்களில் யார் யாரைச் சந்தித்தாலும் "என்ன ஜுரமா, உங்களுக்கும் வந்துவிட்டதா?" என்றே குசலப்பிரச்னம் விசாரித்தார்கள். இன்புளுயன்ஸாவின் கடாக்ஷம் கிடைக்காத பேர்களே அபூர்வம். ஜுரம் வந்தவர்களுக்கு ஒரு முறை இரு முறை என்றும் ஜுரம் வந்தது. இந்த விஷ ஜுரம் இன்னும் அடியோடு ஒழிந்ததாகத் தெரியவில்லை. இதற்குள் ஜப்பானில் கடுமையான மற்றொரு ஜுர அலை ஆரம்பித்திருக்கிறது என்ற செய்தி கிடைத்திருக்கிறது. இந்தியா பக்கம் இது தலைகாட்டாமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. மனித யத்தனத்தினால் செய்வதைச் செய்து விட்டால் பின்னர் கடவுள் விட்ட வழி!

* * *

இப்போது எங்கும் சிக்கனம் பற்றிய பேச்சே இருந்து வருகிறது. 'பூசனிக்காய் பறிபோவது தெரியவில்லை. கடுகு போவதை கணக்கெடுக்கிறார்கள்' என்று சொல்வது இப்போதைய நிலைக்கு மிகப் பொருத்தம். சம்பளங்களைக் குறைத்துக் கொள்வது அயல் நாடுகளுக்கு நீண்ட தந்திகள் அனுப்புவது கூடாது. இம்மாதிரி பலவற்றைச் செய்வதன் மூலம் சிக்கனத்தை அமுல் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பெரும் மிச்சம் எதுவும் ஏற்பட்டுவிட முடியாது.

வெளிநாடுகளுக்கு தூது கோஷ்டிகள் அனுப்புவது, சர்க்காரின் மேற்பார்வையிலுள்ள பல திட்ட வேலைகளில் சரியான வரவு செலவு கணக்குகள் வைத்து கண்டிப்பான நடவடிக்கைகள் எடுப்பது இவைகளால் சில கோடி ரூபாய்கள் மிச்சப்படுத்த முடியும். வேண்டியவர்களுக்காகப் புதிய வேலையை சிருஷ்டிப்பது போன்ற நடவடிக்கைகளை நிறுத்துவது மூலமும் சிக்கனம் பிடிக்கலாம்.

* * *

இந்தியாவில் உணவு நிலைமை பற்றி உண்மையில் குழப்பம் இருந்து வருகிறது. உணவு உற்பத்தி அதிகம் என்கிறார்கள். அதே சமயத்தில் பற்றாக்குறை காரணமாக விலை உயர்ந்து விட்டது என்கிறார்கள்.

வங்காளம், பீகார், அஸ்ஸாம் முதலிய ராஜ்யங்களில் பஞ்சம் தலைகாட்டத் தயாராக இருக்கிறது. கேரளாவில் வழக்கம் போல பற்றாக்குறை. சென்னையிலும் ஆந்திராவிலும் விலை உயர்வு.

மழை சில வருஷங்களாக நன்றாகப் பெய்தே வருகிறது. பாசன வசதிகள் ஏற்பட்டே இருக்கின்றன. நெல் அதிகமாகவும் உற்பத்தியாகியிருக்கிறது. பதுக்கல் காரணமாகத் தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த பதுக்கலே விலை உயர்வுக்கு காரணம். இதை ஒழித்தால் பாதி



***மேல் வரிசை: கனைபிரதமர் நிக்ருமா. இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா (நடு) பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன்.***

***கீழ்வரிசை: பாரதப் பிரதமர் பண்டித நேரு, பாக் பிரதமர் சுஹ்ரவர்த்தி.***

---

உணவுப் பிரச்னை தீர்ந்தது போலாகும்.

* * *

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு ஸிரியா, நார்வே, டென்மார்க், ஸ்வீடன் பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு **விஜயம்** செய்தார். இதன் பலனாக அந்தநாடுகளில் இந்தியாவின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்திருக்கின்றன.

பாரத நாட்டின் நடு நிலைமைக் கொள்கை சுயநலத்தையோ, சூழ்ச்சியையோ

அடிப்படையாகக் கொண்ட தல்ல என்பதையும் சர்வதேச அரங்கில் இந்தியாவின் ஒரே லட்சியம் உலக சமாதானம் தான் என்பதையும் நேருஜி சந்தேகத்திற்கு இடமின்றி அந்த நாடுகளில் செய்த பிர சங்கங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

*   *   *

இம்மாதத்தில் இலங்கையில் தமிழர்கள் சத்யாக்கிரகம் ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கின்









மேல் வரிசை: ரோடீஷியா பிரதமர் வெலன்ஸ்கி, கானடா பிரதமர் லாரண்ட்.

கீழ் வரிசை: ஆஸிபிரதமர் மென்ஸிஸ், நியூஜிலாந்து பிரதமர் ஹாலந்து.

றனர். அவர்கள் கோரிக்கைகளாவன :—

(1) 'சிங்களம் மட்டும் அரசாங்க மொழி' என்ற சட்டம் கைவிடப்பட்டு தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்.

(2) இலங்கையை பெடரல் நாடாக்கி தமிழ் மாகாணங்கள் சுயாட்சிபெற்ற அங்கங்களாக இருக்கவேண்டும்.

(3) தமிழ்ப் பகுதிகளிலுள்ள குடியேற்ற நாட்டுத் திட்டங்களில் சிங்களவர்களை குடியேற்றுவதை நிறுத்த வேண்டும்.

(4) இலங்கை இந்தியர் அனைவருக்கும் பூரண பிரஜா உரிமை அளிக்கவேண்டும்.

கிளர்ச்சியை அனுமதிக்க முடியாது என்றும் சில சலுகைகளைத் தர தயார் என்றும் இதற்காக வட்டமேஜை மகாநாடு கூட்டலாம் என்றும் இலங்கை பிரதமர் பண்டாரநாயகா கூறுகிறார். இது இலங்கைத் தமிழர்களுக்குத் திருப்தியளிக்கும் என்று தோன்றவில்லை.

கோல்ட் கோஸ்ட் பிரதமர் நிக்ருமா முதல் தடவையாக இம் மகாநாட்டில் கலந்து கொண்டார். ஒரு நீக்ரோ இம் மகாநாட்டில் கலந்துக் கொள்வது தென்னாப்பிரிக்கப் பிரதமர் ஸ்டிரைடம்முக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர் தனக்குப் பதிலாக அயல்நாட்டிலாகா மந்திரியை அனுப்பியிருக்கிறார். பாக் பிரதமர் காஷ்மீர் பிரச்னை பற்றி இதில் கிளப்பி தன் கட்சிக்கு பலம்தேட போட்ட திட்டம் நிறைவேறவில்லை. கூட்டத்தில் ஆரம்ப பிரசங்கங்கள் நடை பெற்றதும் ஆயுதப்பரிஹரண பிரச்னை குறித்து விவாதம் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

* * *

சென்ற காமன்வெல்த் மகாநாட்டின் போது அப்போதைய பாக் பிரதமராக இருந்த முகம்மதலி, காமன் வெல்த் நாடுகளின் ராஜ தந்திரிகளை மத்தியஸ்தம் செய்து வைக்கும்படி கோரினார். இம்முயற்சி கைகூடவில்லை. பண்டித நேருவை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசுவதால் சமரசம் ஏற்படும் என்று தான் நினைக்கவில்லை என்று சுஹ்ரவர்த்திகூறுகிறார். ஆகவே காஷ்மீர் பிரச்னை காமன்வெல்த் மகாநாட்டில் தலைகாட்டவில்லை.


---

## ★சங்கீத வித்வான்களுடன் பேட்டி

சங்கீதத் துறையில் பாடுபவர்கள், பக்கவாத்தியம் வாசிப்பவர்கள் இவர்களில் தலைசிறந்தவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். இவர்களுக்கு விருது அளித்து கௌரவிக்க சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். இந்த வித்வான்கள் எவ்வளவோ முயற்சி, பிரயாசைகளின் பேரில் முன்னுக்குவந்து இன்று புகழடைந்திருக்கிறார்கள். இவர்களைச் சந்தித்துப்பேசி எழுத 'திங்கள்' உத்தேசித்திருக்கிறது.

இப்பணியைச் செய்ய ஸ்ரீ எஸ். முத்துஸ்வாமி முன்வந்திருக்கிறார். பத்திரிகை உலகில் நிருபர் தொழிலில் அவரை 'முத்தண்ணா' என்று சொல்லலாம். சித்திரம், சிற்பம், சங்கீதம் இவற்றில் அவருக்கு சிறந்த அனுபவம் உண்டு. சங்கீதத்தில் அவருக்கு அலாதி ஈடுபாடு உண்டு. அவர் 'முத்து' என்ற பெயரில் இப்பேட்டிகளை எழுதிவருவார்.

கர்நாடக சங்கீதகல்லூரி பிரின்ஸ்பாலான சங்கீத வித்வான் முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யருடன் இவர் நடத்தியுள்ள பேட்டி ஆகஸ்ட் 'திங்க'ளில் பிரசுரிக்கப்படும். —ஆசிரியர்.



★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பேனு மன்னர்கள் மகாநாடு

# தமிழ் வளர சில யோசனைகள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

***சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஐந்தாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின் பிரசங்கங்களிலிருந்து நமது நிருபர் சேகரித்தவை.***

தமிழ் எழுத்தாளர்களின் 5-வது மகாநாடு சென்னையில் ராஜாஜி ஹாலில் ஜூன் 22, 23 தேதிகளில் தினமணி துணை ஆசிரியர் ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது. தமிழ் நாடகாசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரும் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ராஜாஜி வர இயலாததால், மகாநாட்டை முன்னாள் நீதிபதி வரதாச்சாரியார் திறந்து வைத்தார். 'விருந்தினராக வந்தவன் மாப்பிள்ளையாகி விட்டதாக'

ஹாஸ்யமாககுறிப்பிட்டஅவர், மாப்பிள்ளை போலவே,போட்ட மாலையை எடுக்காமல் பேசி, சில அரிய புத்திமதிகளைக் கூறினார்.

தமிழ் எழுத்தாளர்கள் நன்ருக எழுதக்கூடியவர்கள் மட்டுமல்ல, மிக நன்ருகப்பேசக்கூடியவர்கள் என்பதும் சிறு கதை அரங்கு விவாதத்தின் போது தெரிய வந்தது. விவாதத்தில் கலந்து கொண்ட 14 பேர்களில் ஒருவராவது சோடை போகவில்லை.

'தேவன்' படத்தை ம. பொ. சி. அவர்கள் திறந்து வைத்து, அருமையான சொற்பொழிவாற்றினார். தமிழ் இலக்கியத்திலுள்ள மிகச் சிறந்த நூல்களை தங்கள் மொழிகளில் மொழி பெயர்த்ததற்காக மலையாளி ஆசிரியர் ஸ்ரீ நாராயண நாயருக்கும், தெலுங்கு ஆசிரியர் ஸ்ரீராமுலு ரெட்டிக்கும் பதக்கங்கள் அளிக்கப்பட்டன.

* * *

''தமிழ் என்று ஒன்றுதான் இருக்கிறது. தனித்தமிழ் என்று கூறுவது அர்த்தமற்றது. தமிழில் பிறமொழி சொற்களையும் சேர்க்க வேண்டும். ஆனால் தமிழ் இலக்கண முறைப்படி அவற்றை வழங்க வேண்டும்.


''கம்பன் வடமொழிச் சொற்களைக் கையாண்டான். சைவ சித்தாந்த நூல்களில் வட மொழிச் சொற்கள் உள்ளன. தமிழ் வளர கலைச்சொற்களாக ஆங்கிலச் சொற்களைப் பயன் படுத்தலாம். நாளடைவில் புதிய சொற்களை உருவாக்கும் சக்தி தமிழுக்கு உண்டு. தமிழ் மகள் மலடியல்ல.

''பழமையும் நமக்கு தேவை. புதுமையையும் சிருஷ்டிக்க வேண்டும். நமக்கு தமிழ் வளம் பெறவேண்டும் என்று ஆசை பெருகியிருக்கிறதே யொழிய, ஆற்றல் பெருகவில்லை. அதனால் தான் முன்னேறிச்செல்லமுடியவில்லை.''

— ம. பொ. சிவஞானம்.

* * *

''கணிதம், விஞ்ஞானம் ஆகியவை தவிர. மற்ற பாடங்களை, கல்லூரிகளில் தமிழில் போதிக்கத் தொடங்குவதில் அதிக சிரமமிருக்க காரணமில்லை. ஆரம்பத்தில் ஒரு சில காலம் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாள நடையில் நடைபெறவேண்டியிருக்கும். மொழியின் தூய்மைக்கு மட்டும் ஆரம்பம் முதற் கொண்டே முதலிடம் தரவேண்டும் என்று வற்புறுத்தினால் தாய் மொழியில் போதனை வரும் நாள்



நாடகாசிரியர் சம்பந்த முதலியார்



நாவலர் சோமசுந்தர பாரதியார்

கால வரம்பின்றி ஒத்திப் போகத்தான் செய்யும்.

''ஆட்சிமொழி தமிழ் மொழி ஆவதற்கும் இது பொருந்தும். (1) கூடிய வரை பழகு தமிழையே உபயோகிக்க வேண்டும். (2) அந்நியச் சொற்களைப் புதிதாக கையாள நேரிடுகையில் கூடியவரை அவைகளைக் குறைவாகவே கொள்ள வேண்டும். பழக்கப்பட்டு போய் நிலைத்துவிட்ட சொற்களைத் தமிழாகவே பாவிக்க வேண்டும். அவைகளை மாற்ற முற்படுவது தவறு. (3) விஞ்ஞானம், தொழில் துறை சொற்கள் கூடிய வரை ஆங்கிலத்திலேயே இருப்பது நல்லது.''

— ஏ. ஜி. வெங்கடாச்சாரி.

* * *

''ஒவ்வொருவரும் தாம் எழுதுவதெல்லாம் அழியாத இலக்கியம் என்று மனப்பால் கொள்வதில் பிரயோசனமில்லை. உலகம் தோன்றியது முதற் கொண்டு இன்று வரை பல் வேறு நாடுகளிலும் பல் வேறு காலங்களிலும் பல அறிஞர்களும் மேதைகளும் தன் கருத்துகளையும் அனுபவங்களையும் நமக்கு பல இலக்கிய உருவங்களில் படைத்துத் தந்திருக்கிறார்கள். இவ்வளவு எழுத்துகளையும் கருத்துகளையும் மீறி நாம் என்ன புதிதாக சொல்லப் போகிறோம் என்பதையும் சிறிது யோசித்துப்பார்க்க வேண்டும், அநேக விஷயங்கள் நமக்கு முன்னால் நம்மைவிட அழகான முறையில் சொல்லப் பட்டிருக்கின்றன என்பதை மனதில் வைத்துக்கொண்டு எழுதவேண்டும்.''

— ந. சிதம்பர சுப்பிரமணியன்.

* * *

பிறமொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக் கொள்வதில் தமிழ் எழுத்தாளர் கொஞ்சங் கூட வெட்கப்படக்கூடாது. முழுக்க முழுக்க பரிசுத்தமான மொழி என்று எதுவும் கிடையாது. பழக்கத்தில் வந்த நீண்ட நாள் உபயோகத்தினால் சுலபமாக மக்களுக்கு புரிந்து வரும் சொற்களைப் பிற பாஷைகளிலிருந்து எடுத்துக் கொள்வதில் அந்தஸ்துக் குறைவு எதுவுமில்லை ஆங்கிலமொழி, பிற மொழிகளிடமிருந்து சொற்களை எடுத்து எடுத்துதான் வளமடைந்துள்ளது. கலாசார நாகரிக வளர்ச்சியில் ஐக்கிய உணர்ச்சியுடன் பிரச்னையை அணுகுவதுதான் இக்காலப் போக்கு. இதே போக்கை பாஷை விஷயத்திலும் கடைப் பிடித்தால்தான் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டு தமிழ்மொழி வளமடையும்.''

— எஸ். வரதாச்சாரியார்.

# வரலாற்று நூல்களின் அவசியம்

டி. எம். நாராயணசாமி பிள்ளை

[அண்ணமலை சர்வகலாசாலை உப அத்யட்சகர்)

ஒவ்வொருவரும் தத் தம் நாட்டு வரலாற்றை அறிய வேண்டியது இன்றியமையாதது. ஆனல், அவரவர் நாட்டுச் சரித்திரத்தை மட்டும் கற்ருல் போதாது. ஒரு நாட்டுச் சரித்திரத்தை மட்டும் படித்தால் சரித்திரப் படிப்பினுல் ஏற்படும் நன்மையெல்லாம் கற்பவருக்கு எய்தாமற் போகலாம். ஒருநாட்டுச் சரித்திரம் மட்டும் படிப்பதால் குறுகிய மனப்பான்மை ஏற்படக்கூடும்; செருக்கும் ஏற்படக்கூடும். ஆகையால் ஒரு நாட்டு வரலாற்றை மட்டும் கற்ருல் போதாது. மனிதன் எந்நாட்டவனுயினும் ஒரே குலத்தைச் சேர்ந்தவன்; எதிர்காலச் சிறப்பை நோக்கின் யாவரும் ஒரு குலம் என்ற உணர்ச்சி வளரவேண்டும். இந்த மனித ஒற்றுமை உணர்ச்சியைத்தான் பரந்த நோக்கங்கொண்ட உலக மேதைகள் உலக மக்களுள்ளத்தில் பரப்பி வருகின்றனர். உலகம் முழுவதிலும் மக்களை ஒற்றுமைப்படுத்துவதில் உலக வரலாற்றுப் படிப்புக்குத் தனிச்சிறப்பு வாய்ந்த இடமுண்டு. எல்லா மக்களும் சரித்திரங்களையும் நடுநிலையுடன் கூர்ந்து நோக்கி, எவை எவை வாழ்வின் முன்னேற்றத்துக்கு அவசியம் என்று உணர வேண்டும். உலகம் முழுவதிலும் ஒவ்வோர் நாட்டிலும் மக்கள் எவ்வாறு உயர்வெய்தினர், எவ்வாறு தாழ்வடைந்தனர் என்பதை ஒப்பிட்டு ஒரு தலை நோக்கமின்றிப் பார்த்தால் மிகுந்த நன்மை விளையுமென்பதில் ஐயமில்லை. இதனுல் மக்கள் மனம் விசாலமடைந்து, உள்ளத்தில் பரந்த நோக்கம் பதிந்து, வேற்றுமையுணர்ச்சி அகன்று, எதிர்கால முன்னேற்றத்துக்குப் பயனுள்ள வழி வகுக்கப்படு மென்பது திண்ணம். இவ்வுயர்ந்த, பரந்த மனப்பான்மையை வளர்ப்பதற்கு உலக வரலாறு கற்பது மிகவும் உதவியாயிருக்கும். மக்கள் வரலாறு, கால, தேசப் பாகுபாடுகளால் உண்மையில் வேறுபட்டதன்று. மக்களினம் நிறத்தினுலும் வேறுபட்டதன்று; அறிவு வளர்ச்சியின் அடிப்படையிலேயே, மக்களினம் உண்மையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அவ்வளர்ச்சியை நடுநிலையுடன் விளக்கும் வரலாற்று நூல், யாவராலும் வரவேற்கத் தக்கதே.

எச். ஜி. வெல்ஸ், டேவிஸ், வெப்ஸ்டர் முதலிய சில பேரறிஞர்கள் ஆங்கிலத்தில் உலக வரலாற்று நூல்கள் எழுதியுள்ள போதிலும், அவை மட்டும் நம்நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்குப் பயன் அளிப்பதற்கில்லை. குடியாட்சி பலக்கி வரும் இக்காலத்தில், உலக வரலாற்றறிவை யாவரும் பெற்ருல்தான் எதிர்காலத்தில் நல்வாழ்வு பெற முடியும்.

உலக வரலாறு கற்பிக்கும் செய்திகளைப் பயன்படுத்திக் கொண்டு, மக்கள், சீர்திருத்தமும் முன்னேற்றமும் அடைவார்களாக! ★

# ஜெர்மனியில் சம்ஸ்கிருதம்

ஸி. ராஜப்பா

**ம**ஹாகவி காளிதாசர் பாரதப் பிரஜைகளில் ஒருவராக வாழ்ந்தார். சமஸ்கிருத மொழியில் உலகம் புகழும் காவியங்களை உருவாக்கி புகழுடம்பெய்தனர். அவரது இலக்கிய சிருஷ்டிகளுக்கு உலகம் இன்றும் தனி மதிப்பளித்து கௌரவித்து வருகிறது. இந்திய மொழி ஒன்றில் அவர் உருவாக்கிய இலக்கியங்கள் அவற்றின் சிறப்பின் காரணமாக ஆங்கிலம், ஜெர்மனி, ரஷ்ய மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ஜெர்மனி தேசத்தவர்கள் சம்ஸ்கிருத மொழியில் கொண்டுள்ள ஆர்வம் காரணமாக காளிதாஸரை கௌரவிக்க முன் வந்துள்ளனர். அவரது அமர சிருஷ்டிகளை ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்க்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஜெர்மானியருக்கு சம்ஸ்கிருதத்திலுள்ள ஆர்வத்தையும், காளிதாஸனின் நூல்களில் விசேஷ கவனம் கொண்டுள்ள ஜெர்மானியர் ஒருவரைப்பற்றியும் அறிய உதவும் பொருட்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**ஜி**யார்க் பார்ஸ்டர் என்னும் ஜெர்மானிய வாலிபன் உலகம் சுற்றும் ஆசையால் நாட்டை விட்டுக் கிளம்பினான். பஸிபிக் கடற்கரைத் தீவுக் கூட்டங்களின் இயற்கை வனப்பு அவன் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்து விடவே, அங்கு தங்கினான். அங்கிருந்த பூர்விகக் குடிகளின் வாழ்க்கை வரலாறு பற்றி அறிவதில் ஆவல் கொண்டான். அவர்கள் மூலம் பாரத நாட்டைப் பற்றிய அரிய தகவல்கள் பலவற்றைச் சேகரித்துக் கொள்ள முடிந்தது பார்ஸ்டருக்கு.

பார்ஸ்டர் கேட்டறிந்த உண்மைகளில் சம்ஸ்கிருத மொழி வளாச்சி பெற்ற இடம் இந்தியா என்றும், சம்ஸ்கிருத இலக்கியங்கள் இங்கு உலகினர் புகழும் அளவு உருவாக்கப்பெற்றவை என்றும் கேள்விப்பட்டான். அவனுக்கு சம்ஸ்கிருத மகாகவி காளிதாஸனின் நூல்களில் விருப்பம் உண்டாயிற்று. இவையெல்லாம் 1773ம்

---

★ ஆதாரம்: ஜெர்ஹார்டு ஸ்டெய்னர் என்னும் ஜெர்மானியர் எழுதிய 'காளிதாஸா ஆர் டிஸ்கவரி ஆப் எ போயட்' என்னும் கட்டுரையில் காணப்படும் தகவல்கள்; ஜெர்மனியைச் சேர்ந்த சம்ஸ்கிருதப் புலவர் டாக்டர் ஆல்ஸ்டார்ப் நிகழ்த்திய பிரசங்கம்.



புரொபஸர் ரூபென்

**வால்டர் ரூபென் என்னும் ஜெர்மானியர் உலகச் சுற்றுப் பிரயாணத்தைத் தற்போது மேற்கொண்டிருக்கிறார். இவர் பன்மொழிப் புலவர். 1935-ம் ஆண்டில் அங்காரா பல்கலைக் கழகத்தில் போதனையாளராகப் பணியாற்றியிருக்கிறார்.**

**1936-37ம் ஆண்டுகளில் இந்தியாவுக்கும் விஜயம் செய்திருக்கிறார். 1950ல், பெர்லினிலுள்ள ஹம்போல்டு பல்கலைக் கழகத்தில் வேலை பார்த்தார்.**

**இந்திய வேத சாஸ்திரங்களில் இவர் மிகப் பற்றுதலுடையவர். இந்திய உபநிஷத் நூல்களை ஆராய்ந்து, ஜெர்மன் மொழியில் 1950ல் வெளியிட்டார் ரூபென். இவர் இந்திய வேத நூல்களின் முழுக் கருத்தையறிய இதிகாசங்களான ராமாயணம், பாரதம் இவற்றைப் படித்துள்ளார். இவர் தன் சம்ஸ்கிருத மொழி பாண்டித்யம் காரணமாக 'ம்ருச்சகடிகை' 'தசகுமாரசரிதம்' 'முத்ராராக்ஷஸம்' ஆகியவற்றை மொழிபெயர்த்துள்ளார். தற்போது கௌடில்யர் எழுதிய 'அர்த்த சாஸ்திரத்தை' மொழிபெயர்க்க விருக்கிறார்.**

ஆண்டில் நடைபெற்றவை யாகும்.

பார்ஸ்டர் லண்டனில் தங்கும் போது அலக்ஸாண்டர் ஹாம்போல்ட் என்பவருடன் சேர்ந்து வசிக்க நேரிட்டது. அவரிடம் சம்ஸ்கிருதத்திலிருந்து பிராக்ருத மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட 'சாகுந்தல'ப் பிரதி ஒன்றிருப்பதை பார்ஸ்டர் கண்டான். பார்ஸ்டருக்கு கவி காளிதாஸனின் இலக்கியத்தின் மீதுள்ள ஆவலால் தான் அதை ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்க்க விரும்புவதாகக் கூறி, அலெக்ஸாண்டர் ஹாம்போல்டிடமிருந்துபெற்று, அதைத் தானே மொழி பெயர்த்தான். அவனது நண்பர் ஜான் பீட்டர் பிஷர், இதை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதுவே முதன்முதலாக சம்ஸ்கிருத நாடகம் ஜெர்மனியில் அறியச் செய்த முதல் சேவையாகும்.

''பாரதப் பெண்களின் பண்பு கங்கை நதி வாசிகளின் வாழ்வு பற்றிய முழு விவரங்களை ரஸனை குன்றாமல் காளிதாஸன் எழுதியிருப்பதை மூலத்தின் சுவை குன்றாமல் மொழிபெயர்த்திருக்கிறான் பார்ஸ்டர்'', என்று விமர்சகர்கள் உயர்ந்த முறையில் விமர்சனம் எழுதினார்கள்.

தூய காதலின் சிறப்பு, கணவன் பிரிவால் வருந்தும் பாவை, நேசம் முகம் மறவாத கணவன், குறுக்கே விதியின் விளையாட்டால் விளையும் இன்னல்கள் இவற்றை ஜெர்மானியர்கள் இந்நூலின் மூலம் அறிந்து வியந்தனர். காளிதாஸனின் புகழ் ஐரோப்பிய நாடுகளில்

பரவ இந்த மொழிபெயர்ப்பு நூல் பேருதவியாக இருந்தது.

ஜெர்மானிய கவிஞர் கதே வாழ்ந்த காலத்தில் வெளிவந்த இந்நூல், அவரை வெகுவாகக் கவர்ந்தது. புகழ் மொழிகள் பல கூறி காளிதாஸனின் இலக்கியம் சிருஷ்டிக்கும் தன்மையை ஜெர்மன் மக்களுக்கு எடுத்து விளக்கினர் கதே.

ஜெர்மன் மக்களுக்கு சமஸ்கிருத மொழி மீது ஆர்வம் பிறந்து அதனைப் போற்றி வளர்க்க விரும்பி, இந்தியாவினின்றும் அரும் பெரும் இலக்கியங்களை எடுத்துச் சென்று காத்து வந்தனர். ஆனல் சமஸ்கிருத மொழி ஆதியில் தோன்றிய இந்தியாவில் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர்கள் எண்ணிக்கையை எடுத்தால், இம்மொழி பிறந்தது இந்தியாவில்தானு என்று ஆச்சர்யமடைய வேண்டியிருக்கிறது! இந்நிலை மாறும் நாள் எந்நாளோ?

ஜெர்மனியைச் சேர்ந்த சமஸ்கிருதப் புலவரான டாக்டர் ஆல்ஸ் டார்ப், சமீபத்தில் சென்னை சர்வகலாசாலையின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், 19-ம் நூற்றுண்டில் ஜெர்மனியில் இருந்த சமஸ்கிருதப் பண்டிதர்களும் இந்தியக் கலை நிபுணர்களும் செய்த சேவை, இந்தியாவில் சுதந்திர இயக்கத்தின் உதயத்திற்கும் வேத மதம் புத்துயிர் பெற்றதற்கும் நேரடியான காரணம்'' என்று கூறினர்.

''கடந்த காலத்திலும் தற்காலத்திலும் ஜெர்மனியில் சமஸ்கிருதப் படிப்பு என்பது பற்றி அவர் கூறியதைக் கவனிப்போம்.

''ஜெர்மனியில் சமஸ்கிருதத்தைப் போலவே மற்ற ஆசிய மொழிகளும் கற்கப்படுகின்றனவென்றாலும், சமஸ்கிருதப் படிப்பில் மாத்திரம் ஏதோ விசேஷம் இருப்பது போல் தோன்றுகிறது. ஜெர்மன் கவிகளையும் சிந்தனையாளர்களையும் இந்தியா பாதித்துள்ளது. அதே போல் ஜெர்மனியில் இடம் பெற்றுள்ள இந்தியக் கலாச்சாரம் நவ இந்தியாவின் ஆத்மீக கலாச்சாரச் சரித்திரத்தைப் பாதித்துள்ளது.

''இந்தியா விஷயத்தில் ஜெர்மானியர் ஏன் இவ்வளவு அக்கறை கொள்கின்றனர் என்பதற்குக் காரணம் கண்டுபிடிப்பது கஷ்டம். நான் ஏன் இந்திய சாஸ்திரங்களைக் கற்றேனென்று என்னையே பலர் அடிக்கடி கேட்டிருக்கின்றனர்.

''இந்தக் கவர்ச்சி ஒருதலைப் பக்ஷமானதன்று; பரஸ்பரம் இருதரப்பிலும் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சி. இந்தப் பரஸ்பர அபிமானம் வளர்ந்து மேலும் பலம் பெறுமென்று நம்புகிறேன்.

''மேல்நாடுகளைச் சேர்ந்த இந்தியக்கலாச்சாரசாஸ்திரிகள் இந்திய இலக்கிய பொக்கிஷங்களை வெளிப்படுத்தி அவற்றை உலகம் ஏற்கும்படிச் செய்தனர். இந்தியாவின் மறந்து போன புராதன சரித்திரத்தைக் கல்வெட்டுகளிலிருந்தும் கண்டுபிடித்தனர். இவற்றின் மூலம் இந்தியா தன் சுயமதிப்பை நன்கு பலப்படுத்திக் கொள்ளவும், தங்கள் கலாச்சாரத்தைப் பற்றி இந்தியர் பெருமை கொள்ளவும் தங்கள் தாழ்வு மனப்பான்மையை உதறித் தள்ளவும் அவர்கள் உதவி புரிந்தனர், இதைச் சுருக்க

மாகச் சொல்வதென்றால் இந்திய மேதையை மேற்கத்தித் தாக்குதலை எதிர்த்து தன் பெருமையை நிலை நாட்ட அவர்கள் உதவி செய்தனரெனலாம்.

### மேல்நாடு சென்ற ரிக்வேதம்

''19-ம் நூற்றாண்டின் மத்தியில்தான் ரிக்வேதச் சுவடிகள் ஐரோப்பாவுக்குச் சென்றன. மாக்ஸ்முல்லர் பதிப்பித்த ரிக்வேதத்தின் முதல் பாகம் 1849ல் வெளிவந்தது. அதன் 4-வது கடைசிப் பதிப்பு 1874-ல் வெளியாயிற்று. ரிக்வேதம் அச்சிடப்பட்டது இந்தியாவில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. மறுக்கமுடியாத அதன் பெருமையினால் அதற்கு வெற்றி ஏற்பட்டது.

### ஹிந்து மத மறுமலர்ச்சி

''இந்தியாவில் ஹிந்து மத மறுமலர்ச்சி ஆரம்பமாயிருந்த காலத்தில் மாக்ஸ்முல்லரின் ரிக்வேதப்பதிப்பு வெளிவந்தது. மாக்ஸ்முல்லர் செய்த சேவையின் முக்கியத்துவம் இந்த மறுமலர்ச்சியினால் பெரிதும் அதிகரித்தது, மாக்ஸ்முல்லரின் பதிப்பு வராமலிருந்தால் 'வேதத்திற்கு திரும்பு' என்ற யுத்த கோஷத்தை தயானந்த சரஸ்வதி எழுப்பாமலிருந்திருக்கக் கூடும்: அல்லது வேறு விதமாக எழுப்பியிருக்கக் கூடும்.

''வேதங்களினிடம் இந்தியர்கள் செலுத்தும் அளவு பக்தியை மேற்கத்தியார் செலுத்த முடியாது. மேற்கத்தி முறையில் வேதத்தை ஆராய்வது அடாத செயலென்று நினைப்பவர்கள் இந்தியாவில் இருக்கக் கூடும். வேத நூல் ஆராய்ச்சியைக் சகித்துக் கொள்ள ஐரோப்பாவில் கிருஸ்தவர்கள் கற்றுகொண்டுவிட்டனர். இந்தியாவிலும் அந்த நிலை ஏற்படுமா என்பதை நாம் சொல்ல முடியாது.

''வேதங்களை எந்த நாட்டு அறிஞர்களும் ஆராய நியாயமுண்டு. இந்திய மொழிகளிலாகட்டும் ஐரோப்பிய மொழிகளிலாகட்டும் மிகப் புராதன மானது ரிக்வேதம். ஆகையால் இந்திய மதத்தையும் கலாசாரத்தையும் ஆராய்வதற்கு மாத்திரமின்றி எங்களுடைய சொந்தக் கலாசாரம் இந்தியாவுடன் எங்களுக்குள்ள ஆத்மீகத் தொடர்பு ஆகியவற்றைப் புரிந்துகொளளவும் ரிக்வேத ஆராய்ச்சி அலாதியான முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும்.

''13 ம் நூற்றாண்டின் முடிவில் இந்தியாவின் ஆத்மிகப் பெருமையை மேற்கத்தி நாடுகள் கண்டுபிடித்தது எவ்வளவு பெரிய உணர்ச்சி யூட்டும் விஷயமாக இருந்தது என்பதை தற்கால மக்களாகிய நாம் உணர்வது கஷ்டம் சப்ஸ்கிருத நூல்கள். குறிப்பாக காளிதாஸனின் 'சாகுந்தலம்' ஜே. ஜி. ஹெர்டர். கேதே போன்ற கவிஞர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. சம்ஸ்கிருதத்தைப் பற்றி தெரிந்த பின் மதங்கள், மொழிகள் ஆகியவற்றின் ஆராய்ச்சிகளில் புதுவழி தோன்றியது.

''பிரஷ்ய கல்விமானும் பெர்லின் சர்வகலாசாலை ஸ்தாபகருமான ஹம்போல்ட்டின் மனத்தை பகவத்கீதை கவர்ந்தது 'நமக்குத் தெரிந்த இலக்கியங்களுக்குள் தலைசிறந்த தத்துவக் கவிதை பகவத் கீதையே' என்கிறார் அவர்.''

ஜெர்மானியரின் சம்ஸ்கிருத ஆர்வம் என்றும் வளர்பிறையாகவே வளர்ந்து வரவேண்டும் என்பதே நம் அவா. ★

# 1857 புரட்சி வரலாறு

| | | |
|---|---|---|
| 1857. | மே. | 9. கொழுப்பு தடவிய துப்பாக்கித் தோட்டாக்களைத் தொட மறுத்த 85 சிப்பாய்களுக்கு தலா 10 வருஷக் கடுங்காவல். |
| | ,, | 10 மீரத்திலுள்ள மூன்று பட்டாளங்கள் கலகம் செய்தன. டில்லி நோக்கிப் படையெடுப்பு. |
| | ,, | 11 டில்லியை சிப்பாய்கள் கைப்பற்றினர். பகதூர்ஷா மன்னராகப் பிரகடனம் செய்யப்பட்டார். |
| | ஜுன் | 6 கான்பூர் மீது நானாசாகிப் முற்றுகை. |
| | ,, | 7-8, ஜான்ஸிகோட்டை பிடிபட்டது. லக்ஷ்மீபாய்க்கு மீண்டும் பதவி, |
| | ,, | 9-14, தாரியாபாத், பேத்பூர், நோகாங், குவாலியர் இங்கெல்லாம் புரட்சித் தீ பரவியது. |
| | ,, | நானாஸாகிப் கான்பூரைக் கைப் பற்றினார். |
| | ஜுலை | 1 ஹுத்விஸ், இந்தூரில் கலகம். |
| | ,, | 12. நானாசாகிப் படைகள் தோல்வி யடைந்தன. |
| | ,, | 16. கான்பூர் போர். நானாசாகிப் படைகள் வாபஸ். |
| | ,, | 17. அர்ராவை குன்வார்சிங் கைப்பற்றினார். |
| | ஆகஸ் | 3. அர்ராவை பிரிட்டிஷார் பிடித்தனர். |
| | ,, | 13 ஜகதீரபுரத்தில் குன்வார்சிங் தோல்வி |
| | ,, | 16 பிதூரில் தாந்தியா தோபே தோற்கடிக்கப்பட்டார். |
| | செப்ட | 14. டில்லி காஷ்ரி வாயிலை பிரிட்டிஷார் தகர்த்தனர். |
| | ,, | 20 டில்லியை பிரிட்டிஷார் வசப்படுத்தினர். |
| | ,, | பகதூர்ஷா சரணாகதி. |
| | அக்டோ | 23 லக்ஷ்மணபுரி மீண்டும் பிரிட்டிஷ் வசம். |
| | ,, | 26 பாண்டுக் கரையில் தாந்தியாதோபி தோல்வி. |
| | டிஸம் | கல்பி போர். தோபியின் படைகள் வாபஸ். |
| 1858. | மார்ச் | 5 சண்டாவில் பிரிட்டிஷார் தாக்கப்பட்டனர். |
| | ,, | 21 லக்ஷ்மணபுரி பிரிட்டிஷ் வசம். |
| | ,, | 22 அஸம்கார்ரை குன்வார்சிங் கைப்பற்றினார். |
| | ஏப்ரல் | 1 தோபியை பிரிட்டிஷார் முறியடித்தனர். |
| | ,, | 3-5 ஜான்ஸி கோட்டை முற்றுகை. கோட்டை வீழ்ச்சி. இரண்டாவது தடவையாக அஸம்காரில் பிரிட்டிஷ் தோல்வி, |
| | மே | 6 பரீல்லியை பிரிட்டிஷார் கைப்பற்றினர். |
| | ,, | 11 ஷாஜஹான்பூர் முற்றுகை. |
| | ,, | 24 கல்பி பிரிட்டிஷ் வசம். |
| | ஜுன் | 1 குவாலியரைக் கைப்பற்றி, நானாசாகிப் பேஷ்வாவாகப் பிரகடனம் செய்து கொண்டார். |
| | ,, | 17 குவாலியர்மீது பிரிட்டிஷ் முற்றுகை. லக்ஷ்மிபாய் வீர மரணம். தோபி தப்பி ஓடினார். |
| | ,, | 20 குவாலியர் பிரிட்டிஷ் வசம். |
| | ஆகஸ் | 14 தோபியின் தோல்வி. |
| 1859. | ஏப் | 18 தாந்தியா தோபி தூக்கிலிடப்பட்டார். |

"நந்தலால்" பேட்டி

# கேரள முதல் மந்திரி நம்பூத்ரிபாத்

போட்டோ : சந்தாமியான்

தேர்தல் முடிந்து ராஜ்யங்களில் சர்க்கார்கள் அமைந்தபோது இந்தியாவிலுள்ளவர்கள் மட்டுமின்றி, உலகின் இதரபாகங்களிலுமுள்ளவர்களின் கவனமெல்லாம் பாரத நாட்டின் மிகச்சிறு ராஜ்யமான கேரளாவின் பேரிலேயே இருந்தது. காரணம் பலாத்காரம், புரட்சி இவைகளில் பெரு நம்பிக்கை கொண்டுள்ள கம்யூனிஸ்டுகட்சி, ஆட்சியில் அமர்ந்து ஜனநாயகரீதியில் மக்களுக்கு நன்மை செய்யும் வாய்ப்பைப்பெற்றிருப்பது தான். கம்யூனிஸ்டு கட்சியைக் கண்டு யாரும் கதிகலங்க வேண்டாம் என்பதை கேரளம் ரூபித்து விடும் எனத் தெரிகிறது.




...'மைக்'கில் பேசுகிறார்...

இப்படி உலக கவனத்தையே கவர்ந்த சர்க்காரின் முதல் மந்திரி சென்னை வரும்போது அவரை எப்படியும் சந்தித்து எழுதவேண்டும் என்ற ஆவல் எழுவது சகஜந்தானே!

இதற்காக முன்கூட்டியே 'ஜனசக்தி' காரியாலய நண்பர்கள் சிலருடைய உதவியை நாடினேன். ஆனால், இதற்கெல் அவசியமில்லைஎன்பது பின்னர் தான் தெரிந்தது.

ஸ்ரீ ஈ. எம். எஸ். சங்கரன் நம்பூத்ரிபாத் (ஆதிசங்கரரின் திருநாமமும் இதுவே தான்) புதுடில்லியிலிருந்து விமானம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறார் என்பதை அறிந்து, அவர் தங்கவிருந்த விருந்தினர் விடுதிக்குப்போய்ச்



இரு ராஜ்ய முதல் மந்திரிகள் சந்திப்பு

வில்லை. அவரை எப்படியும் பார்த்து நான்கு வார்த்தைகள் பேசி விடுவதென்ற ஒரே திட்டத்துடன் கேரள சமாஜத்திற்கு ஓடினேன். அங்கு ஏராளக் கூட்டம். ஈ. எம். — எஸ். இன்னும் வரவில்லை. நகரிலுள்ள மலையாளப் பிரமுகர்கள் ஒருவர் விடாமல் பிரசன்னமாகி இருந்தனர். கேரள முதல் மந்திரி வந்ததும் அவர்களை கேரள யுவதிகள் தீபாரத்தி கொண்டு வரவேற்றதும் கேரள பிரதாபத்தைப் பற்றிப் பாடியதும் கண்ணுக்கும் காதுக்கும் விருந்து. இந்தக் கூட்டத்திலும் அவரைச்

சேர்ந்தேன். விமானம் இரண்டு மணி நேரம் 'லேட்'.

விமானம் மாலை 4 மணிக்கு வரவேண்டியது. அவர் அன்று 5 மணிக்கு கேரள சமாஜ வரவேற்பிலும் 6 மணிக்கு மெரீனா கூட்டத்திலும் 8 மணிக்கு மலையாளிகள் அளிக்கும் விருந்து ஒன்றிலும் கலந்து கொள்ள வேண்டும். விமானம் 6 மணிக்குதான் வந்தது. அவர் விடுதிக்கு கூட வராமல் நேராக கேரள சமாஜ கூட்டத்திற்குச் சென்று விட்டார். அவ்வளவு பேர்கள் காத்திருக்கும் போது தன் சௌகரியத்தை உத்தேசித்து அவர் விடுதிக்கு வர உத்தேசிக்க



கூட்டத்தில் பேசுகிறார்



சந்திக்க வசதி ஏற்படவில்லை. விருந்தின்போது சில நிமிஷ அவகாசம் கிடைத்தது.

இவர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை மிக நன்றாக உணர்ந்திருக்கிறார். "புது சோதனையில் இறங்கும்போதும், புது ரகப் பிரச்னைகளை சமாளிக்கும்போதும் கஷ்டங்கள் இருப்பது சகஜம்தான்.

அவைகளை நாம் சமாளித்தே யாக வேண்டும்'' என்கிறார் அவர். தன் சர்க்கார் வெற்றி பெற்றால் இந்திய கம்யூனிஸத்திற்கே அது பெரும் புகழை ஏற்படுத்தும், தோல்வி யுற்றால் கட்சியின் எதிர் காலத்திற்கே பேராபத்து! இதைஅவர் நன்கு உணர்ந்திருக்கிறார்.

இவர் 16-வயது வரை வீட்டிலேயே கல்வி கற்றவர். அதன் பின் தான் பள்ளிக்கூடத்தில் காலடி வைத்தார். சிறு வயது முதற் கொண்டே இவர் கவனம் சமூகப் பிரச்னைகளில் ஈடுபட்டது. தன் 10-வது வயதில் இவர் தன்னைப்போன்ற சில சிறுவர்களைக் கூட்டி, 'நம்பூத்ரி யோக க்ஷேமசபை'யை ஆரம்பித்தார். நான்கு வருஷங்கள் கழித்து அதன் காரியதரிசி யானார். 1928-29ல் இந்த ஸ்தாபனத்திலிருந்து புரட்சிகர கருத்துள்ள ஒரு புது பிரிவு முளைத்தது. அதை முன்னின்று நடத்தியவர் ஈ. எம். எஸ். தான். தாங்கள் வைதீகத்தை தீவிரமாக பின்பற்றுபவர்களல்ல என்பதை வெளிப்படுத்த இவரும் இவருடைய நண்பர்கள் சிலரும் பொதுக்கூடத்தில் தங்கள் பூணூல்களை அறுத்துக் கொளுத்தினராம்.

1932-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு மூன்று வருஷ சிறை தண்டனையைப் பெற்றார். சிறையில் ராஜாஜியுடன் இருந்திருக்கிறாராம். ஆனால், ஒரு வருஷம் சிறைவாசம் முடிந்த சிலகாலத்திலேயே இவர் விடுவிக்கப்பட்டார். இவர் காங்கிரஸ் ஸ்தாபனத்தை மலையாளத்தில் பலப்படுத்த மிகபாடுபட்டவர். காங்கிரஸ்-சோஷலிஸ்டுக்கட்சியின் கூட்டுக் காரியதரிசியாக இவர் பணியாற்றியிருக்கிறார். 1940-ல் தான் இவர் கம்யூனிஸ்டு கட்சிக்கு மாறினார்.

1940-ல் கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் 400 மெம்பர்களே இருந்தனர். இன்று மெம்பர்கள் எண்ணிக்கை 25,0(0-க்கும் அதிகமாக இருக்கிறது. இன்று ஈ. எம் எஸ். பொலிட் பீரோவின் மெம்பர் இவர்.

இவர் தலைமறைவாக இருந்து போலீஸ் கையில் சிக்காமல் தப்பியுமிருக்கிறார். கம்யூனிஸ்டு கட்சியிலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகளில் ஒருவர். இவர் நேருவைப் பற்றி மலையாளத்தில் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார்.

கேரளத்தின் பிரச்னைகள் தனிப்பட்ட தன்மை வாய்ந்தவை. அவைகளை தனிப்பட்ட முறையில்தான் பைசல் காண வேண்டும் என்பது இவர் அபிப்பிராயம். இவர் பேசியதில் மத்ய சர்க்காருடன் ஒத்துப் போகும் மனப்பான்மையையே உணர முடிந்தது. மக்களுக்கு எப்படியும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமே முன் நிற்கிறது என்பதை என்னால் நன்கு உணரமுடிந்தது.

கேரள என். ஜி. ஓ. சிப்பந்திகளின் சம்பளத்தைத் திருத்தியமைக்கப் போவதாகவும், ஏழை மக்கள் மீதுள்ள வரி பளுவை குறைக்க வேண்டும் என்பதே தன் எண்ணம் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் கொள்கைகளை வகுப்பதில் ரஷ்யாவின் தயவை எதிர்ப்பார்ப்பதாக கூறப்படுவது முற்றிலும் தவறு என்றும், ரஷ்யர்கள் தங்கள் பிரச்னைகளை எப்படி தீர்த்துக் கொள்கிறார்கள்

என்பதைக் கண்டு தங்களால் வியக்காமல் இருக்க முடிய வில்லை என்றும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என் பதே தங்கள் கட்சியின் ஒரே நோக்கம் என்றும் அவர் தெளிவு படுத்தினர்.

கல்விப் பிரச்னையைக்குறித்து அவர் கூறியதாவது: இங்கு கிராமத்திற்குஒருபள்ளி தாலூக் காவுக்கு ஒரு கல்லூரி என் றிருக்கிறது. படிப்பதற்கான வசதிகள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. அதனால்தான் கேரளத்தில் 90 சத விகிதம் பேர் படித்தவர்கள் இருக்கிறார் கள். புதிதாகச் சேர்ந்துள்ள பாலக்காடு பகுதியில் தான் போதிய பள்ளிக்கூடம் இல்லை. அடுத்த ஆண்டுக்குள் 30 பள்ளி கள் திறக்கத் திட்டமிட்டிருக் கிறோம். சென்னை சர்வ கலா சாலையோடு இணைந்திருந்த சில கல்லூரிகளை திருவனந்தபுரம் சர்வகலாசாலையுடன் இணைத்து கேரள பல்கலைக் கழகமாக்கப் போகிறோம். வேலை யில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க பாலங்கள் கட்டுவது போன்ற வேலைகளை தனி நபர்கள் காண்டிராக்டுக்குவிடாமல்சர்க் கார் மராமத்து இலாக்காவே எடுத்து வேலைசெய்யத் திட்ட மிட்டுள்ளோம். எங்களிடம் திறமையான என்ஜினீயர்கள் இருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலை தேசிய மயமாக்குவது ஒரு பெரிய விஷயமென்றும், ராஜ்யத்தை விட்டு வெளியேறும் பெரும் லாபங்களை ராஜ்ய நலனுக்கு செலவிட வாய்ப்பு பெறுவதே நோக்கம் என்றும், அயல் நாட் டினரிடமுள்ள தோட்டங்களை நஷ்டஈடு கொடுத்துப் பெற வேண்டியதுதான் என்றும் அவர் கூறினர்.

நமது முதல் மந்திரி மாதிரி இவர் பிரும்மசாரி அல்ல; மண மானவர். நான்கு குழந்தைகள் உண்டு. பெரிய பெண்ணுக்கு வயது 18ஆகிறது. பி. எஸ். ஸி. படித்துக் கொண்டிருக்கிறாள்.

இவர் பேசும்போது மட்டும் திக்குகிறார். இவருடைய எளிய வாழ்க்கை முறையும், இனிய சுபாவமும், யாருக்கும் உதவ வேண்டும் என்கிற ஆர்வமும் அவரை எல்லாரும் புகழ்ந்து போற்றும்படிசெய்திருக்கிறது.


கேரள மந்திரிகள் காலை 9 மணிக்கே காரியாலயத்திற்கு வந்துவிடுகிறார்களாம். வரும் தபால்களுக்கு அது கிடைத்த 24 மணி நேரத்தில் பதில் அனுப் பப்படுகிறதாம். சர்க்கார் நிர் வாகத்தில் இவைகளை அதிசயங் கள் என்று ஆச்சரியப்படாம லிருக்க முடியுமா?

---

## கதை சொல்வது

**கதை சொல்லுவதில் பலவகை உண்டு. ஆண்டவன் அடிமைக்கு கதை சொல்வது ஒன்று, தாய் குழந்தைக்கு கதை சொல்வது இரண்டாவது, நண்பன் நண்பனுக்கு கதை சொல் வது மூன்றாவது காதலி காதலனுக்கு தலையணை மந்திரம் ஓது வது நான்காவது, இவையே வேதம், புராணம், இதிகாசம், காப்பி யம் போன்றவை என்பது பழைய இந்திய இலக்கிய ஆராய்ச்சி.**

**—தெ. பொ. மீனுட்சிசுந்தரம்.**



கவிஞர் லாங்பெலோ

அமெரிக்க விடுதலைப் போராட்டத்தில் பால் ரிவியர் என்பவரை 'அமெரிக்க கட்டபொம்மன்' எனலாம். குதிரையில் ஏறிக்கொண்டு ஊரூராய்ச் சென்று "பிரிட்டிஷ் பட்டாளம் வந்து விட்டது, சண்டைக்குத் தயாராயிருங்கள்"! என்று மக்களைத் தட்டி யெழுப்பித் தைரியம் ஊட்டிய. அவரது சேவையை விவரித்து 'லாங்பெலோ' என்னும் கவிஞர் இயற்றிய கவிதையின் மொழிபெயர்ப்பை இங்கே காணலாம்.

# அமெரிக்க 'கட்டபொம்மன்'

*பிள்ளைகளே ! கேளுங்கள் ! பேசரிய கதையாம் ;*
*நள்ளிரவில் மாவீரன் பால்ரிவியர் என்பான்*
*குதிரைச் சவாரி செய்த கதையான கதையாம் ;*
*ஆயிரத்து எழு நூற்று எழுபத்தி ஐந்தாம்*
*ஆண்டதனில் ஏப்ரலில் பதினெட்டாம் நாளாம் ;*
*பேர் போன நாளதனைக் கண்டார்கள் யாரும்*
*இன்றளவும் உயிரோ டிருப்பார்கள் இல்லை.*

*பால்ரிவியர் நண்பனிடம் பகர்ந்த மொழி கேளீர் :*
*"பட்டாளம் இன்றிரவு பாசறையை விட்டே*
*அணி வகுத்துச் சென்றக்கால் அறிவிக்க வேணும் ;*
*மணி விளங்கும் கோயிலுக்கு மறைவாகச் சென்று*
*மணிக் கூண்டில் ஏறிநின்று பிரிட்டிஷ்பட் டாளம்*
*தரைவழியே போமாகில் ஒருவிளக்கை ஏற்று,*
*கடல்வழியே வருமாகில் இரு விளக்கைக் காட்டு :*
*அக்கரையில் இருப்பேன் உன் அறிவிப்பைக் கண்டே*
*அச்செய்தி நாடறிய அழகான குதிரை*
*தானேறி ஊரூராய் வீடுவீ டாகத்*
*தட்டி யெழுப்பிஇம் மீடில்செக் கெல்லாம்*
*பட்டாளம் வந்துவிட்ட பரிசறியச் சொல்லித்*
*துப்பாக்கி தோள்தாங்கித் துடித்தெழச்சொல் விடுவேன்"*

"போய் வருவேன்" என்று சொல்லிப் புறப்பட்டான் வீரன்;
பூப்போல அக்கரைக்குப் போய்விட்டான்; ஆங்கே
சார்ல்ஸ்டவுன் எனுமந்த ஊர்முற்றுந் தூங்கும்;
சலா அர்ச் சலாரென்று தண்ணீர் அலைப்ப
சாமர்செட் டென்னும் பிரிட்டிசுச் சண்டைக்
கப்பலொன் றங்கே கரையோரம் தூங்கும்
கன்னங் கரேலென்று கரும்பூதம் போல;
நீலக் கடல்மீது நிலாவந் தெழுந்தே
ஆழக் கடல்முழுதும் அள்ளி ஒளி வீசும்.

இக்கரையில் நண்பன் இடுக்கும் முடுக்தும்
ஒக்கவே சுற்றி ஒளிந்துநின்று கேட்பான்;
அரவம்வரும் இடமெல்லாம் அசையாமல் நிற்பான்.
அமைதியாய் ஊர்உறங்கும் அந்தநடு நிசியில்;
பாசறையின் வாசலிலே பலர்கூடும் சத்தம்
ஓசையுடன் துப்பாக்கி உராய்கின்ற சத்தம்
படைவீரர் அடியெடுத்துப் படர்கின்ற சத்தம்
பட்டாளம் கடற்கரைக்குப் படகுகளை நோக்கி
அணிவகுத்துப் புறப்பட்ட அடிவைத்த ஓசை
துணிவுடைய வீரன்தன் செவிகேட்ட தம்மா!
விண்ணுயர நிற்கின்ற பழங்கோயில் கண்டான்;
விரைந்தேகி மணிக்கூண்டின் விலாப்புறத்தே சென்றான்;

கள்ளத் தனமாகக் காலெடுத்து வைத்தான்:
உள்ளே ஒடுங்கி உயரக் கிளம்பும்
பாழடைந்த ஏணிதனில் படிப்படியாய் ஏறி
ஆள்போல மணிதூங்கும் இடம் வந் தடைந்தான்;
ஆளரவம் கேட்டுவிட்ட அழகான புறாக்கள்
தூக்கங் கலைந்தே துவண்டு பறந்து
வானத்தே வட்டமிட்டு நிலாவை மறைக்கும்;
உச்சாணிச் சன்னலுக்கே வந்துவிட்டான் ஐயா;
அச்சமின்றி மூச்சுவிட்டான்; ஆங்கிருந்து கீழே
ஊர்முழுதும் பால்போலும் நிலாசூழ்கக் கண்டான்.
கண்டானே காலடியில் கோபுரத்தின் அப்பால்
குன்றான மேடதனில் குப்பென்று பூத்த
கல்லறைகள் ஏராளம் கண்டானே; நெஞ்சம்
கப்பியது பேரமைதி; தூங்காத காற்று
காவல்புரி கின்ற பல கல்லறையின் தோட்டம்!
நள்ளிரவும் கோபுரமும் நல்லநில வொளியும்
உள்ளத்தை ஒருகணமே மயக்கிவிட்ட தம்மா!
கோபுரத்தில் தனியாக இருப்பதுவும், கீழே

இதற்கிடையில் அக்கரையில் என்னநடப் பென்று
குதிரையுடன் நிற்கின்ற பால்ரிவியர் காண்போம்;
எவ்வளவு நேரமென்றே இங்குமங்கும் நடப்பான்;
எப்பொழுது போவதென்று புரவிதனைம பார்ப்பான்;
குதித்தேறிப் பாய்ந்து செலத் துடித்துக்கொண்டிருப்பான்;
குதிரையினைத் தட்டிக் கொடுப்பான்; அதன்மேல்
இருக்கின்ற சேணத்தை இறுக்கிப் பிணிப்பான்;
பொறுக்காமல் துடிக்கின்ற மிடுக்கான வீரன்
விண்ணினையும் மண்ணினையும் கண்ணால் அளப்பான்;
அக்கரையில் குன்றின்மேல் அழகான நிலவில்
கல்லறையின் தோட்டத்துக் கருகேநின் றோங்கும்
கோயில் கோபுரந்தன்னை மணிக்கூண்டு தன்னை
ஆவல் விழுங்க அடிக்கடி நோக்கி
எப்போது தெரியுமென் றேங்கித் தவிப்பான்;

அப்போது திடீரென்று தோன்றிற்று காணீர்;
விளக்கொளி மணிக்கூண்டில் விளங்கிற்று காணீர்;
கண்கள் தாம் கண்டனவோ கால்கள் தாம் முந்திக்
கொண்டனவோ, குதிரையிலே குதித்தேறி அமர்ந்தான்;
திரும்பவும் மணிக்கூண்டைத் துருவியே பார்த்தான்
எரிகின்ற விளக்கிரண்டு கண்ணுறக் கண்டான்
தெருவெல்லாம் குளம்போசை செவிடுபடுக்கும்;
உருவொன்று நிலவொளியில் விரைந்தேகிப் பாயும்;
வடிவொன்று நிழலூடு பறந்தோடிச் செல்லும்;
அஞ்சாமல் பறக்கின்ற அழகான குதிரை
கால்பட்டுக் கற்களிலே தீப்பொறி பறக்கும்;
குதிரை வீரன் யாரென்று கொள்கின்றீர் ஐயா?
பால்ரிவியர் அல்லன் அவன் பால்ரிவியர் அல்லன்;

நாட்டின் கதிதானே நடுங்காமல் ஆங்கே
விரைவாகச் செய்திசொல விரைகின்ற தம்மா!
குதிரைக் குளம்படியில் கூழாங்கல் தன்னில்
பறக்கின்ற தீப்பொறிதான் பற்றவைத்த தம்மா
உறக்கம் துறந்தார்தம் உள்ளத்தில் வீரம்!
கிராமத்துக் கடிகாரம் பன்னிரண்டு அடிக்கும்;
பாலத்தைக் கடந்தங்கு மெட்போர்டு வந்தான்;
கோழியுங் கூவிற்று; குரைத்தனவே நாய்கள்;
குளிர்ந்தது சில்லென்று மூடுபனி ஆங்கே.
கிராமத்துக் கடிகாரம் ஒன்றென்று சொல்லும்!
லெக்சிங்டன் ஊருக்குள் நுழைந்தான் நம் வீரன்;
காற்றுந் திசைகாட்டி களிப்பாக நிலவில்
மின்னிற்று; ஜெபக்கூடப் வெ ச்சென்று சன்னல்
திறந்தே கிடந்தன நாளைக்கு நேரும்
இரத்தக் களறியை எண்ணியே போலும்!

திறந்தவாய் மூட மறந்தன அம்மா!
கிராமத்துக் கடிகாரம் இரண்டென்று சொல்லும்;
கான்கார்டு நகரத்தின் பாலத்தைக் கண்டான்;
ஆடுகள் கத்திடச் சோலையினூடே
புள்ளினம் கலகலவென்றொலி செய்யத்
தென்றல் மிதந்துவந் தெதிர்கொண்டழைக்கச்
சென்றனன்; ஆங்கொரு வீட்டில் ஒருவன்
பத்திரமாகப் படுத்திருப்பானும்
நாளை அப்பாலத்தில் நடப்பதை அறியான்
ஆளிவன் தானங்கே அனைவர்க்கும் முந்தி
பிரிட்டிசுக் குண்டுக்கே இரையாவான் அந்தோ!

(வேறு)

மேல்நடப்பெல்லாம் நீங்கள் அறிவீர்;
நூல்கள் சொல்லும் வரலாறறிவீர்;
பிரிட்டிஷ் படையினர் சுட்டதும், சுட்டபின்
பட்டதும் ஓட்டம் பிடித்ததும் அறிவீர்;
பயிர்த்தொழில் அன்றிப் படைத்தொழில் அறியா
ஊரார், அவர்களை ஊரில் உள்ள
ஒவ்வோரிடத்தும் ஒளிந்தொளிந்திருந்து
திருப்பித் திருப்பித் தாக்கித் தெருவழி
துரத்தியடித்து வயல்களைக் கடந்து
சாலையின் திருப்பத் தருகே நின்ற
மரங்களின் அடியில் தோன்றி, நில்லாது
சுட்ட வண்ணம் சண்டையிட்டு
வெற்றி கண்ட திறமெலாம் அறிவீர்!

—லாங்பெலோ.

# நேபாளம்


*நம் நாட்டிற்குச் சுற்றுப்புறமுள்ள நாடுகளைப் பற்றியும் அவைகளின் மக்களைப் பற் யும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமில்லையா? இந்த வரிசையில் இந்தியாவின் அண்டை நாடுகளான திபேத், இந்தோனேஷ்யா, இலங்கை ஆகிய நாடுகளைப் பற்றிய வரலாறுகள் வெளியாகியுள்ளன.*

*நேபாளம் அதன் கேந்திர ஸ்தான அமைப்பின் காரணமாக அங்கு என்ன வேண்டுமானாலும் நடந்து விட்டுப் போகட்டும் என்று இந்தியா அலட்சியமாக இருந்துவிடுவதற்கில்லை. அங்கு பசுவையும் ஸ்திரிகளையும் கொன்றவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிச்சயம்!*

இமயமலையின் தென் சரிவில் உத்தரப் பிரதேசத்திற்கும் பீகாருக்கும் வட எல்லையை ஒட்டி அமைந்திருப்பது நேபாளம். இதற்கு வடக்கேயுள்ளது திபேத். கிழக்கு மேற்காக 500 மைல் தூரமுள்ள தேசம் இது. சதுர மைல் 54 ஆயிரம். ஜனத்தொகை 70 லட்சம். தலைநகரான காட்மாண்ட் இந்திய எல்லையிலிருந்து 70 மைல் தூரத்தில் இருக்கிறது.

மகாபாரத யுத்தத்திலே நேபாள மன்னர் பாண்டவர்களுக்கு உதவிபுரிந்ததாக மகாபாரதம் தெரிவிக்கிறது. புத்தர் பிறந்த ஸ்தலம் நேபாளத்தைச் சேர்ந்தது தான். அசோக சக்கரவர்த்தி நேபாளத்திற்கும் விஜயம் செய்ததாக சரித்திரம் அறிவிக்கிறது. சமுத்திரகுப்தன் நேபாளத்தையும் தன் ராஜ்யத்துடன் சேர்த்து ஆண்டு வந்தார்.

நேபாள அரசியல் அமைப்பிலேயே சமீபத்தில்தான் பொதுமக்களுக்கு உரிமைகள்





காட்மாண்டுவில் ஒரு தெரு

தில் சுமார் 3000 கோவில்கள் உண்டு. கூர்க்கர்கள் வீரத்திற்குப் பேர் போனவர்கள் போல மூடபக்திக்கும் பேர் போனவர்கள்.


நேபாளத்திலுள்ள பசுபதி நாதர் கோயிலில் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் போய் வழிபடுவதுண்டு எனினும், சிவராத்திரியன்று மட்டும்தான் ஹிந்து யாத்ரீகர்கள் இங்கு வந்து போக அனுமதிக்கப்படுகின்றனர்.

கிடைத்திருக்கின்றன. நேபாளம் ஏழை நாடு. பணக் கஷ்டமே நேபாளத்தின் பெரும் கஷ்டம். சொற்ப வருமானத்தைக் கொண்டு முன்னேறுவது கஷ்டம்தானே! நிலவரி, சுங்க வரியிலிருந்துதான் வருமானம்.

நேபாள வாசிகள் பெரும்பாலும் வெளி உலகுடன் தொடர்பு இல்லாமலேயே இருந்துவிட்டார்கள். கூர்க்கப் படை வீரர்களில் சுமார் லட்சம் பேர் சென்ற உலக யுத்தத்தில் பல நாடுகளில் போராடிய போதிலும் நேபாளத்திற்குள்ளே வெள்ளைக்காரன் ஒருவனும் அரசாங்கத்தின் விசேஷ அனுமதியின்றி அடி வைக்க முடியாது.

கூர்க்கர்கள் விசேஷ மதப்பற்றுள்ள ஹிந்துக்கள். நேபாளத்

விவசாய அபிவிருத்திக்கும், இயற்கை செல்வங்களின் அபிவிருத்திக்கும் எவ்வளவோ வசதிக்கு நேபாளத்தில் இடமிருக்கிறது. நேபாளத்தில் உணவுப் பஞ்சம் கிடையாது.



ராணி தடாகம்

இந்தியாவுக்கு நேபாளம்அரிசியையும் ஏற்றுமதி செய்கிறது. மேய்ச்சல தரைகள் மைல் கணக்கில் இருக்கின்றன. தொழில் வளத்திற்கேற்ற வசதிகள் இருக்கின்றன. பலவகை உலோகங்கள் கிடைக்கின்றன.

நேபாளத்திலுள்ள பெரும்பான்மையோர் நேவார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆதியில் இந்தியாவிலுள்ள ராஜஸ்தானத்திலிருந்து சென்று குடியேறியவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களில் பெரும்பாலோர் வர்த்தகர்களே. நேபாள நாட்டில் பௌத்தர்களும் உண்டு. நேபாளவாசிகளை



பசுபதிநாத் கோவில்

'நேப்பாளிகள்' என்றேபொதுப்படையாக அழைக்கிறார்கள். சூதாட்டம் இவர்களுடைய மிக இஷ்டமான பொழுது போக்கு.




நேபாளக் குருடன்

'குக்ரி' என்ற ஆயுதத்தை எப்போதும் தரிப்பவர்கள் என்றாலும் கூர்க்கர்கள் மூர்க்கர்கள் அல்ல. நேப்பாளிகள் தற்பெருமை வாய்ந்தவர்கள். அந்நியர் தலையீட்டை அடியோடு வெறுப்பவர்கள்

நேபாள பள்ளத்தாக்காக இன்று உள்ள இடம், ஆதிகாலத்தில் ஒரு மாபெரும் ஏரியாக இருந்ததென்று டாக்டர் ஓல்ட் பீல்ட் எழுதியிருக்கிறார்.

முன்பு இப்பகுதியில் மங்கோலியர்களைச் சேர்ந்தவர்கள்



நேபாள மன்னரின் அரண்மனை

வசித்து வந்தனர். வட இந்திய ராஜபுத்திரர்கள் அவர்களை அடக்கி, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர் அயோத்தி மன்னனான ஹரிசிங் கி. பி 1328-ல் நேபாளத்தை தன் வசப் படுத்தினர், ஆனால், பிருத்வி நாராயணன் என்பவர் தலைமையில் கூர்க்கர்கள்’1860-ல் நேபாளத்தை மீண்டும் கைப்பற்றி விட்டனர்.


1760-ல் நேபாளம் சீனாவின் ஆதிபத்யத்தை அங்கீகரித்த போது நாட்டின் சுதந்திரம் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டது. 1816-ல் பிரிட்டிஷார் காட்மாண்டுவில் தங்கள் ரெஸிடெண்டை நியமித்தார்கள். இந்திய ராஜ்யங்களுக்குச் சமமாக நேபாளம் நடத்தப்பட்டு வந்ததென்பதுடன் நேபாளத்தின் உள்நாட்டு விவகாரங்களிலும் பிரிட்டிஷ் தலையீடு அவ்வப்போது இருந்து வந்தது.

1793-ல் சீனாவுக்கும் நேபாளத்திற்கு மிடையே இருந்த தகராறை சமரஸமாகத் தீர்த்து வைப்பதற்காக கர்னல் கிர்க் பாட்ரிச் தலைமையில் ஒரு தூது கோஷ்டி காட்மாண்டுவுக்கு அனுப்பப்பட்டது. 1839-ல் பிரிட்டனுக்கு விரோதமாக இருந்த நேபாள மந்திரிசபையை ‘டிஸ்மிஸ்’ ஸாகும்படி இந்திய சர்க்கார் செய்தது.


நேபாளம் சீனாவுக்கு கப்பம் கட்டி வந்த போதிலும் உண்மையில் ஒரு சுதந்திர நாடாகவே இருந்து வந்தது.

*1814*-ல் நேபாளத்தின் மீது பிரிட்டன் போரிட்டபோது சீனா நேபாளத்தின் உதவிக்கு வரவில்லை. அப்போது நேபாளம் இந்திய சர்க்காருக்கு முற்றிலும் எதிரியாக இருந்தது.

*1885*-ல் காட்மாண்டுவில் திடீர் புரட்சி ஏற்பட்டது. நேபாளத்தின் பிரதம மந்திரியும் பிரிட்டனின் நண்பனுமான ஜங் பகதூர் கொல்லப்பட்டார். பீர் ஷம்ஷேர் என்பவர் பிரதம மந்திரியானார். சீனாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடு என்பதைக்கருதி இந்திய சர்க்காரின் அயல்நாட்டு இலாக்கா காரியதரிசியான மார்ஷல் ரோண்ட் நேபாள விவகாரத்தில் தலையிடவில்லை. *1387*-ல் ஏற்பட்ட புரட்சி தோல்வியடைந்தது. ராணாக்கள் ஆதிக்கம் சிறுகச்சிறுக ஒழிந்தது.



**புத்த விஹாரம்**



**புத்தர் சிலை**

நேபாளத்தில் நேபாள தேசிய காங்கிரஸ், நேபாள ஜனநாயக காங்கிரஸ், குடியானவர் கட்சி, நேபாள கம்யூனிஸ்டு கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் இருந்து வருகின்றன.

*1950*-ல் நேபாள காங்கிரஸ், ராணாவின் ஆட்சியை ஒழித்துக்



நேபாள மன்னரின் முடிசூட்டு விழாக் காட்சி

கட்ட போராட்டத்தை ஆரம்பித்தது. நேபாள மன்னர் இந்திய ஸ்தானிகராலயத்தில் தஞ்சமடைந்தார். இந்திய சர்க்கார் செய்து வைத்த மத்யஸ்தம் காரணமாக நேபாள காங்கிரஸ் தலைமையில் ஒரு கலப்பு மந்திரி சபை 1951-ல் ஏற்பட்டது. ஆனால், நேபாள காங்கிரஸிலுள்ள இடது சாரியினருக்கு இது பிடிக்கவில்லை. இவர்கள் சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவிரும்பினர். ராணாவுடன் சமரஸம் ஏற்பட்டதை கம்யூனிஸ்டு கட்சியும் எதிர்த்தது.

முன்பெல்லாம் நேபாள வீரர்களுக்கு ரூ. 15 தான் மாத சம்பளம். இவர்கள் சம்பளம் இப்போது ரூ. 60-க்கு உயர்த்தப்பட்டுள்ளதாம். 1951 ஜனவரியில் ஏற்பட்ட கொய்ராலா சர்க்கார் நேரு சர்க்காரின் யோசனையை ஏற்று நிர்வாகத்தை நடத்தலாயினர். நேபாளத்தின் புது மன்னர் சமீபத்தில் முடி சூடினார். இவர் ஆட்சியில் ஜனநாயக முறைக்குப் பூரண அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

காஷ்மீருக்கு அடுத்தபடி நேபாளம் தான் அதிக முக்யத்துவம் பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறது.

நேபாள காங்கிரஸ் கட்சி அரசியல் நிர்ணயசபை அமைவதற்கான தேர்தல் நடைபெற வேண்டும் என்று கோரியிருக்கிறது. நேபாளத்தில் எந்த மாதிரி ஜனநாயகம் அமையும் என்பதை இப்போது சொல்லி விடுவதற்கில்லை. ★

# நாடகத்தமிழ்

பம்மல் சம்பந்த முதலியார்

***தென்மொழிகள் புஸ்தக டிரஸ்டின் ஆதரவில் பதிப்பிக்கப்படவிருக்கும் 'சில பொறுக்கி யெடுக்கப்பட்ட நாடகங்கள்' என்ற புத்தகத்திற்கு பம்மல் சம்பந்த முதலியார் எழுதியுள்ள முன்னுரையே இக்கட்டுரை.***

தமிழில் ஓரங்க நாடகங்கள் சற்றேறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்புதான் வரத்தலைப்பட்டன என்று கூறலாம்.

அங்கம் என்கிற பதமே வடமொழிச் சொல்லாகும். ஆதிகாலம் தொட்டு சமஸ்கிருத நாடகங்கள் எல்லாம் அங்கங்களாகப் பிரிக்கப்பட்டவையாகும். ஐந்து அங்கங்கள் இருந்தால் தான் அவைகளுக்கு நாடகங்கள் என்ற பெயர் அமையும். அதற்கு குறைவாக இருந்தால் ''நாடிகைகள்'' எனப்படும் என்று நாடக இலக்கண நூல்கள் கூறுகின்றன. அன்றியும் ஆதிகாலம் தொட்டு வடமொழியில் ஓரங்க நாடகங்கள் எழுதப்பட்டு வந்தன. இவைகள் பெரும்பாலும் 'பிரகஸனங்கள்'—(நகைச்சுவை ததும்பிய சிறு நாடகங்கள்) ஆகும்.

சில நூற்றுண்டுகளுக்கு முன் ஓலைச்சுவடிகளிலிருந்து பிறகு அச்சிடப்பட்ட தமிழ் சங்கித நாடகங்களில் அங்கம் எனும் பிரிவே இல்லை. உதாரணமாக மார்க்கண்டேயர் நாடகம், இரண்ய நாடகம், திரௌபதி சுயம்வர நாடகம் முதலிய வற்றில் அங்கம் என்ற பிரிவே இல்லை. அவைகளில் நாடகக் கதைகளின் போக்கு ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு மாறுவதாயிருப்பின் கட்டியக்காரன் கூறும் வசனத்தினுலேயே அவ்வாறு மாறுகிறது என்று நாம் அறிதல் வேண்டும். உதாரணமாக 'வீரகுமாரன் தன் தாயிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு திக்கு விஜயம் செய்யப் புறப்படுகிற விதம் காண்க'' என்பதைக் கூறலாம்.

இரவெல்லாம் ஆட வேண்டிய அரிச்சந்திர விலாசம் முதலிய நாடகங்கள் இருக்கச் சிறு ஓரங்க நாடகங்களுக்கு எங்கே இடம் கிடைக்கும்?

எனினும் சில நூற்ருண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம் முதலியவைகளை ஒருவாறு தமிழ் ஓரங்க நாடகங்களாக நாம் கூறலாம். அவை சிறியவை. அன்றியும் ஏறக்குறைய நாடகக் கதையின் நிகழ்ச்சி ஒரே இடத்தில் நடப்பதாகும்.

ஏறக்குறைய அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் அச்சியற்றிய தமிழ் நாடகங்

கள் எல்லாம் வடமொழி நாடகத்தை ஒட்டி அங்கங்களாகப் பிரிக்கப்பட்டவையாகும். அக்காலத்தில் மூன்று நான்கு மணி நேரம் வரையிலாவது ஆகக் கூடிய நாடகங்களுக்குத் தான் இடமிருந்தது.

சமஸ்கிருத நாடகங்களிலுள்ள ஓரங்க நாடகங்களைத் தழுவி சிறு நாடகம் முதலில் வெளிவந்தது. நாற்பது வருடங்களுக்கு முன் வெளிவந்த ''சபாபதி' என்னும் நகைச்சுவை ததும்பிய சிறு நாடகம் என நினைக்கிறேன். அதன் பின்னர் பள்ளிக்கூடங்களின் ஆண்டு விழாக்களிலும், நவராத்திரி முதலிய பண்டிகைகளிலும் ஈடுபடுவதற்காக சில சிறு ஓரங்க நாடகங்கள் வெளிவரலாயின. எனினும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக நமது நாட்டில் கூத்துகள் வழக்கத்திற்கு வந்து அவற்றின் மூலமாகச் சிறு நாடகமாக நடிக்கப்பட்ட பின்னரே தமிழில் ஓரங்க நாடகங்கள் பிரபலமாயின என உறுதியாகக் கூறலாம். தமிழகத்தில் சென்னையிலும் திருச்சிராப்பள்ளியிலும் உள்ள ரேடியோக்கள் மூலமாக வாரத்திற்கு இரண்டு மூன்று புதிய ஓரங்க நாடகங்களாவது வெளியாகின்றன. ரேடியோக்களில் இவ்வாறு சிறு நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன என்பதை அறிந்தவுடன் தமிழறிந்த சிறுவர்களும் சிறுமிகளுங் கூட ஓரங்க நாடகங்களை எழுதுவது மிகவும் சாதாரணமாயிற்று. எனவே தற்காலம் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கணக்கான நாடகங்கள் வெளிவருகின்றன எனக் கூறுவது மிகையன்று.

தற்காலம் வெளிவரும் தமிழ் நாடகங்களில் பெரும்பாலானவை சமூக நாடகங்களாகும். இப்போது தமிழகத்தில் புது மலர்ச்சி ஏற்பட்டுப் பல மாறுதல்கள் தோன்றியுள்ளன. அவைகளைப் பற்றி சமூக நாடகங்களாக எழுதுதல் எளிதன்று. ஐந்தங்கங்கள் அடங்கிய நாடகத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி நன்ருய் விவரித்து எழுதி விடலாம். ஆயினும் அதே விஷயத்தைச் சுருக்கி இரண்டு மூன்று காட்சிகளுக்குள் ஓரங்க நாடகமாக எழுதுவது சுலபமல்ல. சுருங்கச் சொன்னுல் எப்பொழுதும் அரிதேயாகும்.

---

## மொழி பெயர்ப்பு நூல்கள்

பகவத்கீதை அரபு மொழியில் 'அல்பெருனி' என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

திருவாசகத்தை பிரெஞ்சு மொழியில் 'பி.யி.மெல்' என்பவர் மொழிபெயர்த்தார்.


கீதாஞ்சலியைத் தமிழில் ''வி. ஆர். எம். செட்டியார்'' மொழிபெயர்த்திருக்கிருர்.

பாரதத்தை தமிழில் வில்லிபுத்தூரார் மொழிபெயர்த்தார்.

பகவத்கீதையைத் தமிழில் எழுதியவர் ஸ்ரீபட்டனுர்.

திருக்குறள் முழுவதையும் பிரெஞ்சு மொழியில் 'லெமிரேசர்' மொழிபெயர்த்தார்.

புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை முதலியவற்றை ஆங்கிலத்தில் 'போப்பையர்' மொழிபெயர்த்தார்.



தியாகப்பிரம்மம் புகழ்ந்த

# கோவூர்

சு. முத்துசாமி

சென்னை நகருக்கு மிக அருகாமையிலே உள்ள புராதன க்ஷேத்திரங்களில் கோவூர் ஒன்று. கோவூர், குன்றத்தூர் என்று கூறும் பொழுதே தமிழகத்தில் மிகப் புராதனமான ஊர்கள் இவ்விரண்டும் என்று கூறுவது மிகையல்ல.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி இன்றைக்கு 130 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகருக்கு விஜயம் செய்வதற்கு முன்பு சுமார் ஆறு மாதங்கள் வரை தங்கிய புண்ணிய ஸ்தலங்களில் இதுவும் ஒன்று.

கோடம்பாக்கத்தின் வழியே சென்றால் சென்னை நகருக்கு 13½ மைல்களுக்கு அப்பாலுள்ள இந்த க்ஷேத்திரம் தொன்மை வாய்ந்ததென்பதை நிரூபிக்க இங்கு கோவிலுக்கு இருபுறங்களிலும் காணப்படும் சத்திரங்களே ஓர் பெரும் சான்று.

கடவுளின் பெயர் சுந்தரேஸ்வரர்: அம்மனின் பெயர் சௌந்தர்யநாயகி. மூலக் கடவுளை சௌந்தர்ய நாயகர் என்று அழைப்பதும் ஓர் மரபு,

அமைதி நிலவும் கோவூரில், ஜில்லா போர்டு அதிகாரி

களும் ஒரு உயர்தரப் பள்ளியை ஆரம்பித்துள்ளனர். மாணவ மாணவிகள் கோவிலைக் கண்டு உற்சாகம் பெறுவதற்காகப் போலும் இப்பள்ளியும் கோயி லின் எதிர்ப்புறத்தில் இருக் கின்றது.

இற்றைக்கு சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பு கர்னாடக சங்கீதத்திற்கு ஜோதியாக விளங்கிய ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஸ்ரீ கோவூர் சுந்தரேஸ்வர முதலியாரின் அழைப்பின் பேரில் இத்திருத்தலத்தில் ஆறு மாதங்கள் வரை தங்கி, சுந்தரேஸ்வரர் சௌந்தரிய நாயகியின்மீது ஐந்து ரத்னங்களான கிருதிகளை இயற்றினர் அவைகளாவன:

ஈவஸுதா நீ வண்டி தைவமு (ஸஹான), கோரி ஸேவிம்ப ராரே (கரஹரப்ரியா), நம்பி வச்சின (கல்யாணி), சுந்தரேஸ் வருனி (சங்கராபரணம்) சம்போ மஹாதேவ (பந்து வராளி). இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு தியாகப் பிரம்மம் விஜயம் செய்ததற்கு ஒரு கதை உண்டு.

தியாகராஜர் க்ஷேத்திர யாத்திரை செய்யப் புறப்பட்ட பொழுது அவருடைய பிதா ராமப்பிரம்மத்திற்கு நண்பர் காஞ்சியில் உபநிஷத் பிரம்மம் என்ற ஒரு மகான் வசித்திருந்தார். ஸ்ரீ தியாகராஜஸ்வாமியின் சங்கீத ஆற்றலை அறிந்த அந்த மஹான் காஞ்சியில் சின்னாட்கள் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி தங்கி அங்கு பஜனை முதலியவைகள் நடத்த வேண்டுமென்கின்ற அவாவின் பேரில் அவருக்கு ஏற்கனவே ஒரு கடிதம் எழுதியிருந்தார், இக்கடிதம் 1834 எழுதப்பட்டதென்று தெரியவருகின்றது.

இக்கடிதத்தின் முக்கியத்வம் என்னவென்றால், தியாகராஜஸ்வாமியின் பிதாவுக்கு ஸ்ரீ உபநிஷத்பிரம்மம் இக்கடிதம் எழுதும் பொழுது அவருக்கு 100 வயது.

"உன்னுடைய அற்புதமான நிகரற்ற கிருதிகளை நான் கேள்விப்பட்டு உன்னை ஒரு முறை பார்க்க வேண்டுமென்கின்ற அவா என்னிடம் மிகுதி பெற்றுள்ளது. உன்னை பார்க்க என்னால் இயலாது, ஏனெனில் என் வயோதிகம்; 100 வயதிற்குமேல் எனக்கு இப்பொழுது ஆகிவிட்டது. என்னுடைய அழைப்பிற்கு இணங்கி ஒரு முறையாவது காஞ்சிக்கு வந்து என்னுடன் சின்னாட்கள் தங்கி ஸ்ரீ வரதராஜஸ்வாமியின் அருளையும் ஆசியையும் பெறுவாயாக" என்று அவர் எழுதியிருந்தார்.


உபநிஷத்தைத் தெளிவுடன் விளக்கவல்ல இவ்வல்லுநர் 115 ஆண்டுகள் வரை இம்மண்ணுலகத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவர் உபநிஷத்திற்கு எழுதிய சூத்திரங்களை அடையாறு பிரம்ம ஞான சங்கம் பிரசுரித்திருக்கின்றது.

காஞ்சிபுரத்தில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி தங்கிய பொழுது அங்கு அனேக நாட்கள்வரை பஜனை, பூஜை முதலியவைகள் செய்து வந்தார். இவருடைய தெய்வ கானத்தில் ஈடுபட அனேக பிரமுகர்கள் வந்து குவிந்தனர். அவர்களில் ஒருவர் மிக தனவந்தரும்சென்னை ஜமீந்தாரான கோவூர் சுந்தரேச முதலியார். மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். கொடை வள்ளல்; காஞ்சிபுரத்தில் ஸ்ரீதியாகப் பிரம்மத்திற்கு

இவரை ஸ்ரீ உபநிஷத் பிரம்மம் அறிமுகப்படுத்தினர். கோவூர் சுந்தரேசர் அழைப்பின் பேரில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவூரில் ஆறு மாதங்கள் தங்கினர். சென்னைக்கு வந்தார். சென்னையில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவூர் சுந்தரேச முதலியாரின் மாளிகையில் தங்கினர். சுமார் எட்டு நாட்கள் வரை தேவ காந்தாரி ராகத்தை அவர்பாடியதாகச் சொல்லப்படுகிறது.

சென்னையில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி தங்கிய இடம் 4 பந்தர் தெரு, ஜார்ஜ் டவுன். கோவூர் சுந்தரேச முதலியாரின் மாளிகையில் இப்பொழுது வரிசை வரிசையாக கடைகள் இருப்பதைக் காணலாம்.

இன்றும் கோவூரில் ஸ்ரீ தியாகப்பிரும்மம் தங்கிய சத்திரத்தை அக்கோவிலின் அர்ச்சகர் காண்பிக்கின்றார்.,



தியாகையரின் கோவூர் பஞ்சரத்ன கீர்த்தனைகள்

கோவிலைப் புனருத்தாரணம் செய்ய இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்காக ரூ. 1,00,000 செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

கோவிலின் கர்ப்பகிரஹத்தில் உள்ளே ஸ்ரீதியாகராஜ ஸ்வாமியின் கோவூர் பஞ்சரத்னங்களை சுவற்றின்மீது பொதிக்கப்பட்டுள்ள ஒரு சலவைக் கல்லின் மீது பொறிக்கப்பட்டிருக்கின்றது. இக்கிருதிகளில்சில சொற்குற்றங்கள் காணப்படுகின்றன. பொறிப்பதற்கு முன்பே இதை நன்கறிந்த வித்வான்களிடம் ஸாஹித்யத்தை காண்பித்து பின்னர் இது பக்தர்கள் காணும்படிசெவ்வனே அமைந்திருக்கலாம். உதாரணமாக கல்யாணியில் ஸ்ரீ தியாகப்பிரம்மம் அமைத்துள்ள "நம்மி வச்சின" என்ற கிருதியின் சரணத்தின் கடைசி வரியில் "மத பேத வாத ரஹித" என்பதற்கு "பத பேத வாதரஹித" என்று பொறிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த வாக்யத்தின் பொருள்; மத பேதங்களை அறியாத இந்த தியாகராஜனைக் காப்பாற்றுவாயாக! ஸ்ரீ கோவூர் சுந்தரேசா உன்னை நம்பி நான் இங்கு வந்தேன்!"

இதைப் போல ஸஹானாவில் அமைக்கப்பட்டுள்ள "ஈவஸுதா"விலும் காணப்படுகின்றது. ஸஹானா ராகத்தை அழகுபடுத்தியும் நிகரற்ற மனோதர்மத்திற்கு இடம் கொடுக்கும் அபூர்வ கிருதி "ஈவஸுத". கர்னாடக சங்கீதத்தில் இக்கிருதியும் தியாகப்பிரம்மம் இம்மண்ணுலகத்தை விட்டுச் செல்ல

10 நாட்களுக்கு முன்பு இயற்றிய மற்றொரு ஸஹானா கிருதியான ''கிரிபை''யும் ராகபாவம் ததும்பும் மதிப்பிட இயலாத இரத்னங்கள்.


இதை காலஞ் சென்ற சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார் மிகவும் அற்புதமாகப் பாடுவார். அதே பாணியில் மிகுந்த மனோபாவத்துடனும் உணர்ச்சி ததும்பி யாவரையும் பரவசப்படுத்தும் முறையில் இன்று இக்கிருதியை பாடுபவர் ஒருவரே உள்ளார். அவர் அடையாறு கலாக்ஷேத்திரத்தில் விளங்கும் ஒப்புயர்வற்ற ஞான சிகாமணியும், சிறந்த சங்கீத வித்வானும், சங்கீத பூஷணுமான டி. கே. ராமஸ்வாமி அய்யங்கார். இக்கிருதியைப் பாடும் பொழுது தலையில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு ஸ்ரீ வரதாச்சாரியர் தலையாட்டி களிப்புறுவார். ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார் இக்கிருதிக்கு ஒரு தனி மெருகும் ராகபாவம் ததும்பப் பாடி யாவரையும் புறச் செய்வார்.

ஸஹானா ராகத்தைப் பற்றி ஒருவருக்குத் தெரியவேண்டுமென்றால், இக் கிருதியின் ஸ்வரப்பிரஸ்தாரத்தை அறிந்தால் போதும். ஸாஹித்யமும் ஒரு கவிதை. ''ஐயா சுந்தரேசா, இந்த உலகத்தில் உன்னைப் போன்ற பரம கருணாநிதியான தெய்வம் எங்கும் காணவில்லை'' ஸ்ரீ தியாகப்பிரம்மம் கோவூரின் சிறப்பை கிருதியின் அனுபல்லவியில் விளக்குகின்றார்.

கரஹரப்ரியாவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது இரத்தினமான ''கோரிஸேவிம்ப ராரே'' இந்த ராகத்தின் ஒரு லக்ஷ கீதம். ஸ்ரீ செளந்தர்ய நாயகியுடன் வீற்றிருக்கும் சுந்தரேஸ்வரனை ஸேவிக்க வாருங்கள் பக்த கோடிகளே! உங்களுடைய கோரிக்கைகள் ஈடேற வேண்டுமென்றால் என்று தியாகப்பிரம்மம் பக்தர்களை அழைக்கின்றார். இக்கிருதி ஒரு சிறந்த காவியம்.

''ஸம்போ மஹாதேவா', ஸமஸ்கிருதத்தில் கவனம் செய்யப்பட்ட கிருதி சிலர் 'சுந்தரேஸ்வருணி' என்ற பஞ்சரத்ன கீர்த்தனத்தை மதுரை சுந்தரேசுவரர் மீது தியாகப்பிரம்மம் இயற்றியுள்ளார் என்று கருதுகின்றனர். இச்சங்கராபரண கிருதி கோவூர் சுந்தரேசப் பெருமான்மீது தொகுக்கப்பட்ட கிருதி என்பதற்கு ஐயமில்லை.

ஸ்ரீ தியாகராஜர் தங்கியிருந்த கோவூர் சத்திரம்



# சுதந்திரப் போரைத் துவக்கியது தமிழகமே!

எஸ். நடராஜன் பி. ஏ.

*பாரத நாட்டின் சுதந்திரப் போராட்டம் 1857-ல் ஆரம்பமாயிற்றென்று பலர் நினைக்கலாம். ஆனால், சுதந்திரப் போரைத் துவக்கியது தமிழகமே என்பது பலருக்குத் தெரியாது.*

*சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் 1792ல் தெற்கே துவக்கிய பாளையக்காரர் போராட்டம்தான் இந்திய விடுதலைப் போருக்கு வித்தாக இருந்ததென்பது விளங்கும். புதுக்கோட்டை மான்யுவெல், எட்டயாபுரம் மான்யுவெல் இவைகளைப் புரட்டிப் பார்த்தால் இந்திய விடுதலைப் போரில் முதன் முதலில் களபலி ஆனவன் கட்டபொம்மன் என்பதை அறியலாம். கர்னல் வெல்ஷ், கால்டுவெல் போன்ற ஆங்கிலேயர்கள்கூட இந்த உண்மையை ஒளிக்காமல் எழுதி வைத்திருக்கின்றனர்.*

*இந்திய விடுதலைப்போர் துவங்கியது சிவகங்கையில். வெள்ளையர் செருக்கை எதிர்க்க முன் வந்தவர், இதன் அரசரான முத்து வடுகுநாதர்.*

*வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்து வெள்ளையர் கண்களில் விரல்விட்டு ஆட்டி வைத்தவன் வீரபாண்டியக் கட்டபொம்மன். பாரதத்திற்கு பலிதானமான வீரர் வரிசையில் முதல் ஸ்தானம் அவனுக்குத்தான்.*

*1857ம் வருஷம் போராட்டம் ஆரம்பமாவதற்கு 50 வருஷங்களுக்கு முன்பே வேலூர் கோட்டையிலிருந்த ராணுவத்தினர் வீறுகொண்டு எழுந்தனர்.*

*ஆகவே முதல் சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாவை நாம் கொண்டாடும்போது தமிழகத்தின் பெருமையையும் நினைப்போமாக.*

அந்நிய நாட்டினராகிய வெள்ளையர்களை எதிர்த்து நேருக்கு நேர் போர் துவங்கியது தமிழ் மண்ணில்தான் என்று கூறலாம். மறவர் சீமையில் தோன்றியது என்றும் கூறலாம். ஆற்காட்டு முற்றுகைக்குப் பின் ஒரு பொம்மை நவாபை முன் வைத்து, ஆங்கிலேயர் தென்னாட்டில் சுயேச்சாதிகாரம் செலுத்தினர். நவாபினால் கிஸ்தி வசூல் செய்ய முடியவில்லை. தமிழ் நாடு விழித்தெழுந்தது. நவாபு படைகளைப் பயன்படுத்திக் கொண்டு தொண்டைமான் எட்டப்பன் போன்ற அடிமை மன்னரின் ஆட்சிகளையும் சேர்த்துக் கொண்டு வெள்ளையர் கிஸ்தி வசூலிக்க முன்வந்தனர்.

இந்த வெள்ளையர்களை எதிர்க்கும் துணிவை மேற்கொண்டவர் சிவகங்கை அரசரான முத்துவடுகுநாதர். வீரத்திற்காகவே வாழ்ந்தவர். எல்லா



**திப்புசுல்தான்**

வித போர் முறைகளிலும் வல்லவர். பாரதக்கதை மூலம் மக்களிடையே வீரத்தைப் பெருக்கி அவர்களைப் போருக்குப் பழக்கி வைத்திருந்தார். நாட்டை அடிமைப்படுத்தும் அந்நியரை துரியோதனக் கூட்டமாகவும், உரிமைப் போர் புரிபவர்களை பாண்டவ சேனையாகவும் கருதச் செய்தார்.

வரி செலுத்தும்படி கோரி வெள்ளையர் அனுப்பிய கடிதத்தை நான்காக கிழித்து கவரில் ஒட்டி திருப்பி அனுப்பினார் முத்துவடுகுநாதர். அவருக்குப் பின் அரசை நடத்திய அவர் மனைவி வேலுநாச்சியார் வரி கோரும் கடிதத்தை எட்டாகக் கிழித்து அதை வெள்ளையர்களுக்கே திருப்பி அனுப்பி வைத்தாள்.

சிவகங்கையில் மட்டுமின்றி மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி வட்டாரங்களிலும் கும்பினி சூழ்ச்சி வீழ்ச்சியுற்றது. ராமநாதபுரத்தில் வெள்ளையர்களின் அக்கிரமத்தை எதிர்த்து நின்று பலியானவன் சசிவர்ணத் தேவனும் அவன் மனைவி வள்ளியும். சசிவர்ணத்தை கைவேறு கால்வேறு தலைவேறாக வெட்டி எறிந்தனர். இவர்களின் பிள்ளைதான் வெள்ளையர்களுக்குப் பெரும் தலைவலி கொடுத்து வந்த வீரத்தேவன்.

காளையார்கோவில் போரில் வீரமரணம் எய்தினார் வடுகுநாதர். மருது சகோதரர்கள் எவ்வளவோ வீரம் காட்டியும் பீரங்கிகளுக்கு முன் எதுவும் செய்ய முடியவில்லை.

திண்டுக்கல் மலைக்கோட்டை ஓர் போர் கலையரங்கமாக இருந்தது. பகைவர் வெல்ல முடியாத கோட்டையாக இருந்தது. அங்கு ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் முகாம் போட்டிருந்தார்கள். ஆங்கிலேயரை அடியோடு ஒழித்து நாட்டை ஆள வேண்டும் என்பது திப்புவின் திட்டம். காளையார் கோட்டை பகைவர் வசமாகி விட்டவுடன் சின்ன மருது, ஹைதர் அலிக்கு தூது அனுப்பி விட்டான். மருது சகோதரர்கள், வேலு ராணி இவர்கள் மாறுவேடம் பூண்டு திண்டுக்கல் வந்து விட்டனர். இதே சமயம் வீரபாண்டிய கட்டபொம்மனும் அங்கு வந்திருந்தான். மறவர்களுக்கு போர் பயிற்சி அளிக்க திப்பு ஏற்பாடு செய்தான். கட்டபொம்மு பாஞ்சாலக் குறிஞ்சியில் எதிரிகளை எதிர்க்கச் சென்றான். திப்பு ஆற்காட்டை நோக்கியும் ஹைதர் அலி திருவண்ணாமலை

நோக்கியும் படைகளை நடத்திச் சென்றார்கள். வீரத் தேவன் 'பட்லர்' வேஷமிட்டு வெள்ளைக் காரர்களிடமே சேவை செய்வதாக நடித்து உளவு சேகரிக்கலானான்.

ஹைதர்அலி, திப்பு என்றாலே ஆங்கிலேயருக்கு கிலி பிடித்தது. ஆங்கிலேயரை விரட்ட திப்பு சுல்தான் நெப்போலியன் உதவியையும் நாடினான். ஆனால், துரோகக் கும்பல்களின் சதியால் ஆங்கிலேயருக்குதான் வெற்றி கிடைத்து வந்தது. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். உடல்களை திருப்பத்தூரிலும் தலைகளை காளையார்கோவிலிலும் புதைத்தார்கள்.

வியாபாரம் செய்ய வந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற நாடோடி கூட்டத்தை நாடாள விட மறுத்தவன் கட்டபொம்மன். இவனுக்கும் கும்பினியாருக்கும் போர் நடந்த காலம் கி. பி. 1798-99 ஆகும்.

1793-ல் கலெக்டர் ஸ்டீவன் ஸன்பேஷ் கிஸ்தி வசூலிக்க வந்தான். கட்டபொம்மனிடமிருந்து ஒரு கோணி மூட்டையில் கிஸ்தி வந்தது. திறந்து பார்த்தால் அவ்வளவும் கூழாங்கற்கள். மீண்டும் கெடுபிடி செய்த பின்பு ஒரு ஓலையை அனுப்பினான் கட்டபொம்மன். அதில்,

**''வானம் பொழியுது**
**பூமி விளையுது**
**மன்னவன் காணிக்கை**
**எதுக்கடா?''**

எனக்கண்டிருந்தது.

ராமநாதபுரம் கோர்ட்டுக்கு வருமாறு கட்டபொம்மு கேட்கப்பட்டான். அங்கே அவனைக் கைது செய்ய வெள்ளையர்களால் முடியவில்லை. பாஞ்சாலக் குறிஞ்சிக் கோட்டையை தரை மட்டமாக்கியும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

இவன் தம்பி ஊமையன். பெயர் குமாரஸ்வாமி. இவன் தான் அடுத்தபடியாக எதிர்ப்பு முன்னணியை நடத்தியவன். ஒட்டப்பிடாரத்தில் ஊமையனை வெள்ளையர்கள் பிடித்து விட்டனர். பலத்த காவலில் இருந்தும் எப்படியோ ஊமையன் தன் திட்டங்களை வெளியிலுள்ள தன் ஆட்களுக்கு அனுப்பிக் கொண்டு தான் வந்தான். அவனுடைய ஆட்கள் பெரிய நாடகமே நடத்தி அவனை விடுவித்து விட்டனர். தரை மட்டமாக்கப்பட்ட பாஞ்சாலக்குறிஞ்சிக் கோட்டை மீண்டும் கட்டப்



**கட்டபொம்மன்**



*வேலுத்தம்பி*

பட்டு அங்கிருந்து பீரங்கிகள் சுடப்படுவது கண்டு திக்குமுக்காடிப் போயினர் வெள்ளையர். *1801*ல் பாஞ்சாலக்குறிஞ்சியை அணுகின வெள்ளையர் சேனையை நிர்தூளியாக்கினான் ஊமையன். பிடிபடாமல் அடிக்கடி டிமிக்கி கொடுத்த ஊமையனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூ. *5000* பரிசு என்றும் அறிவிக்கப்பட்டது. சிந்துப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு துரோகி காட்டி கொடுத்ததின் பேரில் ஊமையன் பிடிபட்டான். காட்டிக் கொடுத்தவன் பெயர் காதர் சாயபு. "முருகா, நாட்டைக் காப்பாற்று" என்று சொல்லிக் கொண்டே ஊமையன் தூக்குமேடையில் ஏறினான்.

*1857* முதல் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன் *50* வருஷங்களுக்குமுன்பே வேலூரில் புரட்சி எழுந்தது. இதை ஒரு ஒத்திகை என்றும் கூறலாம்.

*1806*ல் ஜூலை *10*-ம் தேதியன்று வேலூரிலிருந்த ராணுவம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் புரட்சியிலிறங்கியது. இந்தியத் துருப்புகள் சில தேசபக்த மனப்பான்மை கொண்ட சமஸ்தானாதிபதிகள் உதவியையும் பொதுமக்களின் உதவியையும் பெற்று இப்போராட்டத்தை துவக்கலாயினர். பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள் என்னதான் சொன்னாலும் இந்தப் புரட்சி மிக ஏற்பாட்டுடன் திட்டம் போட்டு செய்யப்பட்டது என்பது என்னவோ உண்மை.


புரட்சி செய்தவர்கள் பக்கிரிகள் மாதிரி உடை அணிந்து ரகசிய உத்திரவுகளைப் பரப்பினர். ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இருதரப்பினரும் முனைந்து இதில் ஈடுபட்டனர். ஒரு நூற்றாண்டு கழித்து ஏற்பட்ட பிரிட்டிஷ் இந்திய கடற்படை ஸ்டிரைக்கிற்கும் இந்திய தேசிய ராணுவம் ஏற்படவும் வேலூர்தான் அஸ்திவாரமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

முதன் முதலில் புரட்சியில் இறங்கிய காரணத்தினாலோ என்னமோ *1857* சுதந்திரப் போராட்டத்தின் போது தமிழ் நாடு வீறுகொண்டு எழவில்லை.

இவர்களைத் தட்டி எழுப்ப நானா சாஹிப் சென்னை சுவர்களில் புரட்சி உற்சாகத்தை மூட்டும் சுவரொட்டிகளையும் ஒட்ட ஏற்பாடு செய்தாராம்.

தமிழ் நாட்டில் வெள்ளையர்களுக்கெதிராக கலகம் எழுந்தது போலவே கேரளத்திலும் புரட்சிகள் உருவாயின. திருவாங்கூர் கொச்சியை சேர்ந்தவர்களை 1808-ல் புரட்சித் தீயில் குதிக்கச் செய்தவர் வேலுத் தம்பி. 1805-ல் திருவாங்கூர் மகாராஜாவை ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி கும்பினிக்காரர்கள் வற்புறுத்தினர். இதை திவானாக இருந்த வேலுத் தம்பி ஆட்சேபித்தார். ரெஸிடெண்ட் கர்னல் மெகாலேக்கு கோபம் வந்துவிட்டது. வேலுத் தம்பியை உடனே வேலையிலிருந்து நீக்கி, பென்ஷன் கொடுத்து அனுப்பி விட வேண்டும் என்று ரெஸிடெண்ட் கெடுபிடி செய்தான். இதற்கு சம்மதிப்பது போல இணங்கி ரெஸிடெண்டையே தீர்த்துக்கட்ட ஏற்பாடு செய்து விட்டார் வேலுத் தம்பி. துரதிருஷ்டவசமாக இந்த ஏற்பாடு திட்டம் போட்டபடி நடைபெறவில்லை. ரெஸிடெண்ட் தப்பி ஓடிவிட்டான். வேலுத் தம்பியை பிடித்துப் பழி வாங்க படைகள் நாலாபுறமும் அனுப்பப்பட்டன. கிளிமானூர் பகவதி கோயிலில் அம்மன் சன்னதியில் கத்தியை நாட்டி, அதில் பாய்ந்து உயிரை விட்டான் வேலுத் தம்பி.

வெள்ளையர்கள் ஆதிக்கத்தை மிக ஆரம்பத்திலேயே எதிர்த்தவன் கேரளவர்மன் என்கிற அரசனாகும். இவனும் துரோகியால் காட்டிக் கொடுக்கப்படும் தருவாயில் வைரத்தை உடைத்துத் தின்று மாண்டான். தலைச்சேரியிலிருந்து குடகு செல்லும் பாதையில் கேரளவர்மன் அரண்மனை ஒரு காலத்தில் இருந்தது.




வேலூர் கோட்டை—இங்குதான் 'முதல் புரட்சி' தோன்றியது

இம்மாதிரி இன்னும் எவ்வளவோ பேர்கள் அந்நிய ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதில் உயிர், உடல், உடமை எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கிறார்கள். இவர்கள் ஆத்மா சாந்திபெற நாம் பிரார்த்திப்போம்.

---

### வீரர் குலத் தெய்வம்

**பாஞ்சாலக்குறிஞ்சியில்துவங்கிய இந்திய விடுதலைப் போரில் வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கும் அவனது கம்பள சாதி வீரர்களுக்கும், ஆவேசமளிக்கும் சக்தியாக விளங்கியது வீரஜக்கம்மா தேவி என்ற தெய்வமாகும். பாஞ்சாலக்குறிஞ்சியில் ஆங்கிலேயரால் அழிக்கப்பட்டுவிட்ட பழைய அரண்மனை இருந்த இடத்தில், கட்டபொம்மன் மரபினர் ஜக்கம்மா தேவியின் கோயிலை நிர்மாணித்து, கடந்த திங்களில் கும்பாபிஷேகமும் நடத்தியுள்ளனர்.**




மரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி மண்டபம்.

# மனிதகுலம் ஒன்றே

மனித குலம் ஒன்றே என்பதை விரிவாகச் சித்தரிக்கும் "மானிடர் குடும்பம்" என்ற சித்திரக் காட்சி மரினாவில் நடைபெற்று வருகிறது. இதில் தத்ரூபமான புகைப்படங்கள் அடங்கியுள்ளன.

நியூயார்க் நகரிலுள்ள நவீனக் கலை மியூஸியத்துக்காக அமெரிக்கப் புகைப்பட நிபுணர்களில் தலைவரான எட்வர்ட் ஸ்டைக்கன் என்பவரால் தயாரிக்கப்பட்டுள்ள, 68 நாட்டு படங்கள் இக் கண்காட்சியில் உள்ளன. உலகமெங்குமிருந்து வந்த20 லக்ஷத்துக்குஅதிகமான படங்களிலிருந்து இப்படங்களைத் தேர்ந்தெடுக்க சுமார் மூன்று ஆண்டுகளாயின.

இக் கண்காட்சியைப் பற்றி மிஸ்டர் ஸ்டைக்கன் கூறுவதாவது, "காதலர்கள் சந்தித்துப் பிரியும் படங்களை நாம் காண்கிறோம். பிரான்ஸில் குழந்தையின் ஊஞ்சலில் சந்தோஷமாக புன்முறுவலுடன் இருக்கும்மணப் பெண்; பழங்கால கல்யாண வழக்கப்படி மணமகனால் முதன் முதலாக கண்ணாடியில் பார்க்கப்படும் பெண் ஆகியோரின் படங்களை நாம் காண்கிறோம். ஒரு டச்சு மாது தனது குழந்தைக்குப் பால் கொடுப்பது,

ஜெர்மனி, இந்தியா, தென் ஆப்பிரிக்காவில் குழந்தைகள் முதன் முதலாகப் படிப்பதைக் காட்டும் படங்களும் இதில் இருக்கின்றன.

மனிதனின் நோக்கங்கள், விருப்பங்கள், நம்பிக்கைகள். அவன் நேசிப்பவை, குறைகள், மகத்துவம், கொடூரம், இரக்கம், எங்கு தங்குவதாக இருந்தாலும் எத்தகைய மொழி பேசுவதாக இருந்தாலும், எத்தகைய உடை அணிவதாக இருந்தாலும் தன் கூட்டாளிகளுடன் அவன் காட்டும் உறவு—ஆகியவை அனைத்தும் அவர்களால் புகைப்படங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.



ஸ்டைக்கன்

''மானிடர் குடும்பம்'' என்ற கண்காட்சி மனித அந்தஸ்து, அவனுடைய உணர்ச்சிகள், மனித குடும்பத்தில் ஒருவராக இருப்பதற்கு அவனுடைய அவசியம் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. முதலாவது பிரிவு இளம் காதலர்களைப் பற்றியது. இந்தக் காதல் கலியாணமாக மாறி, இதனைத் தொடர்ந்து கர்ப்பம், குழந்தை பிறப்பு, தாய்மை முதலிய ஏற்படுகின்றன. பிறகு குழந்தை வளரத்தொடங்கி விளையாடவும் படிக்கவும் தொடங்குகிறது. படிப்படியாக மானிடர் குடும்பத்திலும் லயித்து விடுகிறது. வாழ்க்கையுடன் மாற்ற முடியாமல் பிணைக்கப்பட்டுள்ள கஷ்டங்களையும் வருத்தங்களையும் அவன் அனுபவிக்கிறான்.

ஸ்டைகனுக்கு தற்பொழுது 77 வயது. இந் நூற்றுண்டுத் தொடக்கம் முதல் மிகப் பிரபலமான புகைப்பட நிபுணர் என இவர் பிரசித்தி பெற்றவர். புகைப் படத்தை ஒரு கலை அளவுக்கு உயர்த்திய பெருமை இவருக்குண்டு.

1955 ஆரம்பத்தில் நவீனக் கலை மியூஸியத்தில் ''மானிடர் குடும்பம்'' புகைப்படக் காட்சி நடைபெற்றது.

சென்னையில் மரீனு கடற்கரைக்கு அருகில் 10,060 சதுர அடி அளவில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக மண்டபத்தில் இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்படும் ''ஜியோடெஸிக்'' மண்டபம் அமெரிக்க கட்டட நிபுணரான பக்மின்ஸ்டர் புல்லர் என்பவரின் சிருஷ்டியாகும். இம் மண்டபத்துக்கு உள்பாகத்தில் தூண் போன்ற ஆதரவு ஒன்றும் கிடையாது. 400 அலுமினியம் குழாய்களாலும் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டுள்ளதும் மழை, தீ பாதிக்காததுமான பிளாஸ்டிக் தகடாலும் நான்கு நாட்களில் இது அமைக்கப்பட்டதாகும். ★



# திருவள்ளுவர் வரலாறு

தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனார், திருமயிலையில் பகவான் என்பாருக்கும் ஆதி யென்பாளுக்கும் புதல்வராய்த் தோன்றி வள்ளுவர் மனையில் வளர்ந்து வந்தவரென்று கூறுவர். ஆதலால் வள்ளுவர் என்பது குலம்பற்றி வந்த பெயர் என்பர். இவர் நெசவுத் தொழிலைக் கொண்டு வாசுகி என்னும் வேளாளப் பெண்மணியை மணந்து இனிதே இல்லறம் நடந்தி வந்தனர். இவரது நண்பர்களும் மாணவர்களும் விரும்பியதற்கிணங்க, உலகோபகாரமாக வேதத்தில் கருத்துக்களைத் திரட்டி, மக்கள் அடைவதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் முன் மூன்றைப் பற்றித் திருக்குறள் என்னும் நீதிநூலை இயற்றி, மதுரைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றினர். ஔவை, இடைக்காடர், நக்கீரர், கபிலர். பரணர் முதலியோர் இவரது காலத்தில் வாழ்ந்தவர்கள்.

'திருக்குறள்'-பெருமை பொருந்திய குறள் வெண்பாக்களினாலாகிய நூல் என்பது பொருள். டாக்டர் போப்பையர் அவர்கள் ஆங்கிலத்தில் இந்நூலை மொழி பெயர்த்திருப்பதனாலும், இதனை எம்மதத்தினரும் வேறுபாடின்றிக் கொள்கின்றமையாலும் இந்நூலின் சிறப்பு நன்கு விளங்கும்.

சமீபத்தில் வள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டதை யொட்டி அவரது 'பொய்யாமொழிகள்' சிலவற்றை இங்கு பிரசுரித்துள்ளோம்.

# வள்ளுவர் வாக்கு

### அருளுடைமை

உடைமைகளிலெல்லாம் சிறந்த உடைமை அருளுடமை; வெறும் பண உடைமை தீயவர்களிடத்திலும் உண்டு.

### அறிவுடைமை

அறிவுடையவர்கள் மற்ற எது இல்லாவிட்டாலும் எல்லாம் உள்ளவராவர். அறிவில்லாதவர்கள் மற்ற எது இருந்தாலும் ஒன்றும் இல்லாதவரேயாவர்.

### இன்னு செய்யாமை

சிறப்புக்களெல்லாம் உண்டாக்கக்கூடிய மிகப் பெரிய செல்வம் கிடைப்பதானாலும் அதற்காகவும் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருப்பது குற்றமற்றவர்களுடைய கொள்கை.

### ஒழுக்கமுடைமை

ஒருவனுக்கு மேன்மை யுண்டாக்குவது நல்ல நடத்தைதான். அதனுல் நல்ல நடத்தையை உயிரைவிடச் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும்.

### சான்ருண்மை

குணச்சிறப்பே சான்ருேர்களுடைய செல்வம்; மற்றச் செல்வங்களை அவர்கள் எந்தச் சிறப்போடும் சேர்க்கமாட்டார்கள்.

### நடுவு நிலைமை

துலாக்கோல்போல் நேர்மை கோணுமல் வழக்கைச் சீர்தூக்கி ஒரு பக்கத்திலும் சாய்ந்துவிடாமல் இருப்பதுதான் மேலான குணமுள்ளவர்களின் சிறப்பு.

### பண்புடைமை

அளவளாவி மகிழும் பண்புடைமை இல்லாதவனிடத்திலுள்ள பெருஞ்செல்வம் நல்ல பாலை அசுத்தமான பாத்திரத்தில் ஊற்றிவைத்துக் கெட்டுப் போவதுபோல் யாருக்கும் பயன்படாது.

### பெருமை

உண்மையாகவே பெருந்தன்மையான மனமுள்ளவன் யாரிடத்திலும் பணிவாக நடந்துகொள்வான் போலும். பெருமையுள்ள சிறு மனம் படைத்தவன் எப்போதும் தன்னைத்தானே புகழ்ந்து மாலை சூட்டிக்கொள்வான்.

### மெய்யுணர்தல்

எந்தப் பொருள் எப்படி நமக்குக் காணப்படினும் அந்தப் பொருளில் எந்தப் பகுதி அழிவில்லாமல் என்றும் இருக்கும் என்று கண்டறிவதே மெய்ப்பொருளை ஆராயும் அறிவு.

### வாய்மை

உடலின் வெளிப்புறத்தைத் தண்ணீரால் சுத்தப்படுத்தலாம்; ஆனுல் உடலின் உட்புறமாகிய உள்ளத்தை வாய்மை-உண்மை பேசுவது தான் சுத்தப்படுத்தும்.

# இன்புளுயன்ஸா

ஆர். கணபதி சுப்பிரமணியம்

சென்ற ஒரு மாதமாக 'இன்புளுயன்ஸா' என்ற விஷ ஜுரம் புகாத வீடுகள் இல்லை. சென்ற 1919-ல் இப்போதுள்ளதைப் போல இன்புளுயன்ஸா விஷஜுரம் பரவியதென்றும் அதற்கு ஏராளமானவர்கள் பலியானார்கள் என்றும் தெரிகிறது. சமீபத்தில் பரவிய ஜுரம் அவ்வளவு கடுமையானதல்லவாம்.

இந்தக் காய்ச்சலுக்கு காரணமாக இருப்பவை ஒருவித வைரஸ் அணுக்கள். இவை பல வகைப்படும். இவை மனிதர்களை மட்டுமின்றி, விலங்கு, பறவைகளையும் தாவரங்களையும் கூட பாதிக்கின்றன. ஒரு குண்டூசியின் தலையளவில் 10 லட்சம் வைரஸ் அணுக்களை வைக்கலாமாம்.

1898-ல் லீப்ளர் என்ற விஞ்ஞானி இம்மாதிரி வைரஸ் இருப்பதைக் கண்டுபிடித்தார். இன்புளுயன்ஸா ஜுரம் பற்றிய முழு விவரங்களை வெளியிட்டவர் ஒயிட்ஸ்கி என்பவர்தான்.

இந்த ஜுரம் வந்தால் அதுவாக இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு போகவேண்டியதுதான். வியாதியின் கடுமையைக் குறைக்க மருந்து உண்டே ஒழிய, வியாதியை குணப்படுத்த மருந்து இல்லையாம்.

இந்த விஷஜுரம் முதன்முதலில் ஜப்பானில்தான் ஆரம்பித்ததாம். ஆசிய நாடுகள் பலவற்றில் இது பரவி சிங்கப்பூரிலிருந்து இங்கு வந்திருக்கிறது. எஸ். எஸ். ரஜூலா என்ற கப்பலில் வந்தவர்களுக்கு ஜுரம் கண்டிருந்ததாம். கப்பலை நடுக்கடலிலிருந்து திருப்பி விடாமல் நம்மவர்கள் அதை வரவேற்றார்கள்! இந்தக்காய்ச்சலினால் எங்கும் இருமல், முக்கல் முனகல், தொழிற்சாலைகளில் பாதிப்பேர்களுக்கு மேல் ஆட்கள் வரவில்லை. டாக்டர்கள் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறார்கள். எவ்வளவு பேர்களைத்தான்

இன்புளுயன்ஸா ஜுரம் ஏற்படுத்தும் கிருமிகளைத் தனியாக பிரித்தெடுப்பதில் குன்னூரிலுள்ள ஆராய்ச்சி நிலையம் வெற்றி பெற்றுள்ளதாக இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர். இவ்விதம் தனியாகப் பிரிக்கப்பட்ட ப்ளு கிருமிகளிலிருந்து ஊசி மருந்து தயாரிப்பதற்கு முதலிடம் தருமாறு குன்னூர் பாஸ்டர் இன்ஸ்டிடியூட்டை சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஆஸ்திரேலிய விஞ்ஞானிகளும் இன்புளுயன்ஸாவை சமாளிக்க ஒரு புது ஊசி மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அவர்கள் பார்த்து மருந்து கொடுக்க முடியும்!

இந்த ஜுரம் முதல் உலக யுத்தத்தின் போது அமெரிக்காவில் தோன்றியது. இதனல் ஏராளமானவர் மாண்டனர். மெக்ஸிகோ, கனடாவுக்குப் பரவிய பின் ஆப்ரிக்காவிலும் பரவியது. உலகமெங்கும் பரவி 2 கோடி மக்களின் உயிரைக் கவர்ந்தது.

இந்த ஜுரத்தின் காரணத்தையே அப்போது கண்டுபிடிக்க முடியவில்லை. ஜெர்மானியர் விஷக்கிருமிகளைப் பரப்பிவிட்டிருக்கலாம் என்ற கருத்து இருந்தது. ஆனல், ஜெர்மனியிலும் இந்த விஷஜுரம் பரவியிருந்ததால் இந்தக் காரணம் அடிபட்டுப் போயிற்று.

இந்த ஜுரம் வந்தால் மூன்று நாட்களே இருப்பதால் இதற்கு மூன்று நாள் ஜுரம் என்றே பெயர் இருந்து வந்தது. ஏற்கனவே லேசாக நோய் வந்து குணமடைந்தவர்களை இந்த நோயின் கடுமை பாதிக்கவில்லை. அமெரிக்காவெங்கும் நாடகக் கொட்டகைகள் பள்ளிகள், மாதாகோவில்கள் எல்லாம் மூடப்பட்டன.

இந்தச் சமயத்தில் இந்த ஜுரத்தைத் தடுக்க அமெரிக்கர்கள் முகமூடியை உபயோகிக்கலாயினர். யாரைப் பார்த்தாலும் முகமூடிதான். முத்தமிடவேண்டும் என்றால்கூட கைகுட்டையின் மூலம்தான் முத்தம் கொடுக்கப்பட்டது. இரண்டு உலக மகா யுத்தங்களில் இறந்தவர்களைக் காட்டிலும் இந்த ஜுரத்தால் இறந்தவர் அதிகம் பேர்.

1919-ல் இந்த ஜுரம் சென்னையில் பரவியபோது சோடா குடித்தால் நல்லது என்று டாக்டர்கள் சொன்னதால் சோடா பஞ்சம் ஏற்பட்டது. சுகாதார முறைகளைக் கூடுமானவரை அனுஷ்டிப்பதால் இந்த நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

காய்ச்சின தண்ணீரையே குடிப்பது, நெரிசலான இடங்களைத் தவிர்ப்பது இவைகளைப் பின்பற்றினல் போதும். ஊசி தடுப்பு மருந்து ஆகஸ்டில்தான் கிடைக்கும். அதற்குள் இந்த ஜுரமே இந்தியாவை விட்டு தொலையும் என்று எதிர் பார்ப்போம். ★

இன்புளுயன்ஸாவின் அடுத்த படையெடுப்பை எதிர்பார்க்கலாம் என்றும் ஜப்பானில் ஏற்பட்ட சோதனைகளிலிருந்து இது கடுமையாக இருக்கலாம் என்றும் எச்சரித்து இந்திய சர்க்கார் சுகாதார டைரக்டர் ஜெனரல் ராஜ்யங்களின் சுகாதார அதிகாரிகளுக்கு கடிதமெழுதியிருக்கிறர்.

(பத்திரிகைச் செய்தி 23-6-57)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# ஸ்ரீரங்கபட்டினம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அரங்கநாதர் பள்ளிகொண்டுள்ள மூன்று திருவரங்கங்களில் ஒன்றான ஸ்ரீரங்கபட்டினம் புனிதமான க்ஷேத்திரம் என்பதுடன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமுமாகும்.

மைசூரிலிருந்து பெங்களூர் செல்லும் பாதையில் காவேரி நதியின் நடுவே ஒரு அழகிய தீவாக விளங்குகிறது இப் பட்டினம்.

விஜயநகர மன்னரின் வைஸ்ராயின் இருப்பிடமாக சில காலம் இருந்திருக்கிறது ஸ்ரீ ரங்கபட்டினம். மைசூர் ராஜாக்கள் இதைக் கைப்பற்றி விஜயநகர சாம்ராஜ்யத்தின் வைஸ்ராய்களாக சில காலம் இருந்து வந்தனர். சிக்க தேவராஜா என்பவரின் கீழ் மைசூர் மொகலாய சக்கிரவர்த்தி அவுரங்கசீப்புடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது.

மராட்டியர்களின் தொந்திரவு தாங்க முடியாமல் மைசூர் ராஜா, ஹைதர் அலியின் உதவியை நாடினார்.


ஹைதர் அலியும் திப்புசுல்தானும் இங்குதான் 1799 வரை தங்கள் தலைமை ஸ்தாபனத்தை நிலை நிறுத்தியிருந்தனர். திப்பு சுல்தான் இறந்த பின்னர் அவனுடைய பெற்றோர்கள் புதையுண்ட இடத்திலேயே புதைக்கப்பட்டு சமாதியும் கட்டப்பட்டிருக்கிறது. கோட்டையும் கொத்தளமும் அரண்மனையும் ஆலயமும் ஸ்ரீரங்கபட்டினத்தின் பழைய சிறப்பை இன்னும் எடுத்து விளக்கி நிற்கிறது. ஸ்ரீரங்கநாதரை திப்புசுல்தானே வணங்கி பிரார்த்திப்பதுண்டு என்றும் சொல்கிறார்கள். திப்புவின் கோட்டை அரண்மனையான தரியா தௌலத்தில் எவ்வளவோ கலைச்செல்வங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீரங்கபட்டினம் 17, 18 வது நூற்றாண்டுகளில் மைசூரின் தலைநகரமாகவே இருந்திருக்கிறது.

ஸ்ரீ ரங்கபட்டினத்தைக் கண்டு அந்நியர் நடு நடுங்கிய காலம் உண்டு. சுதந்திரப் போர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இந்தச் சமயத்தில் திப்புவை நாம் மறந்து விடலாமா?

---

**ஸ்ரீ ரங்கபட்டின முற்றுகை**


**1799 மே 4உ யன்று பிற்பகல் 12 மணிக்கு ஆங்கிலேயர்கள் திடீரென்று ஸ்ரீரங்கபட்டினத்தை தாக்கினர். அப்போது திப்பு உணவருந்திக் கொண்டிருந்தான். நிலைமை மிஞ்சிவிடும் என்பதைக் கண்டு அஞ்சாமல் வீரத்துடன் போர்புரிந்து குண்டுகாயம் பட்டு வீரசுவர்க்கமடைந்தான். சுல்தான் விழுந்து கிடந்த இடத்தில் ஒரு ஞாபகச் சின்னக்கல் எழுப்பப் பட்டுள்ளது. அன்றைய யுத்தத்தில் மட்டும் 8000 பேர் மாண்டனர். திப்புவை முறியடித்த பெருமை வெல்லெஸ்லியையே சேரும். சூறையில் இவருக்கு கிடைத்த பங்கு ஆயிரக்கணக்கான பவுன் மதிப்புள்ள தங்கமும் ரத்னக் கற்களும் ஆகும்.**



# ஸ்ரீரங்கபட்டினம்


புனித க்ஷேத்திரமும் சரித்திரமுக்கியத்துவமும் பெற்றதுமான ஸ்ரீரங்கபட்டினம் 17, 18-வது நூற்றுண்டுகளில் மைசூர் ராஜ்யத்தின் தலைநகரமாகவும் இருந்து வந்திருக்கிறது. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் இங்கிருந்துதான் அரசுபுரிந்து வந்தனர். இங்குள்ள கோட்டையும் கொத்தளமும், அரண்மனையும் ஆலயமும் பழைய சிறப்புகளை விளக்கிக் கொண்டிருக்கின்றன. இயற்கை வளப்புக் காட்சிகள் மலிந்த இந்தத் தீவின் முக்கிய காட்சிகள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

போட்டோக்கள் : ஆசிரியர்.





ஸ்ரீ ரங்கநாதர்
ஆலய சன்னதி.
200 வருஷங்க
ளுக்கு முன்பு
கட்டபட்ட தேர்.





ஸ்ரீ ரங்கநாதர் ஆல
யத்தின் மற்றொரு
தோற்றம். ஜும்மா
மசூதி எனப்படும்
முகம்மதியர் தொழும்
ஆலயம்.






தென்புறக் காவிரியின் தோற்றம். பழுதடைந்திருக்கும் பாலத்தின் பேரில் ரயில் செல்கிறது,






கோட்டை வாயில். இடிந்து போன கோட்டை மதில் சுவர்—வடக்குக் காவிரிக் கரையிலுள்ளது.







திப்பு சுல்தானின் வசந்த மாளிகை தரியா தௌலத். சுவர் பூராவும் சித்திரங்கள்; மன்னர் பவனிவரும் காட்சி.








திப்பு சுல்தான் சமாதி. சுவரில் அபூர்வ தந்த வேலைப்பாடுகளுடன் கூடிய கதவுகள்.



திப்புசுல்தான் சமாதிக்குச் செல்லும் பாதை. பிரசித்தி பெற்ற பாதாளச்சிறை. இங்கே இங்கிலீஷ் காரர்களை சிறை வைத்திருந்தனர்.



# மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

### என்ன துரோகம்?

*சென்னை மூர்மார்க்கெட் வாசலில் நடந்த சம்பவம் இது? நாகரீகமாக உடையணிந்திருந்த வாலிபர் ஒருவர் என்னைக் கண்டதும், என்னிடம் பேனா இரவல் கேட்டார். நானும் 'ஏதோ அவசர விஷயம் போலிருக்கிறது; எழுதி விட்டுத் தரட்டும்' என்ற எண்ணத்தில் என் பேனாவைக் கொடுத்தேன். பேனாவை வாங்கிக் கொண்டு எழுத ஆரம்பித்தார். ஸென்டிரல் ஸ்டேஷன் கடியாரத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். ஐந்து, பத்து என்று நிமிஷங்கள் பறந்துகொண்டிருந்தனவே தவிர, அந்த வாலிபர் என் பேனாவைத் திருப்பித் தரவில்லை. பதினைந்து நிமிஷங்களும் கடந்து விடவே, பொறுமையிழந்த நான், ''ஸார்! நான் அவசரமாகப் போக வேண்டும். பேனாவைத் தருகிறீர்களா?'' என்றேன். அவர் தலையை நிமிர்த்தி, ''என்ன....பேனாவா...... என்னப்பா இது? என் பேனாவை உனக்கு எதற்குத் தருவது? உனக்கு அவசரமானால் போகலாம்!'' என்றார். எனக்குக் கோபம், ஆச்சர்யம், பயம் எல்லாம் ஒன்று சேரவே, ''என்னையா! பார்த்தா யோக்கியன் மாதிரி டிரஸ் செய்திருக்கிறே...எத்தனை நாளாக இந்த வேலை!'' என்று சீறினேன். சற்று தூரத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் வருவதைக் கவனிக்கவே, எனக்குத் துணிச்சல் பிறந்தது. இதைக் கவனித்துவிட்ட அந்த வாலிபன் என் பேனாவை அவசர அவசரமாகக் கீழே போட்டுவிட்டு, மூர்மார்க்கெட்டுக்குள் நுழைந்து விட்டான். பேனா கிடைத்தது போதும் என்ற திருப்தியில் அவனைத் தேடுவதை விட்டுக் கிளம்பினேன் நான். 'உபகாரம் செய்தவர்க்கே அபகாரம் செய்ய எண்ணும்' துரோகிகளை எப்படி மறப்பது?*

சந்துரு,
சென்னை-7.

### செத்துப் பிழைத்தேன்!

1955-ம் வருஷம் ஜூன் மாதம் 6ந்தேதி. 'பரீக்ஷை ரிஸல்ட்' வெளிவந்திருந்தது. அதில் என்னுடைய பரிக்ஷை எண் இல்லாததைக் கண்டு எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. முடிவு, தேறவில்லை யென்பது தான். பிறகு பள்ளிக்கூடத்திற்கு எங்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் யாவும் வந்தன. பரிக்ஷையில் தவறின மாணவர்கள் தங்கள் மார்க்குகளைத் தெரிந்து கொண்டு, தங்களுக்குத் தாங்களே ஆறுதல் கூறிக் கொண்டனர். அது போலவே நானும் என் மார்க்கை விசாரிக்கச் சென்றேன். ஆனால் பள்ளியின் ரைட்டர் எனக்கு அளித்த பதில் ''உன்னுடைய

சர்டிபிகேட் இன்னும் வரவில்லை'' என்பது தான்.

நாட்கள் பல உருண்டோடின. பொறுமையை இழக்கும் தருணம்; அப்பொழுது அக்டோபர் பரீக்ஷை எழுதலாம் என்னும் முடிவிற்கு வந்தேன்.

ஒரு நாள் நான் என் நண்பர்களுடன் சுற்றிவிட்டு மத்தியானச் சாப்பாட்டிற்காக வீட்டில் நுழைந்தவுடன் பக்கத்து வீட்டு அம்மாள் ஓடி வந்து ''ஒரு பையன் வந்து நீ பாஸ் பண்ணி விட்டதாகச் சொல்லச் சொன்னனப்பா'' என்றார்கள்.

இச் செய்தியைக் கேட்டவுடன் எனக்கிருந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை யென்பது ஒரு புறமிருக்க, செத்தவனுக்கு மறுபடியும் உயிர் வந்துவிட்டால் எவ்வளவு ஆச்சரியப்படுவானோ அதே போல நானும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். ஜூன் மாதம் வரும்போதெல்லாம் இச் சம்பவத்தை மனத்திரை பிரதிபலித்துக் காண்பிக்கிறது.

கே. அன்வர் பாஷா,
மதுரை.

## தப்பித்தேன்!

நான் நாலாவது பாரம் படித்துக் கொண்டிருந்த சமயம்; அன்று வகுப்பு பரீட்சை. முக்கியமான கேள்வியின் விடையை விட்டிருந்தே எழுதி ஹாலுக்குள் கொண்டு போயிருந்தேன். அந்தக் கேள்விக்கே அன்றைய பரீட்சையில் விடையாக எழுதும்படி உபாத்தியாயர் கேட்டிருந்தார். நான் எழுதிக்கொண்டு போயிருந்த விடைத்தாள் சுத்தமாக இல்லாததால் அதை வெளிப்படையாக வைத்துக்கொண்டே மற்றொரு தாளில் தெளிவாக எழுதிக்கொண்டிருந்தேன். இதை என் ஆசிரியர் கண்டு கொண்டார்: எனக்குநெஞ்சு கடிகாரம்போல் அடிக்கத் துடங்கிவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் என் பள்ளி வாழ்வே முடிந்துவிடும் என்று நினைத்துக் கொண்டிருந்த சமயம், ஆசிரியர் பையன்களைப் பார்த்து சொன்னதாவது, ''பார்த்தீர்களா! இந்தப் பையனை எழுதின விடை சுத்தமாக இல்லை. ஆசிரியர் எங்கே மார்க்கை குறைத்து விடுவாரோ என நினைத்து வேறு தாளில் தெளிவாக விடை எழுதுகிறான்! இதைப் போலவே எல்லோரும் சுத்தமாக எழுதவேண்டும்'' என்று சொல்லிவிட்டு, என்னையும் உற்சாகப்படுத்தினார். இதை நான் மறக்க முடியாத சம்பவமாகக் கருதுகிறேன்.

சேது.

## ''புதையல்''

அன்றுதான் ''புதையல்'' என்ற புதுப் படம் ஒரு கொட்டகையில் திரையிடப்பட்டது. பிற்பகல் காட்சிக்குப் போன நான் 'க்யூ' வரிசையில் நின்றேன். கூட்டம் மிக அதிகமாகவிருந்தது. என் சட்டைப் பையில் ஒரு சிறிய மணி பர்சு இருந்தது. அதில் புதிய ஒரு ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது. நெருங்கிய கூட்டம், மணி அடித்தவுடன் நகர ஆரம்பித்தது. நான் துணிச்சல் உள்ளவன். ஆகையால் பர்சைப் பற்றிக் கவலைப்படவில்லை; திடீரென்று என் காலடியில் ஒரு வெள்ளிக் கால் ரூபாய் மின்னிக் கொண்டு கிடந்தது. சமயம் பார்த்துக் கொண்டே, அதை லபக் என்று எடுத்து என் பையில் போட்டுக் கொண்டேன். என் பக்கத்தில் நின்றவர் அதைக் கவனித்ததாக நான் நினைக்கவே யில்லை. அவர் கவனித்தாரோ என்னவோ! ''புதையல்'' படம் பார்க்கப் போய், எனக்கே ஒரு பெரும் புதையல் கிடைத்தது போல் மிகவும் சந்தோஷப்பட்ட நான், ஜாலியாகச் சினிமா பார்க்கலாம் என்று நினைத்து, டிக்கட் அறைக்கு வந்தவுடன், என் பையில் கைவிட்டேன், பணத்திற்காக. திடீரென்று தேள் கொட்டியது போலிருந்தது எனக்கு. பையிலிருந்த பர்சைக் காணவில்லை. காணவில்லை யென்றால் யார் நம்புவார்கள்? எனக்கு அப்போது இருதயமே நின்று விடும்போலிருந்தது. என் பின் வந்தவர் டிக்கட் வாங்கிக் கொண்டு, என்னைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரித்தார். என் முகத்தில் அசடு வழிந்தது. பேசாமல் வீடு திரும்பினேன். இந்த நாளை மறக்க முடியுமா!

எஸ். சத்தியமூர்த்தி,
மதுரை.




தலைமன்னார் துறைமுகம்-கிளம்பவிருக்கும் ஒரு கப்பல்


# சேதுநாட்டுக்கடற்கரையிலே...

நா. பார்த்தசாரதி

இராமநாதபுரம் ஜில்லா நிலவளம் நீர்வளம் குன்றிய ஒன்றுதான். ஆனால் அதன் குறைகளை மறையச் செய்யும் புண்ணியம் நிறைந்த சிற்றூர்கள் கீழ்கடலின் கரையகத்தே பாரத நாடெங்கும் புகழ் பெற்று விளங்குகின்றன. குமரியிலிருந்து இமயம் வரையிலும் நிறைந்துள்ள மக்களில்



தலைமன்னார் துறைமுகத்தின் மற்றொரு தோற்றம்



திருப்புல்லணை கோவில்


எல்லா ஜில்லாக்களிலும் தான் சரித்திரப் பெருமை உண்டு. ஆனால் சேதுநாட்டின் சரித்திரம் தெய்வீகத் தொடர்புடைய சரித்திரம். பாரத நாட்டின் ஆதிமகா கவியின் ஆதிமகா காவியமான ஸ்ரீ ராமாயணத்தோடு தொடர்புடைய சரித்திரம். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வருஷந்தோறும் கோடிக் கணக்கான யாத்ரீகர்கள் சேதுக்கரைக்கு வந்து போகிறார்கள். சமுத்திர ஸ்நானமும், தெய்வ தரிசனமும் செய்து விட்டுப் பிரார்த்தனைகளையும், விரதங்களையும், காணிக்கைகளையும் நிறைவேற்றி விட்டுத் திருப்தியோடு திரும்பிப் போகிறார்கள்.

ராமேஸ்வரத்தையும் தனுஷ்கோடியையும் அறியாதவர்கள் இருக்க முடியாது.

சங்கும், முத்தும், கிளிஞ்சலும் விளையும் வளமான நீலத்திரை கடல், நீராடி வணங்கினோர் பாவங்களைப் போக்கும் புனிதக் கடல் நீர், வணங்கி வழிபடுவதற்கு வானளாவும் கோபுரங்களோடு கூடிய ஆலயங்கள், கேட்டு மகிழுவதற்கு வீர பரம்பரையினரான சேதுபதிகளின் பெருமை, பார்த்து மகிழ்வதற்குக் கடற்கரைக் காட்சிகள், நினைத்து மகிழ்வதற்குத் தெய்வீகமான எண்ணங்கள் இவை அனைத்தும் சேது நாட்டுக் கடற்கரையிலே கிடைப்பவை. ராமநாதபுரம் ஜில்லாவின் கிழக்குப் பகுதி முழுவதுமே பழைய சரித்திரப் பிரசித்தி பெற்ற பகுதி.

### 1. சேதுக்கரை—திருப்புல்லணை

இந்த இடம் இராமநாதபுரத்திற்குத் தென்கிழக்கே ஆறு




கந்தமாதன பர்வதம்


மைல் தொலைவில் இருக்கிறது. இராமர் இலங்கைக்குக்கட்டிய அணை இப்பகுதிக் கடலில் மறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். சேதுயாத்திரை செய்பவர்கள் முதலில் இங்கு ஸ்நானம் செய்ய வேண்டும். இந்தக் கடற்பகுதிக்கு 'ரத்னாகரம்' — என்று பெயர். இதற்கு அப்பாலுள்ள கடற்பகுதிக்கு 'மகோததி' என்று பெயர். சேதுக் கரையில் ஸ்நானம் செய்து விட்டு திருப்புல்லணை ஆதி ஜகந்நாதப் பெருமாளையும் தர்ப்பாசயன ராமரையும் தரிசித்துக் கொள்ள வேண்டும். திருப்புல்லணைக் கோவில் அழகானது. ஆழ்வார்களால் பாடப் பெற்றது. மகாராஜா ஸ்ரீ பாஸ்கர சேதுபதியால் ரத்னாகரம் கடலில் கிடைத்த விலை யுயர்ந்த மணிகளைக் கொண்டு செய்த காதணிகள் இரண்டு இக் கோவில் சுவாமிக்கு அணிவிக்கப்படுகின்றன. அவை பார்க்கத்தக்கவை. தர்ப்பாசயன ராமர், கல்யாணராமர், பட்டாபிஷேகராமர்ஆக மூன்று ராமர்கள் இக்கோவிலில் எழுந்தருளியுள்ளனர். யாத்ரிகர்களுக்கு வசதியாக இவ்வூரில் பல சத்திரங்கள் இருக்கின்றன. ஊரிலிருந்து சமுத்திரம் ஏறக்குறைய இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. நடந்தோ, வண்டிகளிலோ சென்று ஸ்நானம் செய்ய வேண்டும். சேதுக் கரை ஸ்நான கட்டம் ஒரு கோடியில் ஒதுக்குப் புறமாக அமைந்து விட்டதானாலும் ஆண்டுதோறும் தேடி வருகின்ற பக்தர்களுக்கு குறைவே இல்லை.

### 2. தேவிபட்டினம்

இதுவும் இராமநாதபுரத்திற்கருகிலுள்ள மற்றொரு புண்ணிய ஸ்நான கட்டம். சேது



ராமேஸ்வரக் கோவில் தூணிலுள்ள சிற்பம்



ராமேஸ்வரம் கோயிலின் உட்பிரகாரம்

பல தங்கும் இடங்களும் இங்குள்ளன. இவ்வூர் திருவாடானைக்கும் இராமநாதபுரத்துக்கும் இடையில் அமைந்திருக்கிறது. செம்படவர்கள் மிகுதியாக வசிக்கின்றனர். ஆசாரக்கோவைஎன்ற அருமையான தமிழ் நூலை அருளிய முள்ளியார் என்ற புலவர் பிறந்த பெருவாயில் என்ற ஊர் இதற்கு அருகில் உள்ளது. 'உத்தரகோசமங்கை' — என்ற மற்றோர் பாடல் பெற்ற ஸ்தலமும் இப்பக்கத்தில் உண்டு.

யாத்திரை செய்பவர்கள் இங்கு நீராடி நவக்கிரக பூஜை செய்ய வேண்டியது முறை. தேவிபட்டினம் கடற்கரையில் இன்றும் கடலில் மூங்கியும் முங்காமலும் ஒன்பது சிலைகள் தென்படும். அவையே அங்கு பூஜிக்க வேண்டிய நவக்கிரகங்களின் சிலைகளாகும். கடல்நீர் உப்பரித்துச் சிலைகளின் உருவம் தெளிவாகத் தெரியமாட்டா; தேவிபட்டினத்துக் கடற்கரையில் பாழடைந்த நிலையிலுள்ள ராமர் சந்நிதி ஒன்று இருக்கின்றது.

யாத்ரீகர்கள் இந்த இடத்தையும் தேடிவந்து நீராடிச் செல்கின்றனர். இராமநாதபுரம் ராஜா சத்திரம் ஒன்றும் வேறு

### 3. தனுஷ்கோடி

இராமநாதபுரத்திலிருந்து மண்டபம் காம்ப் மார்க்கமாகப் பாம்பன் பாலத்தைக் கடந்து தனுஷ்கோடி போகவேண்டும். ரயிலேறிப் பாம்பன் ஜங்ஷனிலிருந்து தென்மேற்காகப் போனால் ராமேஸ்வரம், வடமேற்காகப் போனால் தனுஷ்கோடி. முன்பு பாம்பனிலிருந்து ராமேஸ்வரம் வழியாகவே தனுஷ்கோடிக்கு ரயில்வே 'லைன்' சென்றது. மணல் மேடுகள் அடிக்கடி ரயில்வே 'லைனை' மூடி விடுவதாலும் கடலுக்கு வெகு அருகில் அரிப்புக்கு

ஆளானதாலும் இந்த லைனை எடுத்து விட்டார்கள், எனவே இப்போது பாம்பன் ஜங்ஷனிலிருந்து வடமேற்காகத் தனி ரயில்வே 'லைன்' செல்கிறது. கடலில் ஏறக்குறைய முக்கால் மைல் தொலைவுவரை அமைந்திருக்கும் பாம்பன் பாலம் அதிசயமான அமைப்புடையது. கப்பல் போகும் நேரங்களில் இந்தப் பாலம் தானாகவே உயர எழும்பிக் கொள்ளும். ரயில் போகும்போது சமமாகிவிடும். பாம்பன் பாலத்தடியில் கடல் நீர் ஸ்படிகம்போல் தெளிவாக இருக்கிறது.

கடலுக்கு நடுவே வளைவாக ஒரு பெரிய வில் கிடந்தால் எப்படி இருக்குமோ அப்படி நெட்டைப் பாடாக வளைந்த ஒரு சிறிய கோடிதான் தனுஷ்கோடி தீவு. இப்போதே இத்தீவின் பெரும்பகுதியைக் கடல் அரித்து விட்டது. நாளுக்கு நாள் கடல் ஊரின் அகலத்தை வெகு வேகமாகக் குறைத்துக் கொண்டு வருகின்றது. தண்ணீர்ப்பஞ்சம் இவ்வூரில் அதிகம். உப்பு நீரான கடல்நீரைத் தவிர, வேறு குடிதண்ணீர் வெளி இடங்களிலிருந்துதான் வரவேண்டும். இங்கு ஒரு சிறிய துறைமுகம் இருக்கிறது. இலங்கையின் முதற் கரையாகிய தலை மன்னார் வரை கப்பல்கள் செல்லுகின்றன. ராமேஸ்வரத்தைப் போலவே இங்கும் புண்ணிய ஸ்நானத்திற்காகக் கோடிக் கணக்கான யாத்ரிகர்கள் வந்து போகிறார்கள். சமீபத்தில் கடலின் கொடுமையால் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட விடுகளும் ஒரு அழகான ராமர் கோவிலும் மூழ்கி விட்டன. இன்றும் இரண்டொரு வருஷங்களில் தனுஷ்கோடி கடலில் மூழ்கி மறைந்துவிடுமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அங்குள்ள கப்பல் துறையையும் இலங்கை—இந்தியா—சுங்கப் பரிசோதனை அலுவலகங்களையும் ராமேஸ்வரத்திற்கு மாற்றிவிடலாமா?—என்ற பிரச்னை பாரதப் பார்லிமெண்டில் விவாதத்துக்கு வந்துவிட்டது. வெயில் காலத்தில் மாலை ஆறரைமணி வரை காலைத் தரையில் வைக்க முடியாது. அவ்வளவு வெயில். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே நீலத்திரை கடல். நாற்புறமும் கடல் நீரைத்தவிர மரமோ, பசுமையோ, தென்படவில்லை. ஒரே மணல்வெளி. 'இந்த மணல் வெளியையும் இன்னும் சில நாளில் விழுங்கிவிடுவேன்?' என்று கடல் ஓங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. தனுஷ்



ராமேஸ்வரம் கோவிலின் முன்தோற்றம்

கோடியிலிருந்து பாம்பன் ஜங் ஷன் வந்துதான் ராமேஸ் வரம் போகவேண்டுமென்பது இல்லை. இடையே 'ராமேஸ் வரம் ரோடு'— என்றே ஸ்டே ஷன் இருக்கிறது. அதிலே இறங்கினால்—குறுக்கு வழியாக அரைமணி நேரம் நடந்து ராமேஸ்வரத்தை அடைந்து விடலாம். மணலில் பொறுமை யாக நடக்கவேண்டும்.

## ராமேஸ்வரம்

சேது நாட்டுக் கடற்கரை யிலே முக்கியமான நகரம் ராமேஸ்வரம்.மாபெரும் ஆலய மும் அழகிய கடற்கரையும், இருபத்திரண்டு புண்ணிய தீர்த் தங்களும் உள்ள ஊர். ஸ்ரீ ராம லிங்க சுவாமி கோவில் கொண் டுள்ள ஊர். சமீபகாலம் வரை சேதுபதிகளின் ஆட்சிக் குட் பட்டிருந்த இக்கோயில் சென்னை மாகாணத்தில் வரு மானம் மிக்க கோவில். திருப் பதிக்கு அடுத்தபடி என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ராமரால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற ஆலயமென்பது இதன் ஐதிகம். ஸ்ரீ அனுமன் பூஜை செய்து வழிபட்டது என்றும் கூறுவர்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலைப் போலவே ராமே ஸ்வரம் கோவிலும் பெரியது. வைர வைடூரியங்களாலும் முத்து நவ மணிகளாலும் நிறைந்த ஆபரணங்களை உடை யது. வருடம் முந்நூற்றறுபது நாளும் யாத்திரீகர்கள் கும்பல் கும்பலாக இங்கு வந்தவண்ண மிருக்கின்றனர். மராத்தி, இந்தி, தெலுங்கு, முதலிய பலமொழி பேசும் மக்கள் இங்குவந்து போவதன் காரணமாக இவ்வூரி லுள்ள சலூன் காரர்களி லிருந்து சாப்பாட்டுக் கடைக் காரர் வரை மும்மொழிப் புலவ ராக இருக்கிறார்கள். அதாவது மூன்று மொழிகளிலும் தடங்க லின்றிப் பேசுகிறார்கள். சோழி, முத்து, சங்கு முதலிய கடல்படு பொருள்கள் இவ்வூர் வீதிகளில் குவிக்கப் பட்டிருக்கின்றன. 'முத்துச்சாவடி'— என்றே ஒரு தெருவுக்குப் பெயர். பழங் காலத்தில் முத்துக் குளிப்பும் இங்கு அதிகமாயிருந்தது என்பதற்கு இத்தெருப் பெயர் ஒரு சான்று. இதற்கும் தனுஷ் கோடிக்கும் நடுவே கடலை ஒட்டினாற்போலக் கோதண்ட ராமர் கோவில் என்று ஒரு ஆலயம் உண்டு. ராமேஸ் வரத்திலிருந்து ஒன்றரை மைல் தென்மேற்கே கந்தமாதன பர்வதம் என்று ஒரு மணல் மேடும் அந்த மேட்டில் ஸ்ரீராமர் பாதமுள்ள ஒரு சிறிய கோவிலும் இருக்கின்றன. அந்தக் கோவிலின்மேல் ஏறிப் பார்த்தால் கடல்காற்று பிர மாதமாக வீசுகிறது. நான்கு புறமும் கடல் சூழ்ந்திருப்பது நன்றாகத் தெரிகிறது. தனுஷ் கோடி,ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் எல்லா இடங்களும் தெரிகின்றன.

இன்னும் ராமேஸ்வரம் தீவினுள் பழமையின் சின்னங் கள் போல அங்கங்கே பல இடிந்த கோட்டைச்சுவர்களும் சிறிய ஆலயங்களும் தென் படுகின்றன.

கடல்படு பொருள்களைக் கொண்டு பற்பல அதிசயிக்கத் தக்க வேலைப்பாடுகளை இங்கே செய்கிறார்கள். கோவிலின் மேற்குப்புறத்தில் இவற்றுக் கென்றே தனிக்கடை வீதி ஒன்று இருக்கிறது. இந்தப் பொருள்களிலே சிலவற்றை விலைக்கு வாங்கிக்கொள்ளாமல் யாத்திரீகர்கள் ஊர் திரும்பும்

வழக்கமில்லை. அப்படித் திரும்பினால் ராமேஸ்வர யாத்திரை பூர்த்தியானதாக ஆகாது. சங்குகள், சோழிகள், முதலியன இராமேஸ்வர யாத்திரைக்கு ஒரு அடையாளம். ராமேஸ்வரத்து மணல்மேடுகளில் வெண்தாழ மரங்கள் அதிகம். இதனால் வெண் தாழம்பூ மிக மலிவான விலைக்குக் கிடைக்கும்.

தனுஷ்கோடியைப் போல் ராமேஸ்வரத்தில் 'தண்ணீர்ப் பஞ்சம்' இல்லையென்பது குறிப்பிடத்தக்க விஷயம். குழாய்கள் மூலம் அருமையான குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. காய்கறி முதலிய எந்தப் பொருளும் வேண்டிய அளவு வசதியாகக் கிடைக்கின்றன. மரம் செடி கொடிகளோடு பார்க்க அழகான நகரமாகவும் காட்சி யளிக்கிறது.

மேலே குறித்த நான்கு ஊர்களையும் பார்த்து நான்கு கடல்களிலும் நீராடிச் சுவாமி தரிசனம் செய்து விட்டால், சேது யாத்திரை முடிந்த மாதிரிதான். சேது நாட்டுக் கடற்கரையை முழுதும் பார்த்த பெருமை இவற்றைப் பார்த்தாலே கிடைத்து விடுகின்றது.

சேதுயாத்திரை வருவோர் திரும்பும்போது ராமநாதபுரம் திரும்பிச் சேதுபதிகளின் பிரம்மாண்டமான அரண்மனையைப் பார்த்துவிட்டு வணங்கிச் செல்வது ஒரு ஐதிகம். சேதுபதிகளைக் குகனின் வம்ச வழியினராகக் கருதி வணங்கிச் செல்கின்றனர் வடநாட்டு யாத்ரீகர். ராமேஸ்வரம் ஸ்தல புராணமும் இப்படியே கூறுகிறது. இன்றும் இந்த நம்பிக்கை நம்மிடையே நிலைத்திருக்கிறது. ★


## வில்வப் பழத்துடன் கலியாணம்!

நேபாளத்தில் கூர்க்கா, நேவார், குருங், மாகர் முதலிய பலவகை ஜாதியினர் வசித்து வருகின்றனர். நேவார் ஜாதியில் பிறக்கும் பெண் ருதுவாவதற்கு முன் அவளுக்கும் வில்வப்பழத்திற்கும் வைதிக சடங்குகளுடன் கலியாணம் நடத்தி வைப்பது வழக்கம். கலியாணம் செய்து கொள்ளப்பட்ட வில்வப் பழத்தை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வருவார்களாம். இந்தத் திருமணம் ஆனபின்புதான் உண்மை புருஷனைத் தேடி கலியாணம் செய்யப்படுமாம்!

## விசித்திர விவாக ரத்து முறை

நேவார் ஜாதிப் பெண் தன் புருஷனிடமிருந்து விவாக ரத்துபெற விரும்பினால், புருஷனின் தலையணைக் கடியில் இரண்டு வெற்றிலையையும் பாக்கையும் வைத்து விட்டு, தனக்குப் பிடித்த புருஷனிடம் அவள் சென்று விடலாம். ஏற்கனவே வில்வப் பழத்திற்கு கலியாணம் ஆகிவிட்டதால் அவள் கைம்பெண்ணாகவே ஆவதில்லை.

கூர்க்கா ஜாதியில் ஜாதி மதம்கட்டுப்பாடு அதிகம். பசு, பிராம்மணன், ஸ்திரீ இவர்களைக் கொல்லக்கூடாது. கொன்றால் தூக்கு தண்டனைதான் கிடைக்கும்.



# தேநீர்

எஸ்.ஸ்ரீநிவாஸன்

***உலகின் எப்பகுதியில் வாழும் மக்களும் விரும்பிப் பருகும் ருசி மிக்க பானம் தேநீர். அதைப்பற்றிய வரலாறும் ருசிகரமானதே!...***

ஒரு கோப்பை தேநீர்...அதன் ருசியை அனுபவித்துக் குடிப்பவன் உடல் தேய உழைத்துவிட்டு, ஓய்வெடுத்துக் கொள்ளவிரும்பும் ஒரு பாட்டாளிதான்! உழைப்பினால் ஏற்பட்ட களைப்பைப் போக்கிக்கொள்ள உவகையுடன் அவன் அருந்தும் பானம் ஒரு கோப்பை தேநீர்! ஏழையின் வாழ்வில் அவனுக்கு அமுதபானமாக விளங்கி வருவது தேநீர்!

சோற்றை மறந்து உழைப்பான்! தூக்கத்தைத் துறக்கத் தயாராகி விடுவான்! ஆனால், தேநீரை மறந்து அவனால் இருக்க முடியாது! உழைத்துச் சேமிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கை தேநீருக்கு காணிக்கை செலுத்தி விடுவான்! கடின உழைப்பை மேற்கொள்ளும் ஒவ்வொரு உழைப்பாளிக்கும் உணர்வூட்டி, அவன் களைப்பை நீக்கும் சஞ்சீவி ஒன்று உண்டென்றால், இன்றைய 20-ம் நூற்றாண்டில் தேநீருக்கு ஈடாக வேறு பானத்தை நாம் குறிப்பிட இயலாது.

உடலுழைப்பால் நரம்புகள் தளர்வடைந்து சோர்வு மேலிடுகிறது. இச்சோர்வை நீடிக்க விட்டால், உழைப்பு தடைப்படும். உழைப்பின்றேல் ஊதியம் ஏது? ஆகவே உழைப்பால் ஏற்படும் களைப்பை நீக்க, நாம் அருந்தும் ஒரு கோப்பை தேநீர், சோர்வை அகற்றி நரம்புகளுக்குப் புத்துணர்ச்சி யூட்டும். துரிதகதியில் வேலை செய்யும் ஆர்வத்தை அளிக்கும் சக்தி தேநீருக்கு உண்டு.

நன்மையென்று ஒன்றைக் கருதினால் அதில் தீமையும் கலந்திருப்பது சகஜம். தேநீரைப் பற்றியும், அதை அருந்துவதால் உண்டாகும் பின் விளைவுகளைப்பற்றியும் நாம் படித்திருக்கிறோம்.

தேநீரில் உடலுக்கு வலுவூட்டும் சக்தி எதுவும் கிடையாது. தேநீர் அருந்துவதால், திடீரென்று சோர்வடைந்த நரம்புகள் வலுப்பெற்று, நமக்குப்புத்துணர்ச்சிஏற்பட்டு வேலை செய்யும் சக்தியைக் கொடுக்கின்றன. ஆனால், சிறிது நேரத்தில் இந்த உணர்ச்சி மறைந்து, மீண்டும் சோர்வு நம்மைக் கௌவிக் கொள்ளும். அப்போது நாம் மீண்டும் தேநீரின் உதவியை நாடுவோம்! இவ்வாறு இடைவிடாது தேநீர் அருந்துவதால், நரம்புகள் இயற்கையான விரைப்புத்தன்மையை இழந்து, நாளடைவில் உடல், நரம்புத் தளர்ச்சி வியாதிக்கு அடிமையாகின்றது என்ற கருத்து இருந்து வருகிறது. அளவுக்கு

மீறினால் அமுதமும் விஷமாகும் போது, தேநீர் மட்டும் அதற்கு விதிவிலக்காகுமா?

ஏழையின் எளிமையான வாழ்வுக்கு ஏற்றதாக இருந்து வரும் இந்த அமுத பானம் பிறந்த வரலாற்றைச் சற்று ஆராய்வோம்.

உலகில் தேநீரின் ருசியறியாத ஜனங்கள் எந்த நாட்டிலும் இல்லை எனலாம். தூந்திரப் பிரதேச வாசிகள் ஒரு வேளை தேநீரைப்பற்றி அறியாதிருக்கலாம்! ஏழை எளியோர் தவிர, செல்வந்தர்களும் விரும்பிப் பருகும் பானம் தேநீர்.

தேநீரை 'பொதுஜன பானம்' என்ற நிலைக்குக் கொண்டு வருவது மிகக் கடினமாக இருந்ததாம்! அதிலுள்ள நன்மையைப் பற்றி ஒருவரும் ஆராயத் துணியவில்லை. விஷத்தினும் கொடியதாக அதை நினைத்து வந்தனர், அதன் உபயோகத்தை யறியாத ஜனங்கள். ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் துணிந்து, தேநீர் பற்றி செய்த தங்கள் ஆராய்ச்சிகளை நிரூபித்து, 'மனிதசமுதாயத்துக்கு நன்மை தரும் பானம் தேநீர்' என்று ஸ்தாபித்தனர். இருந்தும் ஜனங்கள் அப்போது அதைப் பூர்ணமாக நம்பவில்லை.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் சீனாவில் ஒரு அறிஞர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் லூயூ என்பதாகும். அவர் 'சாசிங்' என்றொரு ஆராய்ச்சி நூல் வெளியிட்டார். அந்நூலில் தேநீர் பற்றிய தன் கருத்தை விளக்கமாக எழுதியுள்ளார். "களைப்புற்ற உடலின் களைப்பை நீக்கி, பசி மிகுந்தவனின் பசியைப் போக்கி, சோம்பல் மிகுந்தவனிடம் சுறுசுறுப்பை யுண்டாக்கி மனிதனை எப்போதும் தீவிர உழைப்பாளியாக இருக்கச்செய்யும் சக்தியுடைய அமுதம் தேநீர்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

18-ம் நூற்றாண்டில் சைனாவிலிருந்து தேயிலைச் செடியின் விதைகள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன. அப்போது அதை வெகுவாக உற்பத்தி செய்யும் எண்ணம் யாருக்கும் இல்லை. வீட்டுத் தோட்டங்களில் வைத்து வளர்த்து வந்தனர்.

தேயிலை வியாபாரப் பொருளாகக் கருதப்படும் காலம், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட காலத்தில்தான் என்பதற்கு சரித்திர பூர்வமான ஆதாரங்கள் உள்ளன.

1834-ம் ஆண்டில் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் சார்லஸ் காவென்டிஷ் பென்டிக் பிரபு, தேநீரின் உற்பத்தியின் சிறப்பை நன்கு அறிந்திருந்தார். அவர் சீனாவில் தேயிலை உற்பத்தியினால் கிடைத்து வரும் வருமானத்தைக் கேள்வியுற்றார். சீனர்கள் பானங்கள் அருந்துவதில் அளவுகடந்த விருப்பமுள்ளவர்கள். அவர்கள் தேநீர் ருசியை அறிந்திருக்கவே, முதலில் அதை வேறு நாட்டினர் உபயோகிக்காமலிருக்கும் பொருட்டு ரகசியமாகக் காத்து வந்தனர். நாளடைவில் இந்த ரகசியம் அம்பலமாகி விட்டது. பொன்னைக் குவிக்கும் சக்தி தேயிலை வியாபாரத்தில் இருக்கிறது என்பதை யறிந்த அவர், இந்தியாவிலும் தேயிலை உற்பத்தியைப் பெருக்கி, அதை வியாபாரப் பொருளாக்க நினைத்தார்.

நினைத்ததைச் செயலுருவில் காட்ட, திட்டங்கள் வகுத்தார். அவர் திட்டங்கள் வெற்றிபெற ஆரம்பித்தன.

தேயிலை உற்பத்தி வெகு லாபகரமான தொழிலாகக் கருதப்படவே, வெகுவிரைவில் விளைநிலங்கள் பலவும் தேயிலை சாகுபடி செய்யும் நிலங்களாக மாறின. இந்தியாவின் சில பகுதிகள் அமோகமாக தேயிலை உற்பத்தியைப்பெருக்கிவந்தன. காவென்டிஷ் பென்டிக் பிரபுவை இதற்காக இங்கிலாந்து பாராட்டி மகிழ்ந்தது.

அஸ்ஸாம் மாகாணத்தில் தேயிலை உற்பத்தி பெருவாரியாக இருந்துவரவே, லண்டனில் ஆராய்ச்சிக் குழு சைனு தேயிலையுடன், அஸ்ஸாம் தேயிலையை ஒப்பிட்டுப் பார்த்தது. முடிவு, அஸ்ஸாம் தேயிலை வெகு சிலாக்கியமானது என்று தீர்மானிக்கப்பட்டது.

*1852*-ம் ஆண்டில் தேயிலையைப் பக்குவப்படுத்தி, சிறந்த வியாபாரப் பொருளாக மாற்றும் கம்பெனி அஸ்ஸாமில் நிறுவப்பட்டது. அதன்பிறகு டார்ஜிலிங்கிலும், டூயர்ஸ் ஆகிய இடங்களிலும் கம்பெனிகள் வியாபார நிமித்தம் தோன்றலாயின. தற்போது தென்னிந்தியாவிலும் தேயிலை உற்பத்தி ஆனைமலை, நீலகிரி மலைப் பிரதேசங்களில் அமோகவெற்றி பெற்றுள்ளன.

ஏழைத் தொழிலாளிகள் அநேகர் இத்தோட்டங்களில் வேலை செய்து பொருளீட்டி வருகின்றனர். தேயிலை உற்பத்திப் பெருக்கினுல் அதன் விலேயும் மலிந்து வருகிறது. ஏழைக் குடும்பங்கள் அநேகம் தேயிலை உற்பத்தியை நம்பி வாழ்ந்து வருகின்றன.

சுவை மிகுந்ததும் மணம் மிகுந்ததுமான தேநீர், எத்தனையோ ஏழைகளின் உழைப்பால் நமக்குக் கிடைக்கிறது. உழைப்பாளிகளின் உள்ளம் குளிரும்படி தேயிலைத் தோட்ட நிர்வாகிகள் ஊதியம் அளித்து அவர்களை ஊக்குவித்தால், தேயிலை உற்பத்தி உலகின் அழிவற்ற நிலையானதான தொழிலாக, நிலைத்து நிற்கும். ★

## நேபாளத்துடன் நெருங்கிய பிணைப்பு

நேபாளத்தின் அரசியலில் இந்தியா சிரத்தை காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தியாவும் நேபாளமும் உடன்படிக்கைகள் மூலம் பிணைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலுள்ள திபேத்திற்கும் இந்தியாவிற்கு மிடையே ஒரு கேந்திர ஸ்தானத்தில் நேபாளம் இருப்பதால், அங்கு என்ன வேண்டுமானுலும் நடந்து விட்டுப் போகட்டும் என்று இந்தியா சும்மா இருப்பதற்கில்லை.

கூர்க்காக்களிடம் போதிய ஆயுத சாதனங்கள் கிடைக்காததே அமைதி நிலவுவதற்கான ஒரு காரணம் என்று சொல்லலாம். இந்தியா கவனம் செலுத்தாத பட்சத்தில்இன்னும்அதிகத் தொல்லைகள் இந்நாட்டில் ஏற்படலாம் என்று ஜான்சந்தர் என்ற பிரபல எழுத்தாளர் குறிப்பிட்டிருக்கிருர்.

உணர்ச்சியை உணர்ச்சியோடு உருவாக்குவதிலே தலை சிறந்து விளங்குகிறார்கள், ருஷ்ய இலக்கியச் சிற்பிகள். வாழ்வின் துடிப்பை அப்படியே அப்பட்டமாகப் பிரதிபலிப்பதில்ருஷ்ய இலக்கியத்துக்குள்ள வல்லமைக்கு நிகரில்லைதான். இது, அந்நியநாட்டு விமர்சகர்களும் மனமுவந்து ஒப்பும் உண்மை.

வாழ்வின் ஆழம் வரை ஊடுருவிச் செல்லும் கனிந்த கண்ணோட்டம், எளிமையின் அழகு மிளிரும் சொற்திறம் இவைதாம் ருஷ்ய இலக்கியத்தின் திடீர் வளர்ச்சியின் அடித்தளம்.

ஆம், திடீர் வளர்ச்சி !

பழக்கத்தை மதிப்பிட்டால் ருஷ்ய இலக்கியம் ஐரோப்பிய போன்ற சிலர் அப்போது புகழ் பெற்று விளங்கினார்கள். இவர்களிலே நிகிதன் அந்நிய நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள வாழ்க்கையைப் பற்றி அறிவதிலே ஆர்வம் கொண்டிருந்தார். இந்திய மண்ணிலே முதன்முதலாக அடியெடுத்து வைத்த ருஷ்யர் அவர்தாம்.

ருஷ்ய உழைப்பாளிகளிடையே வாய் வழியாக உலவி வரும், அனுமதேயர்கள் புனைந்த அழகுக் கவிதைகள், ரிசார்ட் ஜேம்ஸ் என்னும் வெள்ளைக்காரரை மிகவும் கவர்ந்தன. அவற்றில் சிலவற்றைத் தொகுத்து புத்தகமாக வெளியிட்டார், அவர் (1619). ருஷ்ய இலக்கியத்தின் எழிற் கோயிலுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார் அவர், என்று சொல்ல வேண்டும்.

# ருஷ்ய இலக்கியங்கள்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

இலக்கியங்களின் கடைசி வரிசையில்தான் இடம் பெறும். அதற்கு சரியான ஒரு சரித்திரம் ஆரம்பிப்பதே, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தான். பண்டைய செல்வங்கள் எனப் பெருமை கொள்ள ஒன்றுமில்லை. சென்ற இரண்டே நூற்றாண்டுகளில் அடைந்த பதவிதான் இன்றைய உயர்நிலை !

## ஆரம்பம்

சில நாடோடிக் கவிதைகளுடன் பிறவி யெடுத்த ருஷ்ய இலக்கியம் வெகு நீண்ட காலம் விழிப்பற்றுக் கிடந்தது. (கி. பி, 1000—1600) சில கிராமியப் பாடல்களும், யாரோ எழுதிய ஒரு சரித்திரக் காவியமும் அன்றைய சிறந்த சாதனைகள். ப்ரியர்நெஸ்டோர், அபோக்ரிபா, அத்நனசு நிகிதன்

## புதுமை

இலக்கியத்தின் கதவுகளைத் திறந்து புதுமைக்கு வரவேற்புக் கூறினார்கள், இருவர். மிகேலோ லொமனோசோவ் (1708—1765), அலக்சாந்தர் பெட்ரோவிச் சுமரோகோவ் (1717—1777).

லொமனோசோவ் புதிய வசன முறையைப் பிரசாரம் செய்தார். இவர் நாடகங்கள் எழுதுவதிலே வசன முறையைப் பிரசாரம் செய்தார்.

நாடகங்கங்கள் எழுதுவதிலே தேர்ந்திருந்த சுமரோகோவ், நூதன நாடகத் துறையின் தந்தையாக ருஷ்ய மக்களால் போற்றப்படுகிறார். முதல் முதலாக இலக்கிய விமரிசனத்தைத் தொடங்கியவரும் இவர்தாம்.

18-ஆம் நூற்றாண்டு மேற்கூறிய வர்களை விட வலிமையுள்ள வர்களின் காலம். ரோமனேவிச் டெர்வுவின் (1743 — 1816). இவான் இவானேவிச் டிமிட்ரிவ் (1760—1837), இவான் ஆன்ட்ரிவிச் கிரைலோவ் (1768—1844).

கிரைலோவ் தனிச்சிறப்பு பொருந்தியவர். நீதி போதனை அடங்கிய பல கதைகள் அளித்த பெருமை அவரைச் சாரும். பறவை, மிருகம் போன்றவற்றைப் பாத்திரங்களாகக் கொண்டு இருநூறுக்கு மேற்பட்ட கதைகள் புனைந்திருக்கிறார் அவர். (ஏறக்குறைய இதே சமயத்தில்தான்' சீனாவில் கொடுங்கோன்மையை மறைமுகமாகத் தாக்கிக் கொண்டு ஒரு கதை தொகுப்பு வெளிவந்தது. கதாபாத்திரங்கள் மனிதர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது).

இவான் இவானேவிச் டிமிட்ரிவும் இது போன்ற கதைகள் எழுதியுள்ளார். எனினும் கவிதை இலக்கியத்தில்தான் அவர் மிகுந்த சேவை செய்துள்ளார்.

கவிதைத் துறையில் முதல் பதவியும், கதாசிரியராக இரண்டாவது இடமும் கிரைலோவுக்குச் சொந்தம். ருஷ்ய இலக்கியத்தில் புதுமைக்கும் புரட்சிக்கும் இடையே ஒரு கண்ணியாக அவரைக் கருதுதல் பொருந்தும்.

## புரட்சி

ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளும் சைபீரியாவின் கடும் குளிரும் ருஷ்ய மக்களின் துன்பக் கனவுகளாக இருந்தன. மேலும் வெளியுலகுடன் உறவும் நட்பும் கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. இது பொது வாழ்வில் ஒரு தளர்ச்சிக்கு இடம் தந்தது. இந்தத் தளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சியின்மைக்குகாரணமாக இருந்தது.

16-17ம் நூற்றாண்டுகளிலேயே மேலை நாடுகளில் நிகழ்ந்த சமுதாய—நாகரிக எழுச்சியை தங்கள் நாட்டில் பரவமுடியாமல் தடுத்துக் கொண்டதும், அரசாங்கத்தின் கற்சுவர்கள் ஆனால், இந்தத் தடையையும் தகர்த்தெறியவே செய்தது காலத்தின் வேகம்.

பிரெஞ்சுப் புரட்சி சுற்றிலும் அள்ளிவீசிய தீப்பிழம்புகள் ருஷ்ய மண்ணிலும் தெறித்து விழுந்தன. நம்பிக்கையிழந்து இருளடைந்து கிடந்த ருஷ்ய மக்களின் இதயங்களிலெல்லாம் அதன் ஒளி படர்ந்தது. பொங்கியெழுந்த உணர்ச்சிக் கொதிப்பின் வெப்பத்தை தணிக்க சைபீரியாவின் கொடும் குளிருக்கும் முடியவில்லை.

சுதந்திரதாகம் பெருக்கெடுத்தது. அர்த்தமற்ற ஆசாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் தகர்த்தெறிய இளம் உள்ளங்கள் துடித்தன. 'நல்ல நாளை'க்கான இந்த வெறியை ஆவேசத்தோடு எழுத்துருவிலே செதுக்க முன் வந்தார்கள், கற்பனையுள்ளம் படைத்தவர்கள்.

வாழ்வின் நிழல் இலக்கியத்திலே படிவது இயற்கைதானே? 'வாழ்க்கை வேறு கலை வேறு'. என்ற நிலை மாறி, கற்பனை உள்ளத்தோடு வாழ்வைக் காண்பதுதான் கலை என்னும் நிலை ஏற்பட்டது. மகத்தான புரட்சி! இதை தொடங்கி வைத்தவர் கிரைலோவ் தான். எனினும் 'பழைய முறை'யிலிருந்து அவரது சிருஷ்டிகள், முற்றிலும், விடுதலை பெற்றிருக்கவில்லை.

இதே காலத்தவர் தாம், புதுமைக்கு முழு இடம் அளித்த, வாசில்ல ஆண்ட்ரீவிச் ஷுகோவ்ஸ்கி. எனினும் புரட்சி மனப்பான்மை அவருக்குச் சிறிதும் இருக்கவில்லை. அவருக்கு அரசாங்கத்தோடு சில பந்தங்கள் இருந்தது காரணமாக இருக்கலாம். 'ஜார்' அரசாங்கத்திலே ஊழியம் செய்து வந்த அவர், இரண்டாவது அலக்சாந்தரின் ஆசிரியராகவும் பணி புரிந்து வந்தார்.

திறமையுடன் பல அந்நிய நூல்களை மொழி பெயர்த்தது அவரது, மறக்க முடியாத அரும் பெரும் இலக்கியப் பணியாகும்.

## புஷ்கின்

அலக்சாந்தர்செர்கிவிச் புஷ்கினை (1794—1839), 'ருஷ்ய ஷேக்ஸ்பியர்' என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். அவரது இலக்கியங்களிலே புதைந்து கிடக்கும் புரட்சி எண்ணக் குவியல்களை ஆராய்ந்தால், இந்த உவமை 'சிறிதும் போதாது' என்று யாரும் சொல்லுவார்கள்.

மாஸ்கோவில் பிறந்த அவருக்கு 'ஜார்' ஆட்சியின் கொடுமைகளும், பாரபட்சமும் தெளிவாகவே தெரிந்திருந்தன. சிறு வயதிலேயே பிரெஞ்சு நூல்கள் பல கற்றுத் தேர்ந்தார் அவர். ஒன்பதாவது வயதில் அந்த மொழியில் கவிதையெழுதவே திறனிருந்தது அவருக்கு. பதினைந்தாவது வயதில் அவரது முதல் கவிதை பிரசுரிக்கப்பட்டது.

அவரது பல கவிதைகளிலும் அரசியல் கலந்திருந்தது. அவரது திறமை அச்சு இயந்திரத்தின் உதவிக்காகக்கூட பல பொழுதும் காத்திருந்ததில்லை. 'கையெழுத்துப் பிரதி' களாகவே, அவை நாடெங்கும் சுற்றித்திரிந்தன, அரண்மனையில்கூட.

பல சமயங்களிலும், பாடுபட்டுப் படைத்தவற்றை, தான் எழுதவில்லை, என்று சொல்லவேண்டிய நிலைக்கு இலக்கானார்.

எளிமையாகவும், புதுமையாகவும் எழுதி, ருஷ்ய மொழியின் வல்லமையை எடுத்துக்காட்டினார், அவர். அவரது இலக்கியங்கள் யாவுமே உண்மையின் பிரதிபலிப்பே.

கவிஞன், கதாசிரியன், சரித்திரக்காரன், விமர்சகன் போன்ற முறைகளில் அவர் சாதித்த சாதனைகள் அற்புதமானவைதாம். 'இஸ்பேட் ராணி' போன்ற கதைகள் அவர் திறனை விளக்கிக் கொண்டு உலக இலக்கியத்திலே ஜொலிக்கின்றன.

என்றுமே ஆட்சியின் சந்தேகக் கண்களுக்கு இலக்காகியிருந்த அவர், முடிவில் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார். அப்போது அவருக்கு வயது 38.

புஷ்கினை நினைத்த உடனேயே இவரையும் நினையாதிருக்க முடியாது. மிகேல்யூரிவிச் லர்மன்டோவ் (1814-1841) அவரது வாழ்வையும் துப்பாக்கி குண்டுகள் தான் குடித்தன. அவரது ஒரு கவிதை (கையெழுத்துப் பிரதி) எப்படியோ, ஒன்றும் நிக்கோலஸ் அவர்களிடம் சிக்கியது. அதன் ஒரு தாளிலே 'புரட்சிக்கு ஓர் அழைப்பு' என்று எழுதப்பட்டிருந்தது. அவர் கைதானார்! லர்மன்டோவ் நிறைய எழுதியவர். 'பயங்கர இவானும், நிரவியாபாரி கலஷ்நிகோவும்' அவரது பிரசித்தி பெற்ற கவிதை. அவர் எழுதிய 'அஷிக்கைரிப்' என்னும் பேய்க்கதை - வசன இலக்கியத்தில் ஓர் செல்வம்.

## புஷ்கின் – டால்ஸ்டாய்

புஷ்கினுக்கும் டால்ஸ்டாய்க்கும் இடையே பல சிந்தனைச் சிற்பிகள் வாழ்ந்திருக்கிறார்கள். நிகோலஸ் வாஸிலிவிச் கோகோல் (1809-1852), இவான் சர்கிவிச் துர்கனேவ் (1818-1883), நியோடர் மிகெலோவிச் டொஸ்டோய்வ்ஸ்கி (1821-1881), மிகேல்யூகிரோபோவிச்சால்டிகோவ் (1826-1889) இவர்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

கோகோலின் 'மேலாடை' என்னும் கதையும் 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' என்ற நாடகமும், ருஷ்ய இலக்கியத்தின் மங்காத மாணிக்கக்கற்கள்.

துர்கனேவ் மிகப்பெரிய தீவிரவாதி: மக்களின் இதயத் துடிப்புகளையும், தேவைகளையும், ஆவேசத்தோடு எழுதினார். பலமுறை 'ஜார்' ஆட்சியின் கொடிய இம்சைகளுக்கு இலக்கானார். 'தந்தைகளும், மக்களும்' அவரது சிறந்த சிருஷ்டி.

'குற்றமும் தண்டனையும்' 'நண்பர்கள்', 'மறைவில் நிற்கும் குறிப்புகள்' போன்ற உணர்ச்சி

மிகுந்த பல கற்பனைகள் புனைந்தவர், டெஸ்டோய்வஸ்கி. முடிவில்லாது அல்லல்பட்டு உருக்குலைந்த அவரது இதயம் கருணை நிறைந்திருந்தது. அனுபவத்தின் வேதனையிலே உதிர்ந்தவை அவரது படைப்புகள்.

பத்தொன்பது நண்பர்களுடன், அவருக்கும் மரணதண்டனை தீர்ப்பாக்கியது. ஆட்சிக்கு எதிரே சதி செய்த குற்றத்திற்காக. ஆனால் அது நிறைவேற சில நிமிடங்களுக்குமுன், தண்டனை சைபீரியாவுக்கு நாடுகடத்தலாகக் குறைக்கப்பட்டதால் உயிர்தப்பினார் அவர்.

வல்லமையுள்ள கலைஞனாக மட்டுமின்றி மனித குலத்தின் நிலையான சுகத்தை விரும்பும் புனிதராகவும் விளங்கியர் டால்ஸ்டாய். இந்த விருப்பம், அவரது கற்பனைகளிலெல்லாம் ஒளி வீசுகின்றன. மேலும் இந்தியர்கள் மிகவும் போற்றும் ருஷ்ய, எழுத்தாளரும் அவர்தாம். நம் சுதந்திரத் தந்தை காந்திஜியின் எண்ணங்கள் உருப்பெற டால்ஸ்டாய் இலக்கியம் செய்த உதவி யாவருக்கும் தெரிந்ததே.

கற்பனைச் செல்வத்தோடு சிந்தனைக் களஞ்சியத்தையும் ருஷ்ய மொழிக்கு அளித்துவிட்டுச் சென்றார் அவர். உலக இலக்கியத்தில் ருஷ்யாவை மதிப்போடு பார்க்க வைத்ததே டால்ஸ்டாயின் சேவைதான், என்றால் மிகையல்ல. அந்நிய மொழிகளிலே அதிகம் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதும் அவரது நூல்கள் தாம்.

'யுத்தமும் சமாதானமும்', 'அன்னா கரீனா' 'இவாள் இவிப்பின் மரணம்', 'என் குற்ற சம்மதங்கள்', 'இனி நாம் என்ன செய்ய வேண்டும்?', முதலியன உலக இலக்கியத்திலேயே தனியிடம் பெற்றிருப்பவை. இவை தவிர, எத்தனையோ சிறு கதைகளும் நாடகங்களும் அவர் இயற்றியிருக்கிறார்.

எனினும் டால்ஸ்டாய்க்கு போதிய ஆதரவும் புகழும் ருஷ்யாவில் இருக்கவில்லை என்பது வியக்க வைக்கும் உண்மை. 'அன்னா கரீனா' இயற்றிய பின் கலைஞன் இறந்து விட்டான், பின் வாழ்ந்தது டால்ஸ்டாய் என்னும் மனிதனே', என்று இன்னும் சில ருஷ்ய விமர்சகர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

டால்ஸ்டாய் மனிதத் தன்மையின் கலங்கரை விளக்கம். கருணையின் வடிவம், அதற்கு ஒரு சான்றுதானே 'யுத்தமும் சமாதானமும்?'

டால்ஸ்டாயின் பாதையைப் பின்பற்ற எழுத்தாளர்கள் யாரும் முன்வரவில்லை, ஒருவரைத் தவிர, நிகோலஸ் ஸெம்யோனோவிச்-லெஸ்கோவ் (1831—1896) அவரும் சிறந்த எழுத்தாளர் தாம். லெஸ்கோவுக்கு டால்ஸ்டாயிடம் மதிப்பு இருந்தது போல் டால்ஸ்டாயும் லெஸ்கோவை மிகவும் ஆதரித்து வந்தார்.

ருஷ்ய இலக்கியம் ஒரு திருப்பத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரம்! பொங்கியெழும் புரட்சி வெள்ளத்தை அதிகாரத்தின் அணையைக்கட்டி நிறுத்த முடியாது திணறிக்கொண்டிருந்தது அரசாங்கம். ஓர் புது யுகத்திற்கான ஆவேசம் எங்கும் அலையெழும்பிக் கொண்டிருந்தது. இந்த ஆவேசத்தை அமர இலக்கியமாகச் செய்து புரட்சிக்குத் தலைமை தாங்கினர் புகழ்பெற்ற எழுத்தாளர்கள். கார்க்கி, செக்கோவ், ஆன்ட்ரிவ் லாஸரஸ், வெடர் நிகோவ், புனின், குப்ரின் ப்ரூஸ்லோவ், மயக்கோவ்ஸ்கி, ஸொஷ் செங்கோ முதலானோர்.

ருஷ்ய விமரிசன இலக்கியம் இரு வகைப்பட்டது. கலையழகைப் பற்றியதும், கருத்தழகைப் பற்றியதும். ருஷ்ய விமர்சகர்களில் அதிகமும் கலையழகைத்தான் மதிப்பிடுகிறார்கள். அந்நிய நாட்டு அறிஞர்கள் ருஷ்ய இலக்கியத்தை மிகவும் விமரிசித்திருக்கிறார்கள், கருத்தாழத்திலே கவனம் கொண்டு.

ருஷ்ய இலக்கியத்தின் வளர்ச்சிக்கு. விமர்சனக் கலை செய்துள்ள தொண்டு நிகரற்றது. ★

★ ஜோதிஷக் கட்டுரை

# திருமணமும் செவ்வாய் தோஷமும்

வி. சந்தானம்

**ஒரு பெண்ணின் ஜாதகத்திலோ, ஒரு ஆணின் ஜாதகத்திலோ லக்னத்திலிருந்து ஏழிலோ, எட்டிலோ செவ்வாய் இருந்தால், செவ்வாய் தோஷம் என்ற கூக்குரலைக் கிளப்பி, இரண்டு வீதப் பெற்றோர்களும் வீண் பீதி கொள்ளுகிறார்கள். இக்கட்டுரையில் செவ்வாய் தோஷத்தைப் பற்றிய சில விவரங்கள் கூறப்பட்டுள்ளன.**

ஒரு ஜாதகத்தை ஆராயும்போது திருமணத்தின் பொருட்டு முக்கிய விதி என்னவெனில் லக்னத்திலிருந்து 2, 4, 7, 8, 12-ல் செவ்வாயிருந்தால், செவ்வாய் தோஷம் என நம்பப்படுகிறது. இதே போல சந்திரனிடமிருந்தும், சுக்கிரனிடமிருந்தும், செவ்வாய் அமைந்திருந்தாலும் தோஷம். லக்னத்திலிருந்து இருந்தால் 20 சத வீதம் தோஷமாகக் கருதுகின்றனர். லக்கினத்திலிருந்து ஏழில் செவ்வாயும், சுக்கிரனும் இருந்தால் அந்த யுவதி அல்லது யுவன் சிற்றின்ப விஷயத்தில் மிகவும் காமமுள்ளவர்களாக இருப்பார்கள். ஆகையால் அவர்களுக்குச் சமமான காமமுடையவர்களாக இருப்பவர்களைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும். ஆண் ஜாதகத்தில் ஏழாவதில் செவ்வாயும், பெண் ஜாதகத்தில் ஏழிலும் எட்டிலும் செவ்வாயும் மிகுந்த தோஷமாகும். 2-ம் வீட்டில் குரு போன்ற சுபக் கிரகம் இருந்தால் எட்டாவது வீட்டை அது பார்க்கும். ஆகையினல்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | |
| சூரி புத | | | |
| செவ் ராகு | | | |
| | சனி | லக்கினம் | குரு சந் |

படம் 1

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | ல | சனி சுக் | சந் |
| | | | செ குரு |
| | | | |
| | | ராகு | |

படம் 2

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| | | | |
| | | | ராகு |
| செவ் புத | ல சூ சந் சுக் | குரு | |

படம் 3

| | | | |
|---|---|---|---|
| | செவ் | புத | சூரி சுக் |
| ராகு | | | குரு |
| சந் | | | |
| | | ல சனி | |

படம் 4

சில சமயம் பெண் ஜாதகத்தில் எட்டில் செவ்வாயிருந்தாலும் இரண்டில் குரு இருந்தால் தோஷமில்லை.

பின் வருபவை செவ்வாய் தோஷப் பரிகாரங்கள்.

(1) செவ்வாய் சர ராசியி லிருப்பது.

(2) செவ்வாய் மேஷம், விருச்சிகம், மகரத்தி லிருந்தாலும் சூரியன் – குரு – சனியோடு சேர்ந்து அல்லது பார்க்கப் பெற்றிருந்தாலும் செவ்வாய் தோஷப் பரிகாரமாம். பெண் ஜாதகத்தில் செவ்வாய் எட்டி லிருந்து இரண்டாவதில் சுப கிரகங்கள் இருந்தால், செவ்வாய் தோஷம் கிடையாது.

இருபத்தேழு வயதில் மணம் புரிந்துகொண்டு முப்பத்திரண்டாவது வயதில் மனைவியை இழந்தவரின் ஜாதகம் கீழே கொடுக்கப்படுகிறது. மேற்படி ஜாதகத்தில் செவ்வாய் நாலாவது பார்வையால் ஏழாமிடத்தைப் பார்ப்பதுடன் அதுவே களத்ர ஸ்தானாதிபதியாகிறது. ராகுவும், களத்ர ஸ்தானாதிபதியாகிய செவ்வாயுடன் சேரவே, மேற்படி நபர் தனது மனைவியை இழந்தார். மேற்படி ஜாதகத்துக்கு செவ்வாய் எட்டில் உள்ள பெண்ணைகப் பார்த்து விவாகம் செய்து வைத்திருந்தால், இந்த தோஷம் தவிர்க்கப்பட்டிருக்கும்.

படம் இரண்டில் செவ்வாய், குருவுடன் சேர்ந்து இருப்பதால், செவ்வாய் தோஷம் இல்லாமற் போயிற்று. இந்த நபர் மனைவியுடன் நிம்மதியாக வாழ்க்கை நடத்த இயலும்.

செவ்வாய் கும்பராசி அல்லது சிம்மராசியிலிருந்தால், தோஷம் எதுவும் கிடையாது. இரண்டில் செவ்வாய் இருந்து, அந்த இரண்டாவது வீடு மிதுனமாகவோ, கன்னியாகவோ இருந்தாலும் செவ்வாய் 12-லிருந்து மேற்படி ராசி ரிஷபமாகவோ, துலாவாகவோ இருந்தாலும் தோஷம் கிடையாது. செவ்வாய் நாலில் இருந்து, ராசி மேஷமாகவோ, விருச்சிகமாகவோ இருந்தால் செவ்வாய் தோஷம் கிடையாது. செவ்வாய் ஏழிலிருந்து ராசி கடகமாகவோ மகரமாகவோ இருந்தால், செவ்வாய்

| | | | |
|---|---|---|---|
| | • | | |
| ல | | | சனி ராகு |
| | | | |
| சூரி புத | குரு சுக் | | செ சந் |

படம் 5

| | | | |
|---|---|---|---|
| கேது | ல | சுக் | செவ் சூரி புத |
| | | | சந் |
| • | | | குரு சனி |
| • | : | : | ராகு |

படம் 6

தோஷம் கிடையாது. செவ்வாய் எட்டிலிருந்து ராசி தனுர் ராசியாகவோ, மீன ராசியாகவோ இருந்தால் தோஷம் கிடையாது.

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் எட்டாவது வீடு மாங்கல்ய ஸ்தானத்தைக் குறிக்கும். அதில் செவ்வாயிருந்தால் அவள் இளவயதிலேயே, (18, 19ல்) விதவையாகி விடுவாள். மேற்படி பெண்ணிற்கு ஏழில் செவ்வாய் உடைய ஆண் பிள்ளையின் ஜாதகத்தையே பொருத்த வேண்டும்


இங்குள்ள படம் 3-ல் சந், சுக், லக்னம் மூன்றிலிருந்தும் செவ்வாய் இரண்டிலிருக்கிறது. குருவின் பார்வை ஏழில் விழவில்லை. ஆகையினால் தன் இருபத்தெட்டாவது வயதில் மனைவியை இழந்தார்.

படம் 4-ல் இருப்பது ஒரு ஆணின் ஜாதகம் செவ்வாய் ஏழிலிருப்பதும், சனியும் ஏழாமிடத்தைப் பார்ப்பதாலும் மனைவியை இழந்தார்.

படம் 5-ல் இருப்பது ஒரு பெண்ணின் ஜாதகம். மாங்கல்ய ஸ்தானமாகிய எட்டில் செவ்வாய் இருப்பதாலும், சனி 3-வது பார்வையால் எட்டைப் பார்ப்பதாலும் தனது பத்தொன்பதாவது வயதில் கணவரை இழந்து விதவையானாள்.

படம் 6-ல் இருப்பது ஒரு ஆண் ஜாதகம். லக்னத்திலிருந்து ஏழில் செவ்வாய் இல்லை. சுக்கிரனிடமிருந்து இரண்டில் செவ்வாயிருக்கிறது. சந்திரனிடமிருந்து பன்னிரண்டில் செவ்வாய் இருக்கிறது. சனி, 3-வது பார்வையால் ஏழாமிடத்தைப் பார்க்கிறார். ஆகையினால் தன் 24-ம் வயதில் தாரத்தை இழந்தார். ஆண் பிள்ளைகளின் ஜாதகத்தில் எதில் லக்கினத்திலிருந்து ஏழில் செவ்வாய் இருக்கிறதோ அதற்கு த்விகளத்ர ஜாதகம் எனப்பெயர்.

ஜோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த செவ்வாய் தோஷத்தை எண்ணி மிகவும் பீதியடைகிறார்கள். மேலே கூறப்பட்டுள்ள சில முறைகளை உன்னிப்பாகக் கவனித்தால், நம்மாலியன்றவரை நம் திருப்திக்கு திருமணத்தின் மூலம் நிம்மதி காணலாம். ★



# யானையின் வாழ்க்கை

பி. ஜி. மங்கை

இயற்கை அழகிலும், இலக்கியத் துறையிலும் இந்திய சிற்பப் பொக்கிஷத்திலும், நவ நாகரீகத்திலும், கலை வளர்ச்சியிலும் இன்று சிறந்து விளங்குவது மைசூர்தான்! என்னுடைய உறவினர் 'மாணன்பாடி' என்ற ஊரிலே காட்டிலாகா அதிகாரியாயிருந்ததால், அவரைக் காணச் சென்றிருந்தேன். அவருடன் இரண்டு வாரம் தங்கியிருந்த காலத்திலே கண்டறியாதன கண்டேன்! களிப்படைந்தேன்!! அடர்ந்த காடுகளும் சோலைகளும், அநேக சிற்றாறுகளும், காண்பதற்கு மிகவும் ரமணீயமாக இருந்தன.

மலைக் காடுகளில் உள்ள பரந்த சமவெளிகளிலும், சுனைகளிலும் யானைக் கூட்டங்கள் காணப்பட்டன. அந்தக் காட்சி நம் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும் காட்சியாகும். யானைக் கூட்டங்

களுக்கு எப்பொழுதும் வழி காட்டியாக ஒரு பெண் யானையே இருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

யானைக் குட்டிகள் மிகவும் விளையாட்டுப்புத்தியுடையவை. அவைகள் செய்யும் விஷமங்களோ சகிக்க முடியாதவை. சுனைகளிலே யானைக் குட்டிகள் இறங்கி விட்டால், லேசிலே கரையேறுவதில்லை. தண்ணீரைக் கலக்கி சகதியாக்கும். தாய் யானைமீது தண்ணீரை இறைத்து இறைத்து மகிழ்ச்சியடையும். கத்தும். வெற்றிக் களிப்பும், மகிழ்ச்சியும் தொனிக்கப் பலமுறை பிளிறும். யானைக் குட்டிகள் அவைகளின் தாயிடமிருந்து பிரிந்து போவதில்லை. குட்டிகளுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டாலும் நேரிடலாம் என தாய் யானை, குட்டி யானையைக் கண்ணும் கருத்துமாகவே கவனித்துக் கொள்ளுகின்றது.

பெண் யானை ஒன்று குட்டி போட்டவுடன் மற்ற யானைகள் அதனைச் சூழ்ந்துகொண்டு ஒரே மூச்சாகப் பிளிறுகின்றன. அந்தச் சப்தம் பெரும்பாலும் நட்ட நடுநிசியிலே கேட்கின்றது. மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை நல்ல உஷ்ண நாட்களில் தான் பொதுவாக யானைகள் குட்டி போடுகின்றன.

### கர்ப்ப விசேஷங்கள்!

பெண் யானை கருத்தரித்து 22 மாதங்கழித்துத்தான் குட்டி போடுகின்றது. பெண் யானை தான் கர்ப்ப முற்றிருப்பதை பத்து மாதம் கழித்துத்தான் உணருகிறது. மனிதரின் கர்ப்ப காலத்தைப்போல இரண்டு மடங்குக்கும் மேலாகும். பத்து மாத காலத்திற்குப் பிறகு பெண் யானை தான் கருவுற்றிருப்பதை அறிந்ததும், ஆண் யானையின் துணையை நீக்கிவிட்டு, மற்றொரு பெண் யானையைத் தன்னுடைய துணைக்கு வைத்துக் கொள்ளும். அதிலிருந்து அவ்விரண்டு பெண் யானைகளும் ஒன்றாகவே யிருக்கும். இந்தக் குணம் மிருகங்களிடம் இயற்கையிலேயே அமைந்துள்ள 'காத்துக்கொள்ளும்' சக்தியைத்தான் தெரியப்படுத்துகின்றன. பெண் யானை குட்டி போட்டதும் கர்ப்ப காலத்திலே துணையிருந்த பெண் யானை தான் அதனைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளுகிறது. குட்டி யானை தன் தாயின் பாலை உண்டு தான் வளர்கின்றது. மூன்று முதல் ஐந்து வருடங்கள் வரையிலேயும், அதற்கு மேலும் குட்டிகள் தங்கள் உணவைத் தாமே தேடிச் சாப்பிடும் வரையிலும் தாய் யானை தன் குட்டிகளுக்குப் பாலூட்டி வரும்.

•

### தாயன்பு!

ஒரு சமயத்திலே காட்டு யானைகள் பிடிக்கப்பட்ட போது ஒன்றரை வயது யானைக் குட்டியும் சிக்கியது. இதை வளர்ப்பதற்காகக் கொண்டு வந்தார்கள். இந்த யானைக் குட்டியின் தாயானது கானகம் எங்கும் சுற்றி யலைந்து திரிந்த பிறகு, பிடிக்கப்பட்ட யானைகள் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. பலமாகப் பிளிறிக் கொண்டே தாய் யானை தனது குட்டியைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டது. குட்டியிடம் விரைந்து ஓடியது; தாயன்பைக் காட்டு முகமாக வெற்றிக் களிப்புத் தொனிக்க பல முறை பிளிறியது. தாய் யானையின் கண்களிலிருந்து மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகி வழிந்

தாடியது. அது தும்பிக்கையினுல் குட்டியைக் கட்டிக் கொஞ்சியது. உணவும் ஊட்டியது! தன் குட்டியுடனேயே அந்தத் தாய் யானையும் அங்கேயே தங்கிவிட்டது. என்னே தாயன்பு!

சாமுண்டி...!

'சாமுண்டி' என்ற அந்த யானைக்குட்டிக்கு எருமைப் பால், வாழைப்பழம் எல்லாம் கொடுக்கிருர்கள். பிரியமாகச் சாப்பிட்டுவிட்டு தோட்டமெல்லாம் சுற்றித் திரிகிறது. வீட்டிலுள்ள குழந்தைகளோடு குழந்தையாகக் கொஞ்சி விளையாடுகிறது. எஜமான் கோபமாக முழித்துப் பார்த்துச் சப்தம் போட்டால் பெட்டிப் பாம்பாக அடங்கி, துதிக்கையினுல் ஒரு வணக்கம் செலுத்தி அமைதியாக நின்று விடுகிறது. படத்தைப் பாருங்கள்! எஜமானரிடம் மிகவும் அடக்கத்துடன் சாமுண்டி துதிக்கையினுல் வணக்கம் செலுத்தி நிற்பதைக் காணலாம்.

காட்டுக் குழந்தையான 'சாமுண்டி' மிகவும் ரோஷமும், மானமும் உடையது. ஒரு முறை எஜமான் கோபமாகக் கண்டித்தால், அன்று முழுவதுமே அது விஷமம் செய்யாது. அமைதியாக இருக்கும். எஜமானரே உணவு அளித்தால்தான் ஏற்றுக்கொள்ளும். பசுவின் கன்றை வளர்ப்பதைப்போல் யானைக்குட்டியை வளர்ப்பதும் மிகவும் இன்பமாகவே இருக்கின்றது. யானைகளின் பிறப்பும் வளர்ச்சியும் மிகமிக விசித்திரமானது!

★

## இந்திய விஞ்ஞானியின் சாதனை

பருத்திச் செடிகளையும் பழமரங்களையும் தாக்கிச் சேதம் விளைவிக்கும் செஞ்சிலந்தியைக் கொல்லும் மருந்தை டாக்டர் ஆர். கோஷ் என்ற இந்திய விஞ்ஞானி கண்டு பிடித்திருக்கிருர். 'டெட்ராம்' என்ற பெயரில் இந்த மருந்து விற்பனைக்கு வந்திருக்கிறது.

பழச் செடிகளைத் தாக்கும் செஞ்சிலந்தியையும் வேறு சில பூச்சிகளையும் கொல்ல புதியதோர் மருந்து தேவை என்ற நிலை 1947-ம் ஆண்டிலேயே ஏற்பட்டது. டீ.டி.டி., பாராதியான் போன்ற பூச்சிக்கொல்லிகளுக்குத் தப்பி வாழ்ந்தது இந்தச் செஞ்சிலந்தி. செஞ்சிலந்தியை ஒழிக்க இந்த மருந்துகள் விசப்பட்ட இடங்களில், செஞ்சிலந்தி சாகவில்லை, அவற்றைத் தின்று வாழும் வேறு பூச்சிகள் தான் இறந்தன! ஆகவே இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸின் விஞ்ஞானிகள், இங்கிலாந்தில் ஜீலட் ஹில் என்னுமிடத்திலுள்ள சோதனைக் கூடத்தில் ஆராயத் தொடங்கினுர்கள். இந்தச் சோதனைக் கூடத்தைச் சேர்ந்த டாக்டர் கோஷ் 1949-ல் தமது ஆராய்ச்சியில் வெற்றி கண்டார்.

★ விஞ்ஞானக் கட்டுரை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# அணு சக்தி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஜே. பாபா

*இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் ஹோமி ஜே. பாபா உலக வரலாற்றை விஞ்ஞானியின் கண் கொண்டு ஆராய்ந்து வெளியிடும் சில கருத்துக்களை இக் கட்டுரையில் காணலாம்.*

**உ**லக வரலாற்றில் மூன்று பெரிய காலங்களைக் காணலாம்; இம் மூன்றும் மூன்று யுகங்களாகும். முதல் யுகம் யூப்பிரட்டீஸ், சிந்து, நைல் என்னும் ஆறுகளை அடுத்து வாழ்ந்த மக்களின் பழைய நாகரிகங்கள் முகிழ்த்த காலம். இரண்டாவது யுகம் தொழிற் புரட்சி தோன்றிய காலம்; இதனால் உருவானதே நாம் வாழும் நாகரிக யுகம். மூன்றாவது யுகம் இப்போதுதான் தொடக்கம்; இதுதான் அணு சக்தியைக் கண்டு பிடித்து அணு யுகம் அரும்பியுள்ள காலம்.

அன்றாட வாழ்க்கைக்கு சக்தி இன்றியமையாதது. நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய செயல்களெல்லாம் சக்தியின்றி நடைபெறா. சக்தியில்லாமல் உயிர் வாழ்தலும் இல்லை.

இனி, முதல் யுகத்தைப் பார்ப்போம். மனிதன் இவ்வுலகில் தோன்றி 2,50,000 ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனினும் நமக்குத் தெரிந்த ஆதி நாகரிகங்கள் 8,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவையே. விவசாயம், ஆடு மாடு, கோழி வளர்த்தல், நெசவு, மட்கலம் வனைதல், செங்கல் அறுத்தல், உலோக வேலை இவற்றை வைத்து உருவானவை அந்தப் பழைய நாகரிகங்கள்; மனிதன்



ஜே. பாபா

★★★★★★★★★★★★★★★★

***அமெரிக்காவில் சமாதான கால அணுசக்தி அபிவிருத்தி, இப்பொழுது தேசத்தின் சகல ஆராய்ச்சி அபிவிருத்தி பொருளாதாரத்தின் மிகவும் பெரிய ஒரு அம்சமாக இருக்கிறது. ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும், அணு சக்தி யந்திர சாலைகளை நிர்மாணம் செய்வதற்கும், அமெரிக்க அணு சக்திக் கமிஷன் வருஷத்திற்கு 12,8 கோடி டாலர் செலவு செய்கிறது.***

★★★★★★★★★★★★★★★★

இந்தத் தொழில் திறமைகளையெல்லாம் அடைவதற்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. மனிதன் அந்தத் திறமைகளை அடைந்ததையும் அந்தப் பழைய நாகரிகங்கள் தோன்றியதையும் மனித வரலாற்றின் முதற் பெரிய யுகத்தின் தோற்றமாகக் கருத வேண்டும்.

இந்தப் பண்டைய நாகரிகங்களைக் கடைபிடித்த மக்களுக்குள் நடையுடை பாவனை, பண்பாடு, சமூக அமைப்பு ஆகியவற்றில் பல வேறுபாடுகள் இருந்தன என்றாலும் அந் நாகரிகங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையான ஒற்றுமை ஒன்று உண்டு. உழுதல், நீர் இறைத்தல், பாரம் தூக்கிச் செல்லல், ஊர்வழி போதல் முதலிய வேலைகளுக்கு வேண்டிய சக்தி அனைத்தும் மனிதனுடைய உடல்வலிமையாலும் மிருகங்களின் உடல் உரத்தாலும் கிடைத்ததேயாகும். இரசாயன சக்தி, உதாரணமாகக் கட்டைகளை எரித்துப் பெறும் சக்தி, சமையலுக்கும், பொருள்களைச் சுடவைப்பதற்கும், ஓரளவு உலோக வேலைக்கும் மட்டுமே பயன்பட்டது.

இவ்வாறு சக்தி குறைவாகக் கிடைத்தால் அது நாகரிக வளர்ச்சியைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவன் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் கடுமையாக உடல் வருந்தி உழைத்தாலும் அவன் செய்யும் பயனுள்ளவேலை சுமார் ஒரு ''கிலோவாட் மணி'' அளவே இருக்கும். இது அவன் பிழைத் திருப்பதற்குப் போதுமே ஒழிய அதற்குமேல் அதிகம் இல்லை. ஆனால், இன்று தொழில் வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் ஆள் ஒன்றுக்கு நாளொன்றுக்குப் பயன்படும் சக்தி சுமார் இருபது ''கிலோ வாட் மணி'' அளவும் அதற்கு அதிகமுமாகும்.

ஆகவே, அக்காலத்தில் மக்களில் மிகச் சிறுபான்மையினரே மற்றவர்களுடைய உழைப்பில் அவரவர் தேவைக்குப் போக மீதமுள்ளதையெல்லாம் கூட்டித் தாமே பயன்படுத்திக் கொண்டு மிகச் சௌகரியமாகவும் உயர்ந்த கலாச்சார வசதிகளுடனும் வாழ முடிந்தது. பண்டைய நாகரிகங்கள் அத்தனையையும் தாங்கியது அடிமைகளின் உடல் உழைப்பே; அடிமைகள் இல்லையெனில், சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு வகுப்பாரின் உடல் உரம் அவ்வாறிருந்திருக்கா. இதனை நாம் சில சமயம் மறந்து விடுகிறோம். கிடைக்கக்கூடிய சக்தி குறைவாக இருக்கும்போது. நாகரிகத்தின் பயன்கள் சிலருக்கே கிடைக்க முடியும்.

பதினேழாம் நூற்றாண்டிலும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் விருத்தியடைந்தது முதல்தான் இந்தச் சமூக அமைப்பு மாறத் தொடங்

கிற்று. இரசாயன சக்தியும், விசேஷமாக பூமிக்கு அடியில் கிடந்த நிலக்கரி, எண்ணெய் வாயு ஆகியவையும் எங்கும் பயன்படலாயின; இதுவே இந்த இரண்டாவது பெரிய யுகத்திற்கு அறிகுறி. இதனால் தொழிலியல் அமைப்பான சமூகம் தோன்றிற்று; இந்த யுகத்தின் தனி இயல்பு இது. மிகவும் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள ஒரு நாட்டில் இன்று ஆளொன்றுக்கு, நாளொன்றுக்கு 23 கிலோவாட் மணி அளவு சக்தி பயனுகிறது. இது 45 அடிமைகளின் உடல் உழைப்புக்கு ஒப்பாகும். தொழில் வளர்ச்சி அடைந்துள்ள இன்னொரு நாட்டில் இது இன்னும் சுமார் இரண்டு மடங்காக உள்ளது.

இந்த உலகத்தில் செலவாகும் சக்தியின் அளவு எவ்வளவு கூடியிருக்கிறது என்று கண்டால், திகைக்க வைக்கும். சுமார் மூவாயிரத்து முந்நூறு கோடி டன் நிலக்கரியைச் சுட்டுக் கிடைக்கும் சக்தியை ''அ'' என்ற எழுத்தால் குறிப்பிடுவோம். கிறிஸ்துவுக்குப் பிறகு நடந்த பதினெட்டாம் நூற்றுண்டு வரை செலவான சக்தியனைத்தையும் கூட்டிப் பார்த்தால், சராசரி ஒவ்வொரு நூற்றுண்டிலும் ''1/2அ''வே செலவாகியிருக்கிறது. ஆயினும் 1850-க்குள் சக்தி செலவாகும் வேகம் நூற்றுண்டுக்கு ஒரு ''அ''வாக உயர்ந்து விட்டது. இன்று அவ்வேகம் நூற்றுண்டுக்கு 10 ''அ''வாகும்.

செலவாகும் சக்தியின் அளவு இவ்வாறு மலைக்க வைக்கும் வகையில் உயர்ந்திருப்பதற்கு ஒரு காரணம், உலக ஜனத்தொகை வேகமாக உயர்ந்து வருவதாகும் என்று சொல்லலாம். உண்மை. உலக ஜனத்தொகை கி. பி. 1-ம் ஆண்டில் சில பத்து கோடிகளாக இருந்தது என்றும், 1900ம் ஆண்டில் 150 கோடியாயிற்று என்றும், 1930-ல் 200 கோடியாயிற்று என்றும், 1950-ல் 230 கோடி ஆயிற்று என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இன்னும் 50 ஆண்டு ஆவதற்குள் இந்த நூற்றுண்டின் இறுதியில் அது 350 கோடிக்கும் 500 கோடிக்கும் இடையே இருக்கும் என்பது நிபுணர்கள் கணக்கு.

ஆயினும், ஆளொன்றுக்குச் செலவாகும் சக்தியும் ஆண்டொன்றுக்கு 2 அல்லது 3 சதவிகிதம் வீதம் உயர்ந்து வந்திருக்கிறது. உலகில் பெருவாரியான ஜனத்தொகையுள்ள வளர்ச்சியடையாத பிரதேசங்கள் தொழில் மயமாய் ஆக ஆக, அது இன்னும் வேகமாக உயரும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்று உலகில் செலவாகும் ஏராளமான சக்தியில் சுமார்

★★★★★★★★★★★★★★★

**மலிவில் போட்டியிடத்தக்க முறையில் ஒரு அணு மின்சார நிலையத்தைக் கட்டி, இயங்கச்செய்வதற்கு முன் அமெரிக்கா மேற்கொண்டு 10லிருந்து இருபது வருஷ ஆராய்ச்சி நடத்தியாக வேண்டும். இத்தகைய அணு மின்சார நிலையமானது கட்டப்பட்டு, சாதாரணமாக இருக்கும் கைத்தொழில், முதலிடு பழக்கங்களை யனுசரித்து இயக்கப்படுகையில், மின்சார உற்பத்திக்கு ஆகும் செலவு இதற்குப் பதிலாக அதே சமயத்தில் அதே இடத்தில் வழக்கமான சிறந்த முறைப்படி அமைக்கப்படும் நிலையம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுக்குச் சமமாகவோ அல்லது அதற்கு குறைவாகவோ இருக்க வேண்டும்.**

★★★★★★★★★★★★★★★

80 சத விகிதம் நிலக்கரி, எண்ணெய், வாயு இவற்றை எரித்துப் பெறுவதாகும். நீர் மின்சார விசைச் சக்தி கொடுப்பதெல்லாம் மொத்தத்தில் ஒன்றரைச் சத விகிதத்துக்கும் குறைவே; இது எந்நாளும் குறைவாகத்தான் இருக்கும் என்றே தோன்றுகிறது. எனவே, உலகத்தில் சக்தி அதிகம் தேவைப்படத் தேவைப்பட மண்ணுக்கடியிலிருந்து கிடைக்கும் எண்ணெய், நிலக்கரி முதலியவை அதிகரிக்க அதிகரிக்கப் பயன்பட வேண்டும்; புதிதாய் ஏதாவதொரு வழியில் சக்தி பெறுவதற்கு வகை கண்டுபிடித்தால் ஒழிய, எண்ணெய், நிலக்கரி போன்றவைதான் அதிகமதிகமாகச் சக்தி கொடுக்க வேண்டும். ஆனால், உலகத்தில் சக்தி செலவாகும் வேகம் அதிகமாவதைப் பார்த்தால், மண்ணுக்குள்ளிருக்கும் இந்தப் பொருள்கள் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே தீர்ந்து போனாலும் போகக் கூடும். சுமார் 25 கோடி ஆண்டுகளாக இயற்கை சேர்த்து வைத்த இந்த எரி பொருள்களை நாம் சில நூற்றாண்டுகளில் தீர்த்து விடுகிறோம். பூமியின் வயதைக் கணக்கிட்டால் ஒரு நொடிப் பொழுதில் இவற்றைத் தீர்த்து விடுகிறோம் என்னலாம்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது, ஒரு உண்மை புலப்படும். இருக்கும் எரி பொருள்களை எரித்துத் தீர்த்துவிட்டோம்; என்றும் நம்முடைய நாகரிகம் அணைந்து போகாமல் விளங்க வேண்டுமானல், சக்தி தரக்கூடிய புதிய ஒரு வழியைக் கட்டாயம் கண்டுபிடித்தேயாகவேண்டும்.

எனவே, அணுசக்தியைக் கவனிக்கின்றோம். பின் தங்கிய நாடுகள் முழுவதும் தொழில் மயமாவதற்கும் நமது நாகரிகம் அழியாமல் இருந்து மேலும் வளர்வதற்கும் அணு சக்தி வெறும் ஓர் உதவி மட்டும் அல்ல; அது தீராமல் கட்டாயம் வேண்டிய ஒன்றாகும். மனிதன் அணு சக்தியை வெளியிடவும் பயன்படுத்தவும் அறிந்து கொண்டது உலக வரலாற்றில் மூன்றாவது பெரிய யுகத்தின் தோற்றமாகும் என்று உணர்தல் வேண்டும்.

அணுவிலிருந்து மின்சாரம் தோற்றுவிக்கும் விசைச் சக்தி நிலையங்கள் பல அடுத்த பத்தாண்டுக் காலத்தில் உலகில் பல இடங்களில் நிறுவப்படும் என்பது பற்றிச் சற்றும் ஐயம் இல்லை. உலகத்தில் தேவைப்படும் விசைச் சக்தியை அணுப் பிளவினால் தோன்றும் சக்தி ஓரளவு கொடுக்கும்; இப்போது நம்முடைய வாழ்நாளில் தொடங்குகின்ற இந்த முக்கியமான காலம் இனி அணுயுகத்தின் பண்டைய காலம் என்றும் கருதப்படலாம். ஏனெனில் அணுசக்தியை, அணுப் பிளவினால மட்டும் அன்றி, ஹைட்ரஜன் குண்டில் செய்வது போல, அணுப் பிணைப்பினாலும் பெறலாம் என்பது நன்கு தெரிந்ததே.

அணுப் பிணைப்பினால் உண்டாகும் சக்தியைக் கட்டுப்பாடான முறையில் தோற்றுவிக்கும் வழி ஒன்று அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் கண்டுபிடிக்கப்படும் என்று துணிந்து கூறுவேன். அப்படிக் கண்டுபிடித்ததும், சக்தியைப் பற்றிய பிரச்னைகளெல்லாம் உண்மையாகவே தீர்ந்து விடும். ஏனெனில் பரந்த கடலிலே கன

மான ஹைட்ரஜன் எவ்வளவு ஏராளமோ அவ்வளவு ஏராளமாக அந்த எரி பொருளும் கிடைக்கத் தொடங்கி விடும்.

அணுசக்திக்கு ஆதாரமான விஷயங்களெல்லாம் இரண்டாவது உலகப் பெரும் போருக்கு முன்னர் பல நாட்டு விஞ்ஞானிகளும் ஒருவரோடு ஒருவர் தங்கு தடையின்றி ஒத்துழைத்துக் கண்டு பிடித்தவையே. இவ்வாறு அவர்கள் தாம் தாம் அறிந்ததை மற்றவர்களுக்கும் அறிவித்துக் கொள்வது யுத்தத்தால் தடைப்பட்டுப்போயிற்று. பெரும்பாலும் அதன்பின் சில நாடுகளிலே இரகசியமாகத்தான் அணு சக்தி பற்றிய தொழில் நுட்பம் அபிவிருத்தியாயிற்று.

ஜனாதிபதி ஐஸன்ஹாவர் துணிச்சலாக முனைந்ததால், 1955 ஆகஸ்டில் ஜெனிவாவில் கூடிய சர்வதேச சமாதான அணுசக்தி மகாநாடு ஏற்கனவே, இரகசியப்படுத்தும் இந்தத் தடைகள் பலவற்றைத் தகர்த்து விட்டது. அணு சக்தித் துறையில் அறிவுப் பரிவர்த்தனை தொடர்ந்து நடந்து வருகிறது. அணுபிணைப்பினால் கிடைக்கும் அணுசக்தியை அடக்கியாளுவதற்கு சோவியத் யூனியனில் நடக்கும் வேலையைப் பற்றி பிரபல ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் அண்மையில் ஹார்வெலில் விவரித்துரைத்தார். இதுவும் இரகசியம் என்னும் தடை அகன்று வருவதற்கு ஒரு சான்றாகும். இன்னும் இருக்கும் தடைகளும் படிப்படியாய்க் குறைந்து மறைந்துபோம் என்று நம்புவதற்கு நியாயம் இல்லாமல் இல்லை.

சர்வதேச ஒத்துழைப்பினாலும் தங்கு தடையற்ற அறிவுப் பரிவர்த்தனையினாலும் வேகமாக எழுந்து விரிந்து வரும் அணுயுகத்தில் இனி உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இன்று நாம் காணக்கூடிய எல்லாவற்றிலும் சிறந்த முழுமையும் மகிழ்ச்சியும் நிரம்பிய வாழ்க்கை உண்டாகக் கூடும்.

★

## காலம் செய்யும் ஜாலம்

**கா**லத்தை நாம் பயன்படுத்தினால், காலம் நமக்குக் கை கட்டிச் சேவகம் புரியும். 'நாளை வாழ்வேன்' என்பவன் அறிவிலி. இன்று வாழ எண்ணுவதுகூடக் காலங்கடந்த எண்ணமே. நேற்றே வாழத் தொடங்கினவர், அறிவுடையோர். "காலம் விலைமதிப்பற்றது. இறந்த காலத்தை மீண்டும் பெறுவது இயலுமா? ஆகவே நொடிப் பொழுதைப்பற்றி நீ நன்கு கவனமெடுத்துக்கொள். நிமிடங்களும், மணிகளும் தம்மைத்தாமே காத்துக்கொள்ளும்" என்று செஸ்டர்பீல்டு சொல்கிறார். காலம் செய்யும் ஜாலம் மிகுதி, மிகுதி!

—கலைப்பித்தன்

# எலுமிச்சம் புல்

அ. ராம்கோபால்

உலக மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கில் புல் ஆட்சி செலுத்துகிறது. நாம் உணவாக உண்ணும் நெல், கோதுமை, பார்லி, சோளம், ரை, ஓட்ஸ் முதலிய எல்லாமே புற்களின் விதைகளே! கரும்பும், பிரம்பும் கூட புல் இனத்தைச் சேர்ந்தவையே. உலகில் இன்று மனிதன் புல்லினால் தான் வாழ்கிறான். புல் வகையில் ஆறாயிரத்துக்கு மேல் உண்டு. அவை எல்லாமே நமக்குப் பயன்படக் கூடியவை யல்ல. அவற்றில் பல நமக்கு உணவாகப் பயன்படுகின்றன. தொழில் துறையில் நமக்குப் பயன்படும் புற்களில் எலுமிச்சம் புல்லும் ஒன்று. இதை ஆங்கிலத்தில் 'லெமன் கிராஸ்' எனச் சொல்லுவார்கள்.

இந்த எலுமிச்சம் புல்லிலிருந்து ஒரு வகைத் தைலம் வடிக்கலாம். இத்தைலம் பல வித வாசனை அலங்காரப் பொருள்கள், சோப்பு, மருந்துகள் முதலியவை தயாரிக்க உபயோகமாகிறது. ஆகையால் இத்தைலத்துக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. இதனால் வருடா வருடம் பெரும் அளவில் இத்தைலம் நம் நாட்டிலிருந்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகிறது. இப்புல் முக்கியமாக நம் கேரள ராஜ்யத்தில் பயிர் செய்யப்படுகிறது. அங்கே சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் இப்புல் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து வருடா வருடம் சுமார் 800 டன் தைலம் வடிக்கப்படுகிறது. இத்தைலம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் நம் இந்தியா முதன்மை ஸ்தானம் வகிக்கிறது.

நம் நாட்டு எலுமிச்சம் புல் தைலத்தில் 100-க்கு 80 சதவிகிதத்துக்கு மேல் வாசனைச் சத்து அடங்கியுள்ளது. இவ்வாசனைச் சத்து சாராயத்தில் கரையக் கூடியது. ஆகையால் சாராயத்தில் கரைதது அதைத் தனியாக நீக்கி விடலாம். இச்சத்து சோப்பும் வேறு பல அலங்காரப் பொருள்களும் தயாரிக்கப் பயன்படுகிறது. நம் நாட்டிலும் மேல்நாடுகளிலும் செயற்கை விடமின்கள் தயாரிக்கவும் இச்சத்து ஓரளவு பயன்படுகிறது. கொசு கடிக்காதிருக்கப் பூசிக் கொள்ளும் "மஸ்கிடோ கிரீம்" எனப்படும் கிரீமும் செய்ய இது பயன்படுகிறது.

இப்புல் நம் மேற்குமலைக் காடுகளில் வெகு காலமாகத் தன் இச்சையாக வளர்ந்து வருகிறது. சமீப காலத்தில் இதை நட்டுப் பயிரிடவும் தொடங்கியுள்ளனர். நம் நாட்டைப் போன்ற வேறு பல வெப்ப நாடுகளிலும் இப்புல் தன்னிச்சையாக வளருகிறது. இப்புல்லில் சுமார் 80 வகைகள் உண்டு. ஆனால், நம் மேற்குமலைக் காடுகளில் இரண்டே வகைப் புற்கள்தான் வளருகின்றன. இப்

புற்களை அங்கே இஞ்சிப் புல் எனவும் சொல்லுவார்கள். மலபார் ஜில்லாவில் கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு). வைநாடு முதலிய பகுதிகளிலும் சமீப காலத்தில் இப்புல்லை நட்டுப் பயிரிடத் தொடங்கியுள்ளனர்.

கேரள ராஜ்யத்தில் ஓதக்களி என்னுமிடத்தில் இப்புல் பற்றி ஆராய, ஆராய்ச்சி நிலையம் ஒன்றிருக்கிறது. அந்நிலையத்தில் இப்புல் பற்றி நீண்ட நாள் ஆராய்ச்சிகள் செய்ததன் பயனாக இப்பொழுது ஒரு உண்மை தெரிய வந்துள்ளது. இப்புல்லில் சிகப்புத் தண்டு உள்ளது. ஒரு வகை வெள்ளைத் தண்டு உள்ளது மற்றொருவகை. இவ்விரண்டில் வெள்ளைத் தண்டு உள்ள புற்களிலிருந்து வடிக்கப்படும் தைலம் மட்டரகமாக உள்ளது. சிகப்புத் தண்டு உள்ள புற்களிலிருந்து வடிக்கப்படும் தைலம் உயர்வானது. சிகப்புத் தண்டிலிருந்துவடித்த தைலத்துடன் மட்டமான தைலம் சிறிதளவு கலந்து விட்டால் கூட அத்தைலம் மட்டரகமாக மாறி விடுகிறது. சிகப்புத் தண்டுள்ள புற்களோடு கூடிய வெள்ளைத் தண்டுள்ள புற்களை பூரணமாக நீக்கி விடுவதே இத்தொழில் சிறக்க சிறந்த வழியாகும். ஓதக்களி ஆராய்ச்சி நிலையத்தில் நல்ல ஜாதி சிகப்புத் தண்டு புல் விதைகள் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு விற்கிறார்கள். விருப்பமுள்ளவர்கள் அங்கே விதை வாங்கிப் பயிரிடலாம்.

*1956*-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து எலுமிச்சம் புல் தைலத்தை தரம் வாரியாகப் பிரிப்பதும் "அக்மார்க்" முத்திரையிடுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தைலத்தைத் தரவாரியாகப் பிரிக்கும் போது அதில் அடங்கியுள்ள வாசனைச் சத்தின் அளவும் சோதித்து நிர்ணயித்து குறிக்கப்பட்டு விடுகிறது. மேல்நாட்டவர் நம்பிக்கையாக வாங்கத் தூண்டுதலாக இது அமைகிறது. இதனால் வெளிநாடுகளில் நம் தைலத்துக்கு இப்பொழுது படிப்படியாக கிராக்கி வலுத்து வரத் தொடங்கியுள்ளது. நம் நாட்டுத் தைலத்தில் பெரும் பகுதி அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மூன்று நாடுகளுக்கே ஏற்றுமதியாகி வந்தது. ஆனால் இப்பொழுது ஜெர்மனியும் நம் நாட்டிலிருந்து இத்தைலத்தை வாங்கத் தொடங்கியுள்ளது.

இத்துறையில் நமக்குப் போட்டியாக நிற்கும் நாடுகள் க்வாதெமாலா, ஹோன்டுராய், ஹெய்தி, ட்ரினிடாட் முதலியவையாகும். அந்நாடுகளில் இப்புல் பயிரிடும் பரப்பையும் அதிகரித்து வருகிறார்கள். ஆகையால் நம்நாடு இப்போட்டியை சமாளிக்க வேண்டுமானால், நாமும் இக்கிருஷியின் பரப்பை விஸ்தரிக்க வேண்டும். விஸ்தரித்தால் மட்டும் போதாது. நல்ல கலப்படமில்லாத உயர்வான தைலமாக மிக மலிவான விலையில் உற்பத்தி செய்ய வேண்டும். போட்டியைச் சமாளிக்க இது ஒன்றே சரியான வழி.

நம் நாட்டில் சாதாரணமாகத் தைலம் வடிக்கக் கையாளும் முறை மிகவும் பழமையானது. தற்காலத்துக்கு ஏற்றதல்ல. தற்சமயம் தைலம் வடிக்கப்பயன் படுத்தப்படும் வாலை இயந்திரங்கள் *6* அடி உயரமும் மூன்றடி குறுக்களவுமுள்ளவை. இவை சாதா

ரணமாகச் செம்பால் செய்யப்பட்டிருக்கும். புற்களைத் துண்டு துண்டாக வெட்டி, சிறு சிறு கட்டுகளாகக்கட்டி இயந்திரத்துக்குள் அடுக்குவார்கள். ஒரு தடவைக்கு சுமார் 700 ராத்தல் புல் வீதம் அடுக்கலாம். புற்களை அடுக்கி முடிந்ததும் அதில் சுமார் 40 காலன் (100 படி) தண்ணீர் விடுவார்கள். பிறகு பாத்திரத்தின் வாயை மூடி கொதிக்க வைத்துத் தைலம் வடிப்பார்கள். தைலம் வடிய 5, 6 மணி நேரம் அடுப்பு எரிய வேண்டியிருக்கும். 700 ராத்தல் புல்லிலிருந்து சுமார் 22 அவுன்ஸ் தைலம் கிடைக்கும். இதுதான் இப்பொழுது கையாளப்பட்டு வரும் முறை. இப்பொழுது தைலம் வடிக்க நவீனமுறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பழைய முறையை விடச் சிறந்தது. அதிகமான உயர்வான தைலமும் கிடைக்கும் தைலம் வடிக்கும் நவீன முறைபற்றி விரிவான விவரம் வேண்டுவோர் 'லெமன்கிராஸ் ஆயில் ரிசர்ச்சென்டர்' ஓதக்களி, கேரளம் அல்லது காரிய தரிசி, சி. எஸ். ஆர் ஓல்டுமில் ரோடு, நியூ டெல்லி அல்லது டைரெக்டர், ஹார்கோர்ட் பட்லர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிடியூட், கான்பூர் என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

நம் தமிழ் நாட்டில் நீலகிரி, கோடைக்கானல், மலபார், வைநாடு, சேர்வராயன் மலை, கொல்லிமலை, ஆனைமலை, முடீஸ் முதலிய மலைப்பிராந்தியங்கள் எலுமிச்சம்புல் பயிர் செய்ய ஏற்ற இடங்களாகும். அப்பகுதியில் தேயிலை, ரப்பர், காப்பி, ஏலம், ஆரஞ்சு, இஞ்சி, வாழை போன்ற தோட்டக் கிருஷியில் ஈடுபட்டுள்ள நம்மவர், இப்புல்லைப் பயிர் செய்ய முன் வரவேண்டும் இதனால் அவர்களுக்கு நல்ல வருவாய் கிட்டுவதோடு, நம் தமிழ் நாட்டின் செல்வமும் தொழில் வளமும், வியாபாரமும் பெருக ஏதுவும் ஆகும்.

★

## பல் காப்பாற்றியது!

சார்லி கிரைடர் என்பவர் தெருவில் குறுக்கே நடந்து விட்டார். ஆதலால் கோர்ட்டிலே அவருக்கு இருபது டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. அதைக் கட்ட அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. ஜாமீன் கொடுத்தால் விட்டு விடுவதாகவும், இல்லையேல் சிறைத்தண்டனை கிடைக்கும் என்றும் நீதிபதி சொன்னார்.

உடனே கிரைடர் வாயைத் திறந்தார். ஏதோ ஒரு பொருளை யெடுத்து மேஜையின்மீது வைத்தார். அதை எடுத்துக் கொண்டு நீதிபதி அவரை விடுதலை செய்தார். அதுதான் கிரைடரின் தங்கத்தினாலான பல் செட்!

—கலைப்பித்தன்

# புதுவையில் புதைபொருள்

ஜகதீஸ்வரி நாகராஜன்

ஸ்ரீ அரவிந்தர், பாரதியார், வ. வே. சு. ஐயர் மற்றும் பல தேசிய வீரர்களுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றிய புதுவை மாநகரை இந்த ஜன்மத்தில் ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்ற ஆசை எனக்கு வெகு நாட்களாக இருந்து வந்தது. என் ஆசை பூர்த்தியாகும் சந்தர்ப்பம் என் கணவர் புதுவையில் உள்ள துணி ஆலை ஒன்றில் இஞ்சினீயர் வேலையை ஏற்றுக்கொண்ட பொழுது கிடைத்தது.

ஆனால், சில மாதங்கள் புதுவை வாசத்திற்குப் பிறகு ஏன் இந்தப் புனித (?) பூமிக்கு வந்தோம் என்றாகி விட்டது. எந்தப் பக்கம் திரும்பினாலும் மதுபானக் கடைகளும் தெருப் பக்கங்களில் ஓடும் சாக்கடை நீரின் துர்நாற்றமும் புதுவையின் புனித தன்மையை வெகுவாக பாதித்தது எனக்கு புரியாத சங்கடமாகப் புலப்பட்டது. ஆதலால் கணவருடன் இந்த நகரத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதால், அவருக்கும் எனக்கும் அடிக்கடி சச்சரவு உண்டாகும்.

ஒரு நாட்டைக் குறித்து நல்லது கெட்டது என்று முடிவு செய்யுமுன்பு, அந்நாட்டின் பழைய வரலாற்றை ஆராய்ச்சி செய்வது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். இந்த ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளை அளவுகோலாகக்கொண்டு, நிகழும் காலத்திய சமுதாய வாழ்க்கையை அளந்தோமானால், நாட்டின் நன்மை தீமைகளுக்கு அடிப்படைக் காரணங்கள் ஓரளவுக்கு விளங்கும்.

நிற்க, புதுவை ராஜ்யம் கி. மு. 17வது நூற்றாண்டிலிருந்தே உலகப் பிரசித்தமடைந்த ராஜ்யம். இந் நகரில் அக் காலத்தில் லக்ஷ்மியும் தரும தேவதையும் சரஸ்வதிதேவியும் குடிகொண்டிருந்தார்கள். பாகூர், திருபுவனை என்ற கிராமங்களில் வேதபாடசாலைகள் நிறுவப்பட்டு, நன்கு நடந்திருக்கின்றன என்று ஆராய்ச்சி கூறுகிறது. ஏழைக் குடும்பங்கள் வாடகை இல்லாமல் குடியிருக்க, சத்திரங்கள் செல்வந்தர்களால் கட்டப்பட்டன. இப்பேர்ப்பட்ட சத்திரங்களை இன்றும் புதுவை மாநகரத்தின் சுற்று வட்டாரங்களில் காணலாம். அவைகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கின்றன. ஆனால் வாடகை வசூலிக்கப்படுகிறது.

கி. மு. 2-ம் நூற்றாண்டில் புதுவை, ரோமாபுரிக்கும் இந்தியாவுக்கும் வியாபாரம் நடத்துவதற்கு கேந்திரமாக இருந்திருக்கிறது. புதுவைக்குத் தெற்கில் (புதுவை – கடலூர்

மார்க்கத்தில்) இரண்டு மைல் தூரத்தில் உள்ள ''அரிகமேடு'' என்ற குக்கிராமத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கட்டிடத்தில்கிடைத்தபொருள்களைக் கொண்டு பார்க்கும்பொழுது, புதுவை அந்த நாட்களில் முக்கிய துறைமுகமாக விளங்கி இருக்கவேண்டும் என்பது நிச்சயமாகிறது.

அரிகமேடு இப்போது குக்கிராமமாக இருக்கிறது. ஆனால் அந்த நாட்களில் அதாவது கி. மு. 20-வது நூற்றாண்டில் பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட துறைமுகப்பட்டிணமாக இருந்திருக்க வேண்டும். அரிகமேடு என்ற பெயர் பண்டைக் காலத்தில் அறிங்கன் மேடு என்றிருந்ததாக அத்தாக்ஷிகள் கூறுகின்றன. அறிங்கன் என்பது ஸ்ரீ புத்த பகவானின் நாமம். ஆகையினால் இந்தப் பிரதேசத்தில், பௌத்த மதம் வியாபித்திருக்க வேண்டும்.

இந்த நகரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற மஸ்லின் துணி தயாரிப்பும், மணிகள் செய்யும் தொழிலும் நன்றாக வளர்ந்திருந்தன என்று அங்கு கிடைத்த பொருள்களின் அத்தாக்ஷியைக் கொண்டு சொல்லலாம்.

கற்கள் இழைத்த தங்க ஆபரணங்களை சோதனை செய்கையில் மேனாட்டு — முக்கியமாக ரோமாபுரித் தொழிலாளர்கள் அரிகன் மேட்டில் குடி கொண்டிருக்க வேண்டும். புதைந்து போன கட்டிடத்திலிருந்து மேனாட்டார்கள் அரிகன் மேட்டை முக்கிய வியாபார ஸ்தலமாகக் கொண்டிருந்தார்களென்று தெரிய வருகிறது. இதைக் குறித்து விளக்கமாக சொல்லுவதற்கு நேரமும், ஏடும் அதிகம் செல்லுமாகையால், நேரில் சென்று பார்த்து மகிழ்வதே சிறந்ததாகும்.

அங்கு கிடைத்த மண் பாத்திரங்களை நம் நாட்டில் செய்தவை என்றும், ரோமாபுரியில் செய்து இறக்குமதி செய்யப்பட்டவை என்றும், இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ரோமாபுரியில் செய்யப்பட்டவை மிகுந்த வேலைப்பாடுள்ளதாகக்காணப்படுகின்றன. சில வற்றின் மேலுள்ள முத்திரைகளைக் கொண்டு அக் காலத்தில் ரோமாபுரியில் பிரசித்தி பெற்ற குயவர்களான விபியெனி குடும்பத்தார்களால் செய்யப்பட்டவை,என்று தெரியவருகிறது. உள்நாட்டு மண் பாத்திரங்கள், விபியெனி பாத்திரங்களைப் போல், அவ்வளவு அழகாகவும் உறுதியாகவும் காணப்படவில்லை. விபியெனி பாத்திரங்கள் உள்ளும் புறமும் ஒரே நிறமாக (பவழ வர்ணம்) இருக்கின்றன. ஆனால், நம் நாட்டில் செய்யப்பட்டவை உள்ளும் புறமும் வெவ்வேறு வர்ணத்துடன் காணப்படுகின்றன.

இத்துடன் ஆராய்ச்சிமுடிந்து விடவில்லை. இன்னும் ஆராய்ச்சி செய்ய முற்பட்டால்,அரிகமேட்டின் முக்கியத்துவத்தை நாம் உணர முடியும்.

புதுவை நகர் சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கியுள்ளது. கிளைவ் ஆங்கில ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபிக்க முயற்சி கொண்டான்; இறுதியில் வெற்றியும் கண்டான். அதே போல் புதுவையில் டியூப்ளே, பிரஞ்சு ஆதிக்கத்தை நிலை நிறுத்தி,பிரஞ்சு ஆட்சிக்கு நாடு சேர்க்க முற்பட்டான். ★

# பிளேட்டோ

இரா. கண்ணன்

கி. மு. 427-ம் வருடம் ஏத்தென்ஸ் நகரத்தில் பிளேட்டோ பிறந்தான். பிளேட்டோவினுடைய இயற்பெயர் 'அரிஸ்ட்டோக்ளீஸ்' என்பதாகும். இவனுக்கு அகன்ற தோள்கள் இருந்த காரணத்தால் ஏத்தென்ஸ் நகரத்து மக்கள் இவனை 'பிளேட்டோ' என அழைத்தார்கள். ஆனால், இப்பெயரே இவனுக்கு பிற்காலத்தில் நிலைத்து நின்று விட்டது. பிளேட்டோவினுடைய தகப்பனார் பெயர் அரிஸ்ட்டோன், தாயாருடைய பெயர் பெரிக்ட்டியோன். இவன் உடன் பிறந்தோர் மூன்றுபேர்; இரு சகோதரர்களும், ஒரு சகோதரியுமாவர். பிளேட்டோ தன்னுடைய வாழ்நாளில் தோன்றிய கழகத்திற்கு தலைவனாக இருந்தவன் இவனுடைய சகோதரி மகன்.

பிளேட்டோ, இளமையிலே கலையார்வம் கொண்டவன். கவிதை எழுதுவதிலும், சித்திரம் வரைவதிலும், பிளேட்டோ மிகுந்த திறமைசாலி. பிளேட்டோ தனது பதினெட்டாவது வயது முதல் இருபத்து மூன்றாவது வயதுவரை ஐந்து வருடகாலம் பெலொப்பொனேசிய யுத்தத்தின் ஆத்தீனிய குதிரைப்படை வீரனாக இருந்து பணியாற்றினான்.

பிளேட்டோவிற்கு அரசியலில் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அந்த எண்ணம் சிறிது நாளில் மாறி விட்டது. காரணம், ஜனநாயகம் என்ற பெயரால் அப்பொழுது ஏத்தென்ஸில் நடைபெற்ற கொடுமைகளைக் கண்டு உள்ளம் வெதும்பினான். தன் நாட்டு அரசியலைப் பற்றி இவனுக்கு எப்போதுமே பெருமையுண்டு. இப்போது அது மாறி விட்டது. இதனால் அவன் மனதிலே பெரும் போராட்டம் ஒன்று உருவாயிற்று. அதன் பயன், இவன் அரசியலில் தீமையை அகற்றி நன்மையை நிலைநாட்டுவதற்கு என்ன வழி என்று சிந்திக்கத் தலைப்பட்டான். சுமார் பத்து வருடகாலம் சிந்தித்துக் கொண்டே இருந்தான்.

பிளேட்டோ சிந்திக்கத் தொடங்கியவுடன், தன்னுடைய சொந்த நாட்டிலே இவனுக்கு இருக்கப் பிடிக்கவில்லை. தன்னுடைய நாட்டிற்கு தெற்கேயுள்ள ஸிஸிலித்தீவு, எகிப்து முதலிய ஆப்பிரிக்காவின் வட பகுதிகளிலுள்ள நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தான்.

பிளேட்டோ ஸிஸிலித்தீவுக்குச்சென்றபோது, ஸைரக்யூஸ் என்ற நகரத்து மன்னனான டையோனியஸ்என்பவனுக்கும் இவனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. டையோனியஸ் ஒரு கொடுங்கோலன். தன் நாட்டு மக்களை அவன் அடிமைகளாகவே நடத்தி வந்தான். இதைக் கண்ட பிளேட்டோவிற்கு வேதனை அதிகமாயிற்று. கொடுங்கோலினால் ஏற்படும் இன்னல்களையும், இடற்பாடுகளையும் எடுத்து டையோனியஸுக்கு அடிக்கடி சொல்லி வந்தான் பிளேட்டோ. இதைக் கேட்ட கொடுங்கோலன் டையோனியஸுக்கு

ஆத்திரம் அதிகமாயிற்று. அதன் பயன், பிளேட்டோவை ஒழித்து விடுவதெனத் தீர்மானித்தான்.

அப்போது ஸ்பார்ட்டா தேசத்தின் பிரதிநிதி யொருவன் அந்நாட்டிற்கு வந்திருந்தான். அவனிடம் டையோனியஸ் பிளேட்டோவை ஒப்புவித்து விட்டான்.

அவன் பிளேட்டோவை ஏஜினு என்ற தீவில் கொண்டு போய் ஒரு சீமானுக்கு அடிமையாக விற்று விட்டான். அந்தச் சமயத்தில், வட ஆப்பிரிக்காவிலிருந்து அங்கு வந்த வியாபாரி ஒருவன், பிளேட்டோவை விலை கொடுத்து வாங்கி நேரே ஏத்தென்ஸுக்கு அனுப்பி வைத்தான். அப்போது பிளேட்டோவிற்கு சுமார் நாற்பது வயது இருக்கும்.

பிளேட்டோ தன் நாட்டுக்குத் திரும்பி வந்தவுடன் தான் செய்ய வேண்டிய வேலை இன்னதென்பதைத் தெளிவுபடுத்திக்கொண்டான். அதாவது அமைதியாக ஓரிடத்திலிருந்து கொண்டு தேசத்தின் வருங்கால சந்ததியினரை நல்வாழ்வுக்குத் தயார் படுத்துவதையே தனது குறிக்கோளாகவும் கடமையாகவும் கொண்டான். ஏத்தென்ஸின் மதிற் சுவர்களுக்கு அப்பால் ஓரிடத்தை வாங்கினான். அங்கு ஒரு கழகத்தை நிறுவினான். அதன் பெயர்தான். 'அக்கடெமி.' இதற்குப் பிறகு, பிளேட்டோ தன் ஆயுள் முழுவதும் போதகாசிரியராகவே பணியாற்றினான். தனக்குப் பிறகு இக்கழகத்தில் தத்துவ ஆராய்ச்சியே நடைபெற வேண்டுமென்று உயில் எழுதி வைத்துவிட்டு அவன் இறந்தான்.

அறிஞர் பிளேட்டோ இரண்டாவது தடவையாக ஒருமுறை ஸைரக்யூஸிற்குச் சென்று திரும்பி வந்தான். அதன்பின் அவன் தன் இறுதிக் காலம் வரை, ஏத்தென்ஸ் நகரத்தைவிட்டு வெளியே எங்கும் செல்லவில்லை. தன்னுடைய கழகத்திலிருந்து கொண்டு அநேக நூல்களை எழுதி யெழுதிக் குவித்தான். கடைசியில் பிளேட்டோ தன்னுடைய எண்பதாவது வயதில் மரணமடைந்தான்.

பிளேட்டோ விவாகம் செய்து கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் இவன் ஒழுக்கம் கெட்டதாகவும் தெரியவில்லை. எல்லோரையும் போல் உண்பதிலும் உடுப்பதிலும் இன்பத்தை நுகர்ந்தான். உலகத்தின் சுக துக்கங்களிலே பரிபூர்ணமாக ஈடுபட்டான். ஆனால் எதுவும் வரம்புமீறிப் போகக் கூடாதென்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தான். இதனால் பிளேட்டோ தன் கடைசி வாழ்நாள் வரை தேகாரோக்கியத்துடன் இருந்து வந்தான். எழுதுவதிலும் போதிப்பதிலும் இவனுடைய பெரும் பொழுது சென்றாலும், இவன் ஒருமுறை கூட நோயாளியாக இருந்தது கிடையாது!

பிளேட்டோ ஆரம்பித்த கழகம்தான் உலகின் முதல் சர்வகலாசாலை. தன் கழகத்தில் சேர்ந்து படித்த இளைஞர்களை மிகவும் அன்பாகவும், ஆனால் கண்டிப்பாகவும் நடத்தினான்.

பிளேட்டோவினுடைய கழகத்தில் பயின்றவன்தான் இன்று அறிஞன் என்று கருதப்படும் அரிஸ்டாட்டல். இவன் அலெக்ஸாந்தரின் ஆசிரியன்.★



அதிசய ஜீவன்-

# தேவாங்கு

'கல்யாண்'

தேவாங்கு என்றொரு உயிர்ப் பிராணியைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், அநேகர் அதை நேரில் பார்த்திருப்பது கடினம்.

கூனிக் குறுகிக்கொண்டு குனிந்த தலைநிமிராமல், துவரம் பருப்பு போன்ற விழிகளை உருட்டி உருட்டி பார்த்தபடி, ஒரு அடி நீளத்திற்கும் குறைவான உடலமைப்பெற்ற ஜீவன் தேவாங்கு. இதைப் பார்ப்பதற்கு கொஞ்சம் அருவருப்பாகத்தான் இருக்கும்.

சாம்பல்நிற வர்ணம், உடலெங்கும் ரோமம், சற்று கூர்மையான, அதே சமயம் வட்டமானதுமாக முக அமைப்பு, மெல்லிய கால்களுடன் கூடிய இதைக் காணும்போது, சிருஷ்டி விநோதத்தைப் பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியாது. மிருக வர்க்கத்தைச் சேர்ந்தாற் போல் காட்சி யளிக்கும் இதற்கு, வால் கிடையாது.

இந்த அருவருப்பான தேவாங்கை சிலர் காடுகளிலிருந்து பிடித்து, வளர்த்து வருகிறார்கள். அவர்கள் இதைக் கொண்டு ஜீவனம் நடத்துகிறார்கள் என்றால் ஆச்சர்யப் படுவீர்கள். அவர்கள் இதை தங்கள் வசமாக்கிக்கொண்டு, ஒரு கூண்டில் அடைத்து வைக்கிறார்கள். தேவாங்கின் உடலின்மேல்படும் கயிறு 'தேவாங்குக் கயிறு' எனப்படும். இக்

கயிற்றை அணிவதால், குழந்தைகளைப் பிடிக்கும் சில கொடிய வியாதிகள் லகுவில் குணமாகி விடுகின்றனவாம்! தேவாங்குக் கயிற்றுக்கு இவ் வளவு மதிப்பா, இல்லை தேவாங்குக்கு இத்தகைய சக்தி உண்டா என்பதை ஆராய்வது நம் நோக்கமல்ல. நம்மிடையே இருந்துவரும் அநேக விசித்திர நம்பிக்கைகளில் இதுவும் ஒன்று. பாவம்! 'தேவாங்குக் கயிறுக்காரன்' பிழைப்பு நீடிக்கட்டும்! அதே சமயம் தேவாங்குக்கு உள்ள மதிப்பும் அதே அளவில் இருக்கட்டும்!

தேவாங்குக் கயிறுக்காரன் இதைப் பிடித்து, நடைபாதை ஓரங்களில் வைத்துக் கொண்டிருப்பான். தேவாங்கு குனிந்த தலைநிமிராமல், ஆடாமல் ஆசையாமல் உட்கார்ந்திருக்கும். நமக்கு தேவாங்குக் கயிறு வேண்டுமென்றால், நம் முன் ஒரு முழ பட்டுக்கயிறை எடுத்து, தேவாங்கின் உடலில் மூன்று முறை தலைமுதல் கால்வரை கயிற்றினால் தடவி நம்மிடம் கொடுப்பான். இதை வீட்டிற்குக் கொண்டு சென்று, குழந்தைகள் கழுத்தில் கட்டினால், அவைகளைத் தாக்கியுள்ள தோஷம் நீங்கப்பெறும்.

நம்மிடையே மட்டும் இத்தகைய விசித்திர நம்பிக்கைகள் நிலைத்து இருப்பதாக எண்ண வேண்டாம்!

தேவாங்கைப்பற்றிய நம்பிக்கை வேறு சில நாடுகளிலும் வேரூன்றியிருப்பதை இங்கு உதாரணம் கூறி விளக்கப்பட்டிருக்கிறது.

தேவாங்கு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் தான் அதிகமாகக் காணப்படுகின்றது. மிக மெல்லிய உடலமைப்பைப் பெற்றுள்ள இது உறுதியாகப் பற்றிக்கொண்டு, பிடித்த பிடியை விடாதாம்! 'விழிப்பு' என்ற உணர்ச்சியே இன்றி எப்போதும் தூங்கி ஆடிக்கொண்டே இருக்கும் பிராணி இது. அதனால்தான் நம்மில் சிலர் எப்போதும் 'தூங்குமூஞ்சி'யாகவே காணப்பட்டால், 'தேவாங்குபோல் உட்கார்ந்திருக்கிறான்' என்கிறோம். அப்படிச் சொன்னாலாவது சுறுசுறுப்பு உண்டாகுமென்று நினைத்தால், இந்தக் கேலி மொழியைக் கேட்டுக் கொண்டும் 'நிஜமான தேவாங்காக' இருக்கும் பிரகிருதிகளும் உண்டு.

இந்தச் சிறிய பிராணியின் கண் அமைப்பைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். உருவில் பெரியதான யானைக்கு இறைவன் எவ்வளவு சிறிய கண்களைக்கொடுத்திருக்கிறான்! ஆனால், இந்த அற்ப பிராணியான தேவாங்கின் கண்கள் அதன் தோற்றத்துக்கு மிகப் பெரியவை! சுருங்கிக் கிடக்கும் விழிகளை விரித்தால், இந்த உண்மை புலப்படும் ஒரு காலத்தில் இலங்கை மக்களிடையே தேவாங்கைப்பற்றியநம்பிக்கை நிலவியிருந்தது! அதாவது தேவாங்கை உயிருடன் பிடித்து அதை உணவின்றிச் சாகடித்த பின், அதன் கண்களை எடுத்து வெள்ளித்தகட்டில் மடித்து தாயத்துகளாகச் செய்வது வழக்கமாம். இந்தத் தாயத்துகளை அணிவதால், எந்த ஆபத்துகளிலிருந்தும் நாம் உயிர் தப்பலாமாம்! அத்துடன் அன்றி நம் கண்களுக்குப்பூர்ணசக்திகிட்டுமாம். நிறக்குருடு, குறைந்த பார்வை உள்ளவர்கள் இதனை வெகுவாக நம்பி, தேவாங்கு

களை யெல்லாம் தங்கள் கண் ஓரளவு தெரியும் போதே பிடித்து, சித்ரவதை செய்து, அவற்றின் கண்களைப் பிடுங்கி தாயத்துகள் தயாரித்து வந்திருக்கிறார்கள். தற்போது இந்த நம்பிக்கை குறைந்து விடவே, தேவாங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது!

மடகாஸ்கர் தீவில்தான் தற்போது ஏராளமாக தேவாங்குகள் காணப்படுகின்றன. இரவில் மட்டுமே வெளியே கிளம்பும் பழக்கம் உள்ளது தேவாங்கு. பூனையைப் போல் இதன் கண்கள் இரவில் தான் நன்கு தெரியும். அடர்த்தியான இருள்சூழ்ந்த கானகங்களே தேவாங்கின் இருப்பிடமாகும். இலைகளாலும் குச்சிகளாலும் கூடமைத்து வாழுகிறது இந்தப் பிராணி.

இதன் மென்மையான கால்களின் நுனியில் அமைந்துள்ள விரல்கள் ஒவ்வொன்றும் ஒரு தீக்குச்சியின் கனம்தான் உள்ளது.

தேவாங்கின் பற்கள் கூர்மையானவை. இது மரக்கிளையில் ஏறிக்கொண்டு பற்களால் கிளையைக்கடித்து பள்ளம்உண்டாக்கும். பின்பு தன் மெல்லிய விரல்களால் பள்ளமாக்கிய இடத்திலுள்ள மரச்சோற்றை எடுத்து உண்ணும்.

பகலெல்லாம் தூங்கி, இரவில் இரைதேடக் கிளம்பும் இந்தத் தேவாங்கைப் பிடித்துக்கொண்டு வந்து, பாதையோரங்களில் வைத்து, பகலெல்லாம் ஜீவனம் நடத்தும் மனிதன் தேவாங்கைவிட சோம்பேறியாகத்தான் இருக்க வேண்டும்! • ★

## நாய்களின் 'ராஜவாழ்வு'!

'நாய்க்கும் நல்ல காலம் வரும்' என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. கன்யூட் என்னும் அரசன் நாய் வளர்ப்பதில் பேரார்வம் கொண்டவன். உலகின் உயர்ந்த ஜாதி நாய்களை ஏராளமான விலை கொடுத்து வாங்கி வளர்த்தவன் அவன். இரண்டாம் ஹென்றி மன்னன் தான் வளர்ந்த நாய்களுக்கெனத் தனி அரண்மனை கட்டிப் பாதுகாத்து வந்தானாம்! 'நாய்த் தீவு' (Isle of Dogs) என்று தேம்ஸ் நதிக்கரையிலுள்ள மாளிகை ஒன்றுக்குப் பெயர் வழங்கி வருவதன் காரணம், இரண்டாம் ஹென்றியின் நாய் வளர்ப்பினால்தான்! நாயாகப் பிறந்தாலும் ராஜவாழ்வு வாழ்வதற்கு அதிர்ஷ்டம் வேண்டும் அல்லவா? விலையுயர்ந்த நாய்களை ராஜபரம்பரையினருக்குப் பரிசாக அளித்து மகிழும் வழக்கம் இன்றும் இங்கிலாந்தில் இருந்து வருகிறது. மகாராணி விக்டோரியாவுக்கு ஸ்பெயின் மன்னன் ஒருவன், அவரது தங்க விழாவின்போது 'காக்கர் ஸ்பானியல்' என்ற வகையைச் சேர்ந்த பன்னிரண்டு நாய்க்குட்டிகளைப் பரிசளித்தான்!

மேனுடுகளில் 'ஸன்-பாத்' என்று ஒரு முறையைக் கையாண்டு வருகின்றனர். அதாவது உடல் முழுதும் சூரிய ஒளிபடும்படி தினமும் சிறிது நேரம் வெயிலில் நிற்பது என்ற முறையை 'ஸன்-பாத்' என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். நம் நாட்டில் அத்தகைய முறையை அனுசரிக்க போதிய சௌகர்யங்கள் இல்லை. மேலும் அந்நாட்டினர் அளவுக்கு நம்மை நாகரிகம் பற்றிக் கொள்ளவில்லை. இவ்வாறு 'சூரிய-ஸ்நானம்' செய்வதன் மூல காரணம், சூரிய ஒளி உடல் முழுதும் பட்டால், அந்த ஒளிக்கதிர் உடலை ஊடுருவிச் சென்று, முக்கிய பலன்களை உடலுக்கு அளித்து வருகிறது என்ற நம்பிக்கைதான். இந்த நம்பிக்கை தீவிர ஆராய்ச்சிக்குப் பின் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

# உயிரூட்டும் ஒளிக்கதிர்

'நாதன்'

சூரிய ஒளி உலகின் இயக்கத்திற்கு இன்றியமையாதது என்பதை நாம் அறிவோம். செடி கொடி வளரவும், மழை உண்டாகவும் மட்டும் சூரிய ஒளி பயன்படவில்லை. மற்ற உயிர்களைக் காட்டிலும், மனித உடலின் வளர்ச்சிக்கும் அவற்றின் ஆரோக்கியத்துக்கும் சூரிய ஒளி இன்றியமையாததாகும்.

சூரியனிடமிருந்து நமக்கு வரும் ஒளி நம் கண்களுக்கு வெறும் வெண்மையாகவே தெரிகிறது. சூரிய ஒளிக்கதிரை ஆராய்ச்சியாளர்கள் தங்கள் இடைவிடாத ஆராய்ச்சி மூலம் ஆராய்ந்து, உயிரூட்டும் அற்புதத் தன்மை இந்த ஒளிக்கதிர்களுக்கு உண்டு என்று நிரூபித்துள்ளார்கள்.

மனிதன் உயிர்வாழ ஆகாரம் சத்துள்ளதாக இல்லாவிடில், உடல் வளர்ச்சி குன்றி விடும். தேகத்தில் வேலை செய்ய சக்தியளிக்கவும், தேய்ந்த உறுப்புக்களைப் பழுதுபார்க்கவுமே உணவுச் சத்து, உடலுக்குத் தேவைப்படுகிறது. உணவில்

ஏ, பி, ஸி, டி, இ என்னும் விடமின் சத்துக்கள் சேராவிடில் உடல் நாளடைவில் பலவித நோய்களுக்கு இடமாகி விடுகிறது. இந்த உண்மைகளை விளக்கிக் கூறும் விஞ்ஞானம், சூரிய ஒளி மூலம் உடல் பெற்று வரும் நன்மைகளை மேலும் விளக்குகிறது. உயிரூட்டும் அந்த ஒளிக்கதிரின் பெயர் "அல்ட்ரா-வயலெட்ரேஸ்' என்றழைக்கப்படுகிறது.

சூரிய ஒளி நம் சருமத்தின் மேல் படுவதால், தோல் சம்பந்தமான வியாதிகள் நாளடைவில் நீங்கப் பெற்று, தோல் உறுதித் தன்மை பெறுகிறது. தவிர, இந்த 'அல்ட்ராவயலெட் ரேஸ்' எனப்படும் ஒளிக்கதிர் விடமின் 'டி' எனப்படும் உயிர் சத்துக்குள்ள தன்மை பெற்றது. விடமின் 'டி' சத்து உடலில் குறைந்தால் பற்கள், நரம்புகள், எலும்பு இவை உறுதித்தன்மை இழந்து வலிவற்றுப் போகும். 'ரிக்கெட்ஸ்' என்னும் வியாதி பிடிக்கப்படும். இந்த அற்புத சக்தியை பணச் செலவின்றி சூரியனிடமிருந்து நாம் லகுவில் பெறக்கூடும் என்பதை உணர்ந்தும் நாம் இதை அலட்சியப் படுத்தி வருவது அறிவீனம்.

நாம் வாரம் ஒரு முறையாவது எண்ணெய் நீராடி வருவதை வழக்கத்தில் கொண்டிருக்கிறோம். அவ்வாறு எண்ணெய் ஸ்நானம் செய்வதைக் கூடியவரை பகல் நேரங்களில் வைத்துக் கொள்வது சிறந்ததாகும். சிலர் இரவு நேரங்களில் எண்ணெய் ஸ்நானம் செய்வதுண்டு. பகலில் எண்ணெய் ஸ்நானம் செய்யும்படி வற்புறுத்துவதன் காரணம் என்ன தெரியுமா?

உடலெங்கும் எண்ணெய் பூசிக் கொண்டு, உடலில் சூரிய ஒளி படும்படி குறைந்தது அரை மணி நேரம் நின்றிருந்தால், இந்த 'அல்ட்ரா-வயலெட் ரேஸ்' உடலை ஊடுருவிச் சென்று, வழக்கத்தை விட உடலுக்கு ஊட்டம் அளிக்கின்றனவாம். இதை ஆராய்ச்சியாளர்கள், பரிசோதனைக்குப் பின் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்.

நல்லெண்ணெய்யை நாம் ஸ்நானத்திற்கு உபயோகிக்கிறோம். கடுகிலிருந்தும் ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதற்கு கடுகு எண்ணெய் என்று பெயர். இந்த எண்ணெய்யை நாம் உடம்பில் தேய்த்துக் குளிக்கப் பயன் படுத்தலாம். எண்ணெய் நீராடும் காலங்களில் கடுகு எண்ணெய்யை உடலெங்கும் நன்றாகத் தேய்த்துக்கொண்டு அரைமணி நேரம் சூரிய ஒளி உடலெங்கும் படும்படி நின்றால், இந்த 'அலட்ரா வயலெட் ரேஸ்' உடலினுள் தீவிரமாக ஊடுருவிச் செல்லும். இவ்வாறு செல்லும்போது கடுகு எண்ணெயின் சத்தும் தோலின் மேலுள்ள நுண்ணிய துவாரங்களால் உடம்பினுள்ளே சென்று 'ஸெல்' எனப்படும் நாளங்களுக்கு இயங்கும் சக்தியை அதிகம் கொடுக்கிறது. விடமின் 'டி' சத்தை உடல் இலகுவில், அதிகமான அளவில் பணச்செலவின்றிப் பெறும் முறையை நாம் அன்றாடம் அநுசரித்து வந்தால் ஆரோக்யமான வாழ்வைப் பெறலாம்.

இயற்கை மனிதனை வாழ வைக்க விரும்புகிறது. ஆனால், அதனிடம் மறைந்துள்ள அற்புதசக்தியை மனிதன் உணர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே! ★

# தமிழிலக்கியத்தில் 'தாலி'

"மதுரைச்சிவம்"

திருமணத்தின் போது 'தாலி' கட்டும் வழக்கம், தமிழரிடையே தொன்று தொட்டு இருந்து வருவதொன்று என்பதற்குப் பிற்காலத் தமிழிலக்கியங்கள் மட்டுமின்றிச் சங்க காலத் தமிழ் இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. அவைகள் 'தாலி'யைப்பற்றி விரிவாக எடுத்துரைக்காவிட்டாலும், ஓரளவு சுருக்கமாகத் தெரிவிக்கின்றன. அம்முறையில் 'தாலி' பற்றி வருகின்ற சில இலக்கியக் கருத்துக்களைக் காண்போம்.

ஒரு தலைவி, தலைவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ஊடுகின்றாள்; ஒரு முறையல்ல -பன்முறை இரங்கிக் கூறியும் தலைவியின் நெஞ்சம் திருந்துவதாகத் தென்படவில்லை தலைவனுக்கு! "உணர்த்தவும் உணராது ஊடுகின்றாளே இவள்! என்ன உறவினள் நமக்கு!" என்று தனக்குள்ளே எண்ணிக் கொள்கிறான் தலைவன். 'ஊடல் நிகழவேண்டியதுதான், ஆனால் அதை நீடித்துக் கொண்டே செல்லுதல் அறமாகுமோ?" என்பது அவன் கருத்து. கடந்த காலத்திய இன்ப நினைவுகள் அவன் மனக்கண் முன் ஒவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தன. திருமணமாகிச் சில நாட்களே ஆகியிருந்ததால், அவன் நினைவு திருமண விழாவை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

"புள் நிமித்தம் (சகுனம்) இனிதாகக் கூடிய நன்னாள்; திங்கள், உரோகிணியுடன் கூடிய குற்றமற்ற பொன்னாள்! (உரோகிணியுடன் கூடிய சந்திரன் உச்சன் ஆதலின் எவ்விதத் தீங்கும் நேரா வென்பது பண்டைத் தமிழர் கொள்கை). அன்று திருமணம் நிகழ்கின்றது, என்றைக்குமில்லாத் தனிப் பேரழகுடன் விளங்குகின்றது. திருமணவீடு. திருமணம் இனிதாக நிறைவேறும் பொருட்டு எல்லாம் வல்ல கடவுளை முதன் முதல் வழிபடுகின்றனர். முரசு முதலிய இன்னிசைக் கருவிகள் மேகம் ஒலித்தாற் போன்ற மிக்க ஒலியை எழுப்பத் தலைவிக்கு மண நீராட்டு நிகழ்கின்றது. அடுத்து வெண்ணூல் (தாலி) கட்டப்படுகின்றது. பின்பு, பிற அணிகளும் அணிவிக்கப்படுகின்றன. கடைசியில், இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய நெய் கலந்த வெண்சோறு சுற்றத்தார் முதலானோர்க்கு அளிக்கப்படுகிறது"—இவ்வளவும் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனக்கண்முன் காட்சியளிக்க, இறுதியில் அன்று (முதல் நாள்) இரவிலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வந்து அவனை இன்பத்தில் ஆழ்த்துகின்றன.

இக்கருத்துக்களைக் கொண்ட அப்பாடலில் வந்துள்ள இரண்டு அடிகளே இங்கு ஆராயத்தக்கன.

"மண்ணுமணி யன்ன
மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு
வெண்ணூல் சூட்டி".

(அகநானூறு—136 : 13-14)

"கழுவிய நீலமணியை ஒத்த, கரிய இதழையுடைய பாவை போலுங் கிழங்கிடத்துள்ள, குளிர்ந்த நறிய அரும்புடன் சேரக் கட்டிய வெள்ளை நூலை (தாலி)த் தலைவிக்குச் சூட்டி" என்பதே இதன் பொருள்!

'நூல்' என்ற சொல்லிற்குத் 'தாலி' என்ற பொருள் தவிர, பிற பொருள்களும் உள்ளன.

"நூல் விரித் தன்ன கதுப்பி னள்"-(புறம் 159).

பூணூல்—("நூலே கரக முக் கோல் மணையே" — தொல்-பொ 625)

எற்று நூல்—("கனக் கோட் டம் தீர்க்கு நூல்" — நன் னூல்-25)

இலக்கணம் முதலிய நூல்கள் ("ஏதிலார் நூல்"—குறள் 440).

இவ்வாறு 'நூல்' என்னுஞ் சொல்லிற்குப் பிற பொருள் கள் உளவேனும், இங்கு அகம் 136-ம் பாடலில் வந்துள்ள நூல், 'தாலி' ஒன்றினையே குறித்து நிற்றல் எவ்வாறு என் பதையும் பார்ப்போம்!

'தாலி' என்னும் பொருளில் 'நூல்' என்னுஞ் சொல் ஆளப் பட்டிருத்தலைத் தமிழிலக்கியத் திலே காண முடிகின்றது.

திருவல்லிக்கேணியில் உறை யும் நம் பெருமாளைப் பேசவந்த ஆழ்வார், தமது பாடலில், 'தாலி' என்ற பொருளில் 'நூல்' என்ற சொல்லைச் சேர்த்துள் ளார்.

"அந்தகன் சிறுவன் அரசர்தம்
அரசற்கு
இளையவன் அணியிழையைச்
சென்று
எந்தமக்கு உரிமை செய்யெனத்
தரியாது
எம்பெருமான்! அருள் என்ன
சந்தமல் குழலாள் அலக்கண்
நூற்றுவர்தம்
பெண்டிரும் எய்தி நூல்
இழப்ப
இந்திரன் சிறுவன் தேர்முன்
நின்றானைத்
திருவல்லிக் கேணிக்
கண்டேனே!"

(திவ்வியப் பிரபந்தம், பெரிய திருமொழி: 2, 3, 6.)

"குருடனான திருதராட்டிர னுடைய பிள்ளையாய், அரசர் தம் அரசனான துரியோதன னுக்குத் தம்பியான துச்சாத னன், அலங்கரிக்கப்பட்ட ஆப ரணங்களையுடைய திரௌபதி அருகிலே போய், (சூதிலே உன்னையுந் தோற்றார்களாகை யால்) எங்களுக்கு அடிமை செய் என்ன, அது பொறுத திரௌபதி. இறைவனருளை இறைஞ்ச, இருண்ட நிறத்தை யுடைய கூந்தலையுடையவளான திரௌபதி பட்ட துக்கத்தைத் துரியோதனன் முதலான நூற் றுவருடைய மனைவியரும் அடைந்து, தாலி (நூல்)யை யும் இழக்கும்படியாக ஆணை யிட்டான் அர்ச்சுனனுடைய தேரின் முன்னே நின்ற கண்ணன் திருவல்லிக்கேணி யில் அவனைக் கண்டேனே!" என்பது இப்பாட்டின் விரிவான பொருள்!

கி. பி. 823-க்கும் முற்பட்ட காலத்தில் பாடப் பெற்ற இப் பாடலில் வந்துள்ள 'நூல்' என்ற சொல், 'தாலி'யைக் குறித்து நிற்றலைக் காண்கின் றோம்.

கலிப்பகையாருக்கும் திலக வதி அம்மையாருக்கும் திரு மணம் செய்துவைக்க எண்ணி யிருந்தனர் ஆன்ருேர். திரு மணம் நிறைவேற்றுவதற்கு முன், மன்னவனுக்காக, அவ னது பகைவர்களை எதிர்த்துப் போர் செய்யப் போந்த கலிப் பகையார், 'போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார்.' இச்செய்தி யறிந்த திலகவதியார், ''எனது தந்தையும் என் அன்னையும், என்னை அவருக்குக் கொடுக்க இசைந்தனர். அம்முறை யால் நான் இவருக்கே உரிய வள். ஆதலினுல் எனது இந்த உயிரை அவருடைய உயிருடன் சேர்ப்பிப்பேன்'' என்று துணிவு கொண்டுவிட்டார். அப்போது நாவுக்கரசர், தம் தமக்கையார் பாதங்களில் வீழ்ந்து, 'என்னைத் தனியாகக் கை விட்டு நீர் செல்வீராகில் நானும் முன்னம் உயிர் விடுவேன்'' என்று சொல்லத் ''தமது தம்பி யார் உளராக வேண்டும்'' என்ற கருணையால், உயிரைத் தாங்குவாராகி, நாண் (தாலி) பூணுதலை ஒழித்துத் தவம் பல புரியலானுர். இவற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான்,

''தம்பியா ருளராக
வேண்டுமென வைத்தயா
வும் பருல கணையவுறு
நிலைவிலக்க, உயிர்தாங்கி,
யம்பொன் மணி நூல்தாங்கா,
தனைத்துயிர்க்கு மருடாங்கி
யிம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதியாரிருந்தார்!''

(திருத்தொண்டர் புராணம்: திரு நின்ற சருக்கம்.)

பெற்றேர்கள் தம்மைக் கொடுக்க இசைந்த ஒன்றி ஞலே மணம் நிகழ்ந்து விட்ட தாகக் கருதினுர் திலக வதியார். அதன்மேல் உலகறிய நிகழவுள்ள 'வதுவை வினை' என்பனவெல்லாம் அதனைக் காட்டும் வெளிச் சடங்குகளே என்ற மட்டில் நின்றுெழிவன வென்பது அவர் மேற்கொண்ட கொள்கை. எனவேதான் சேக் கிழாரும், ''தமது தம்பியார் உளராக வேண்டும் என்று உட்கொண்டு வைத்த கருணை யானது, தேவருலகு செல்லும் துணிவு கொண்ட நிலையை விலக்க, உயிரைத் தாங்குவா ராகி, அழகிய பொன்னும் மணியுமுடைய நாண் (நூல்) பூணுதலை ஒழித்து, எல்லா வுயிர்கட்கும் கருணையைத் தாங்கி நின்று, இவ்வுலகத்தில் மனையில் இருந்து தவம் புரிந்து கொண்டு இருந்தார் திலகவதி யார்'' என்று கூறினுர்.

எனவே, மேற்கண்ட பாடல் களின் மூலம், 'நூல்' என்னும் சொல்லானது, 'தாலி'யையே குறித்து நிற்கின்ற தன்மை யைக் காணுங்கால், திருமணத் தின்போது 'தாலி' கட்டும் வழக்கமானது தமிழரிடையே பண்டு தொட்டே இருந்து வரு வதொன்று என்பதை உணர லாம்!

'மங்கையராகப் பிறப்ப தற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்' என்ற பாடல் பெண் ணினத்தின் சிறப்பைத் தன் னுள் மிகைப்படுத்திக் காட்டுவ தாகும். பெண் அணிந்து, அழகு பார்த்து மகிழும் அணி கலன்களில் ஒப்பற்றதும், அவள் வாழ்வை ஒளிமங்கா திருக்கச் செய்வதுமான ஆபர ணம் மணக்கோலத்தில் அவள் நாயகன் கழுத்திலணிவிக்கும் மூன்று முடிகளுடன் கூடிய 'தாலிக்'கயிறுதான்! அதன் உறுதித் தன்மையில்தான் அவள் வாழ்வின் சிறப்பும் அடங்கியுள்ளது. ★

# இயற்கையுடன் போராட்டம்

'மலர்மன்னன்'

வாழையடி வாழையாக மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே போராட்டம் நடைபெற்று வருகிறது. இயற்கை தனது வலுவான கரங்களைக்கொண்டு மனிதனை எவ்வளவுதான் ஒடுக்கிய போதிலும், அவன் அலுக்காமல் சலிக்காமல் போராடிப் போராடி இறுதியில் தனது ஆறுவது அறிவின் துணையினால் இயற்கை தோல்வியுறுமாறு செய்து விடுகிறான்.

''மனிதனால் வானத்தில் பறக்க முடியாது'' என்று உறுதியுடன் கூறியது இயற்கை.

''வானத்தில் பறக்க மட்டுமல்ல; இதனால் உலகை ஆக்கவோ அழிக்கவோகூட முடியும்!'' என்று கூறி விமானத்தைச் செய்து காட்டினான் மனிதன்.

நாட்டை நரகமாக்கி விடக்கூடிய கொடிய குண்டுகளைச் சுமந்து கொண்டு செல்ல அவற்றைப்பயன்படுத்தி, ''அழிவிற்கு இது செய்யும் தொண்டு தனைப்பார்!'' எனக்கூறினான். அதேபோல புயலாலும் வெள்ளத்தாலும் அடிபட்ட மக்கள் கூட்டத்திற்கு உடைகளையும் உணவுகளையும் விமானத்திலிருந்து அனுப்பிவைத்து, ''ஆக்கத்திற்கும் இது பயன்படுவதைப்பார்!'' என்று முழங்கினான்.

மேற்றிசை நாடுகட்கும் கீழ்த்திசை நாடுகட்குமிடையே இருந்த கடல் வாணிபத்தொடர்பிற்குப் பெரிதும் இடையூறாக இயற்கை படுத்துக் கிடந்த போது, ''இயற்கையே, இதோ பார் எங்கள் அறிவுத்திறமையை!'' என்று சூள் உரைத்து, செங்கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையிலிருந்த நிலப்பரப்பை அகற்றி இருகடல்களையும் பிணைத்தான், மாண்பு மிக்க மனிதன்.

மனிதன் சாமானியன் என்ற எண்ணங்கொண்ட இயற்கை, ''மனிதனே இங்கேபார்! ஓங்கி வளர்ந்து நிற்கும் இமயமலை! அதில் ஏறமுடியாத எவரெஸ்ட் சிகரம். எவரெஸ்டில் உன்னால் ஓரடி எடுத்து வைக்க முடியுமா?'' என்று கெக்கலி கொட்டியது. இது கேட்டுக் கிளர்ந்தெழுந்தான் மனிதன். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியே தீருவது என்று தீர்மானித்தான், கிளம்பி விட்டான் மறுகணம்!

எவரெஸ்ட் சிகரத்தின் பெயர் 'கௌரிசங்கர்' என்பதாகும். இதுவே நேபாளத்தில் 'சோமாலுங்மா' என்றும் அழைக்கப்படும் 'சோமா' என்பதற்கு 'மலைத்தாய்' என்று பொருள்.

சர் ஜார்ஜ் எவரெஸ்ட் என்ற

இந்திய நிலஅளவு இலாக்காத் தலைவர் 1841-ம் ஆண்டில் உலகத்திலேயே மிகவும் உயர்ந்த சிகரம் இமயமலையில் இருப்பதாகவும், அதன் உயரம் 29,141 அடி என்றும் தெரிவித்தார். அது முதல் அந்தச் சிகரம் அவர் பெயரால் வழங்கலாயிற்று. பின்னர் கணித வல்லுனர்கள் எவரெஸ்டின் உயரம் 29,002 அடியே யென்றும் 29,141 அடி அல்லவென்றும் தெரிவித்தனர்.

எவரெஸ்ட் சிகரத்தைப்பற்றி கேள்வியுற்ற மலையேறும் குழுவினர் அதன் உச்சியில் ஏறி, வெற்றிக்கொடியை நாட்ட வேண்டுமென்று விழைந்தனர்.

எவரெஸ்ட்மீது ஏறுவதற்கு, இயற்கையின் ஆணவத்தை அடக்குவதற்கு மனிதன் பதினொரு தடவை முயற்சி செய்ய வேண்டி வந்தது. அவற்றில் இரண்டு முயற்சிகளே அரை குறையானவை. மற்றவை யாவும் முழு முயற்சிகள்.

மொத்தம் ஒன்பது முறை நடைபெற்ற படையெடுப்பில் ஏழு படையெடுப்பு இங்கிலாந்து நாட்டவருடையது. எவரெஸ்ட்டில் ஏறுவதற்குப் பலமுறை இடைவிடாது முயற்சி செய்து, இறுதியில் வெற்றியும் பெற்றது இங்கிலாந்து.

எவரெஸ்ட் கண்டு பிடிக்கப்பட்டு சுமார் எண்பது ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் முதல் தாக்குதல் நடைபெற்றது. 1921-ம் ஆண்டில் ஹோவர்டு பெரி என்பவர் தலைமையில் ஒரு குழு எவரெஸ்டை நோக்கிப் புறப்பட்டது. இவர்களது தாக்குதலை ஒரு ஆராய்ச்சி என்றுதான் கூறவேண்டும். இவர்கள் திபெத்தின் வழியாக எவரஸ்டின் வடபகுதியின் மேல் ஏற நினைத்தார்கள். 'ராங்பெக்' என்ற பனியாற்றின் வழியாக மேலே ஏறிவிடலாமென்று நினைத்தார்கள். ஆனால், அந்த வழி அவர்கள் நினைத்தது போல் எளிதான வழியல்ல. ஆற்றில் திடீரென்று வெள்ளம் புரண்டுவரும்; திசைமாறும் பனிமலைகளைச் சுமந்து கொண்டு விரைந்து வரும்.

எனவே, அவ்வழியை "எவரெஸ்ட்டை நோக்கியல்ல, சாவை நோக்கிச் செல்லும் வழி" என்றுதான் கூறவேண்டும்!

சாவுக்கு அழைத்துச் செல்லும் வழி என்பதை அக்குழு அறிந்து கொண்ட பிறகும் "அது வழியாகச் செல்வது" என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. மேலே ஏற ஏற, இயற்கை தனது சக்தியைக் காட்டத் துவங்கியது. "மனிதனுக்கும் இயற்கைக்கும் நடைபெறும் போராட்டத்தில் ஆரம்பத்தில் இயற்கைக்கே வெற்றி கிட்டும போலத் தோன்றும். ஆனால், இறுதியில் வெற்றி யடைவதோ மனிதன் தான்!" என்ற உண்மையை அவர்கள் அறிவார்களாதலால் இயற்கை தரும் இன்னலைப் பொருட்படுத்தாது மேலே செல்லலாயினர். அதன் பயனாக டாக்டர் கெல்லாஸ் என்பார் மரணத்தைத் தழுவிக் கொண்டார். இயற்கை கோரமாக நகைத்தது. "மனிதனே! என்னை வெல்வது முடியாத காரியம். உன்னவரில் ஒருவன் எனக்குப் பலியானதுதான் மிச்சம்! இனிமேலாவது என்னோடு போராடலாமென்று நினையாதே! திரும்பி விடு!" என்று கூறுவது போல் கடுமையான

குளிர் காற்றை அவர்கள் மீது பிரயோகித்தது. அதையும் பொறுத்துக் கொண்டு 23,000 அடி உயரம் ஏறி விட்டார்கள் அவர்கள். கருமமே கண்ணு யிருந்து இமயமலையின் வட கிழக்குப் பகுதியை அடையக் கூடிய ஒரு வழியினையும் கண்டு பிடித்து விட்டார்கள். அதற்கு மேல் அவர்களால் அங்கே தாம திக்க முடியவில்லை. இயற்கை அவர்களை உறைந்து போகும் படிச் செய்தது. மூச்சு விட முடியாதபடிச் செய்தது. எனவே அவர்கள் அவசர அவ சரமாகத் திரும்பி விட்டார்கள்.

இது நடைபெற்ற ஓராண் டுக்குள் அதாவது 1922-ம் ஆண் டில் இங்கிலாந்து நாட்டில் மற் றொரு குழு எவரெஸ்ட்டின் மீது ஏறும் நோக்கத்துடன் புரூஸ் என்பவரின் தலைமையின் கீழ் புறப்பட்டது. இவர்களுக்கு தங்களுக்கு முன் சென்ற குழு வினர்களின் அனுபவங்கள் தெரியுமாதலால், அதற்குத் தகுந்த முறையில் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள முடிந் தது. புரூஸ் இருவரைத் துணைக்கழைத்துக் கொண்டு 27,300 அடி வரை ஏறிவிட்டார். திடீரென்று பருவக்காற்றுவீசத் தொடங்கியது. ஒரு பனிக் குன்று மூவரின் மூட்டை முடிச்சுகளையும் தூக்கிக் கொண்டு வந்து கொண்டிருக் கும் மலைசாதியினர் மீது விழுந்து, அவர்களை உலகை விட்டுத் துரத்தியது. அதற்கு மேல் ஏற அவர்களால் இயல வில்லை. எனவே திரும்பி விட் டார்கள். இவர்கள் தமக்கு முன் சென்றவர்கள் ஏறியதை விடச் சிறிது கூடுதலாக ஏறிய தாலும், இமயமலையில் பருவக் காற்று விசும் காலம் முதலிய வற்றை அறிந்து கொண்டு திரும்பியதாலும் பாராட்டுகள் பெற்றனர்.

கர்னல் நாட்டர்ன் என்பவர் தலைமையில் மற்றொரு பிரிட் டிஷ் குழு 1924-ம் ஆண்டு எவ ரெஸ்ட்டை நோக்கிக் கிளம்பி யது. இவர்களோடு சாமர் வெல் என்ற விஞ்ஞானியும் உடன் வந்தார். எவரெஸ்டில் இவர்கள் ஏறும் பொழுது பணி யாட்களில் இருவர் மூக்கில் ரத்தம் உறைந்து உயிர் விட்ட னர். எனினும் இக்குழுவினர் மனந்தளரவில்லை. நாட்டர்ன் மட்டும் தனியாக எவரெஸ்ட் டில் 28,126 அடி வரை ஏறி விட் டார். மேலும் ஏறத் துவங் கிய பொழுது பனிப்பாறையில் மின்னல் போன்ற ஒருவித ஒளி தோன்றி, இவரது கண்பார்வை யைப் பறித்து சென்று விட் டது! என்னே, இயற்கையின் கொடுமை!

நாட்டர்ன் தட்டுத்தடுமாறி கீழே வந்து சேர்ந்தார். இக் குழுவினரில் இருந்த மலாரி, இர்வின் என்ற இரு சிறந்த மலையேறிகள் 28,130 அடிவரை ஏறிவிட்டனர். இவர்கள் செல் வதை மற்றவர்கள் தூரதரிசினி யின் மூலம் பார்த்துக் கொண்டி ருந்தனர். திடீரென்று அந்த இருவரையும் ஒரு பனிப்படலம் மறைத்து விட்டது; போனவர் கள் திரும்பி வருவார்கள், வரு வார்கள் என்று எதிர்பார்த்து இருந்தார்கள், அந்தக் குழு வினர். ஆனல் போனவர்கள் திரும்பி வரவேயில்லை! போன வர்கள் போனவர்கள்தான்!

இதனல் மனமுடைந்துபோய் மூன்றுவது குழு தாய்நாடு திரும்பியது. நல்ல முறையில் சிகிச்சை செய்து கொண்டதன் காரணமாக, நாட்டர்ன்துரை சில நாட்களுக்கெல்லாம்

இழந்த பார்வையைத் திரும்பப் பெற்றார்.

இந்த மூன்றும் குழு மறு முறை இமயப்படை யெடுப்பு நிகழ்த்த முடிவு செய்தது. திபெத்தின் வழியாகத்தான் மலையில் ஏறியாகவேண்டு மாதலால், இவர்கள் திபெத் அரசரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. இவர்கள் அவரை அனுமதிகேட்க அனுபிய பொழுது அவர் அனுமதிதர கண்டிப்பாக மறுத்து விட்டார்! ஏன் தெரியுமா?

மலையரசன் தன்மேல் மனிதர்கள் ஏறுவதை, சகிக்காமல் ஆத்திரங்கொண்டு, அம்மாதிரி ஏறுவதற்கு அனுமதிதரும் தன்னை தண்டித்து விடுவானென்று கருதிவிட்டார், அவர்!

1932-ம் ஆண்டு ரட்லெஜ் என்பவரின் தலைமையில் மற்றொரு குழு புறப்பட்டது. இக்குழுவில் நாட்டர்னும் இடம் பெற்றிருந்தார். இக்குழுவினர் திபெத் அரசரைப் புகழ்ந்து பேசி, அவரிடம் அனுமதி பெற்றுவிட்டனர்!

இக்குழுவினர் பலவித ஏற்பாடுகள் செய்துகொண்டு இயற்கையின் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் வழிநெடுகப் பாசறைகள் அமைத்துக் கொண்டு 25,700 அடிவரை ஏறினர். திடீரென்று பனிமழை கொட்டத் துவங்கி விடவே, அன்றிரவை அங்கேயே கழித்தனர். மறுநாள் பனிக் கட்டிகளை வெட்டிக் கொண்டே 1000 அடி வரை ஏறினர், அப்படி ஏறுகையில் எவரெஸ்டின் கம்பீரமான தோற்றத்தையும் கண்டனர். "எவரெஸ்ட்டில் ஏறிவிடுவோம்" என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவர்கள் பல இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் ஏறத் துவங்கினர். 28,100 அடி உயரம் ஏறிவிட்டனர். அப்போது அங்கே பனியால் மூடப்பட்ட ஒரு கோடரியைக் கண்டெடுத்தனர். அது அவர்களுக்கு முன் எவரெஸ்ட்டில் ஏறின மலாரி, இர்வின் என்ற இருவரில் ஒருவருக்குச் சொந்தமானதாகத்தான் இருக்க வேண்டும்!

இந்தக் குழுவினரில் ஸ்மித் என்பார் மலையேறிய விதம் மெய்சிலிர்க்கச் செய்வதாகும்.

ஸ்மித் வழி நெடுக அல்லலுற்று கடைசியில் நடக்கக் கூட முடியாமல் கீழே படுத்து ஊர்ந்து ஊர்ந்து மேல் நோக்கி நகரத் தொடங்கினார்! எவரெஸ்ட் உச்சியில் நின்றாக வேண்டும் என்பதில் இவருக்கு இருந்த ஆர்வம் எத்தகையது! எடுத்த காரியத்தை முடித்தாக வேண்டும் என்பதில் இவருக்கு இருந்த உறுதிதான் எத்தகையது!

நான்காம் குழு எவரெஸ்ட் மீது ஏறவில்லை. இயற்கையின் பேயாட்டத்திற்கு எதிரே நிற்க மாட்டாமல் திரும்பி விட்டது. அதன் பின்னர் 1935-ம் ஆண்டில் எரிக்ஷிப்டன் என்பவர் தலைமையில் மற்றுமொரு குழு கிளம்பியது. ஷிப்டன் முதலில் விமானத்தின் மூலம் எவரெஸ்டை ஆராய்ந்தார். பிறகு தம் குழுவினருடன் 23,000 அடி வரை ஏறினார். எவரெஸ்டின் வடபகுதியில் ஒரு மனித சடலத்தையும், நாட் குறிப்புப் புத்தகத்தையும் கண்டார். சடலம் ஒரு ஆங்கிலேயன் என்பதை அறிந்துகொண்டார். ஷிப்டன் குழுவினர் அதற்கு

மேல் ஏறுவதற்கு முடியாமல் திரும்பி விட்டனர். 1936-ம் ஆண்டில் மீண்டும் ரட்லெஜ் குழு எவரெஸ்ட்டை நோக்கிக் கிளம்பியது. ஆனால் இதுவும் தோல்வியே கண்டது.

1938-ல் டில்மன் என்பவர் தலைமையில் மற்றொரு குழு கிளம்பியது. இது 27,300 அடி உயரம் ஏறி விட்டு, தோல்வியை ஒப்புக்கொண்டு திரும்பியது.

இதற்குள் உலக மகா யுத்தம் ஆரம்பித்து விடவே, கொஞ்ச காலத்திற்கு எவரெஸ்டை மறக்க வேண்டி வந்தது.

இதன் பின்னர் மாரிஸ் வில்சன் என்பவர் ஆத்ம சக்தியால் எவரெஸ்டை வெல்லுதல் கூடும் என்ற எண்ணங் கொண்டு எவ்வித உதவியுமின்றி எவரெஸ்டில் ஏற முயன்று, உயிர் துறந்தார்.

1951-ம் ஆண்டில் எரிக் ஷிப்டன் எவரெஸ்ட்டின் மீது ஏற ஒரு புது வழி கண்டு பிடித்தார். இமயத்தின் மேற்குப் புறமிருக்கும் ஒரு பள்ளத்தாக்கின் வழியாக எவரெஸ்ட்டில் ஏறுவது என்பதே அது. ஆனால், அவர் இம்முயற்சியில் தோல்வியே யடைந்தார்.

இதன் பிறகு எவரெஸ்ட்டில் ஏற சுவிட்சர்லாந்து குழு ஒன்று 1952-ல் புறப்பட்டது. இதன் தலைவர் விஸ்டுனண்ட் என்பவர். இவரது குழுவில் நேபாளத்தைச் சேர்ந்த திறமை மிக்க மலையேறியான டென்சிங்கும் அங்கம் வகித்தார். இக்குழு 28,210 அடி உயரம் வரை ஏறி அதற்குமேல் ஏற முடியாமல் திரும்பி விட்டது.

சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த மற்றொரு குழு எவரெஸ்ட்டில் ஏறமுயன்று 26,575 அடி உயரம் வரை ஏறி, பின்னர் பருவக் காற்று கடுமையாக வீசத் தொடங்கி விடவே, திரும்பி விட்டது.

இறுதியில் பதினோராவதும் இறுதியுமான படையெடுப்பு 1953-ம் ஆண்டு நடைபெற்றது. ஜான் ஹண்ட் என்பவர் தலைமையில் ஹிலரி என்ற நியூஜிலாந்து நாட்டு மலையேறியும், நேபாள நாட்டு டென்சிங்கும் இடம் பெற்ற குழு எவரெஸ்டை நோக்கிப் புறப்பட்டது.

டார்ஜிலிங்கிலிருந்து புறப்பட்ட இக் குழு வழிநெடுக பாசறைகளை அமைத்துக் கொண்டு எவரெஸ்ட்டில் ஏறத் துவங்கியது. டென்சிங்கும் ஹிலரியும் அல்லல்களைப் பொருட்படுத்தாமல் பனிக் கட்டிகளை வெட்டி படிக் கட்டுகளைப்போல மைத்துக் கொண்டு மேலே ஏறினர். ஒன்றன்பின் ஒன்றாக வழி நெடுக இருந்த பள்ளத்தாக்குகளையும் சிகரங்களையும் சரிவுகளையும் கடந்து கொண்டு இயற்கை கொடுக்கும் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் எவரெஸ்டை நோக்கி முன்னேறினர். ஒருவர்பின் ஒருவர் இடுப்பில் கயிற்றைக்கட்டிக் கொண்டு உயரஏறி, இறுதியில் ஐந்தரைமைல் உயரமுள்ள எவரெஸ்டின் உச்சியை அடைந்து விட்டனர்!

டென்சிங்கும் ஹிலரியும் 1953-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி காலை 11-30 மணிக்கு எவரெஸ்டின்மீது பெருமிதத்துடன் நின்றனர், "இயற்கையே! மனிதனின் தளரா முயற்சி உன்னைத் தோற்கடித்து விட்டதைப் பார்!"

என்று முழங்கி மகிழ்ச்சியுடன் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். பின்னர் எவரெஸ்டன் உச்சியில் எவரெஸ்ட் வெற்றி, இந்தியா, நேபாளம், இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகள் அனைத்துக்கும் உரியது என்பதை அறிவித்துக் கொள்ளும் பொருட்டு மேற்கூறிய நான்கு நாடுகளின் தேசியக் கொடிகளையும் நாட்டினர்.

சில நிமிட நேரம் அங்கு தங்கி எவரெஸ்ட் சிகரத்தைப் பல கோணங்களில் படம் பிடித்துக்கொண்டு, அங்கிருந்த சில கற்களை எடுத்துக்கொண்டு வெற்றி வீரர்கள் இருவரும் திரும்பினர்.

தலைவர் ஹண்ட்டைக் கண்டதும் மகிழ்ச்சிப் பெருக்குடன் ''வெற்றி பெற்று விட்டோம்!'' என்று கூவினர். எவரெஸ்ட் உச்சியில் ஏறிவிட்ட செய்தி இயற்கையை வென்றுவிட்ட செய்தி. உடனே காட்மாண்டுவிலிருந்த இங்கிலாந்து தூதராலயத்திற்கு கம்பியில்லாத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தி உடனே உலகிற்கு அறிவிக்கப்படாமல் ஜூன் மாதம் 2-ம் தேதி ராணி எலிசபெத்தின் முடி சூட்டு விழாவின்போது தெரிவிக்கப் பட்டது.

இந்திய விமானப்படையினர் எவரெஸ்ட் ஏறியவர்கள் சென்ற வழியையும், அமைத்துக் கொண்டு தங்கிய பாசறைகளையும் படமெடுத்தனர்.

எவரெஸ்டின் உச்சியில் நின்ற டென்சிங்கையும், ஹிலரியையும் உலகம் வியந்து பாராட்டியது. உலகின் பல பாகங்களிலிருந்தும் அவர்களுக்குப் பரிசுகள் வந்து குவிந்தன. இந்திய அரசாங்கம் ஹிலரி, ஹண்ட், டென்சிங் மூவருக்கும் பதக்கங்கள் வழங்கிப் பாராட்டியது. இங்கிலாந்து டென்சிங்கிற்கு வெளி நாட்டவருக்கு அளிக்கப்படும் மிகமிக உயர்ந்த பரிசான ஜார்ஜ் பதக்கத்தையும், மற்ற இருவருக்கும் 'சர்' என்ற பட்டத்தையும் அளித்து மகிழ்ந்தது.

இவ்வளவையும் சொன்ன பிறகு சிலர் ''உம், இதனால் என்னய்யா லாபம்? எவரெஸ்டில் ஏறித்தானாகணும்னு என்ன வந்திருக்கு?'' என்று அதிருப்தி கொள்ளக்கூடும்.

அவர்கள் நினைப்பது போல் எவரெஸ்ட் வெற்றி, பயனற்றதல்ல, வெறும் பொழுது போக்கும் அல்ல! எவரெஸ்ட் வெற்றி மிகுந்த பயனைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்பிள்டன் என்ற ஒரு பிரபல விஞ்ஞானி, ''இமயமலையிலுள்ள பனிக்கட்டிகளைக் கொண்டு பாலைவனங்களைச் சோலை நிலங்களாக்கலாம்'' என்று கூறுகிறார். அணுசக்தியின் துணை கொண்டு பனிக்கட்டிகளை உருக்கி, நீராகப் பாய்ச்சலாமல்லவா? இம்முயற்சிக்கு எவரெஸ்ட் வெற்றி பேருதவி புரியும்.

மற்றும் வானியல் கதிர்கள் என்ற ஒரு வகை விநோதக்கதிர்கள் எவரெஸ்ட்டை சுற்றிலும் உள்ளனவாம், அவைகளைப் பற்றி ஆய்ந்து, அணுசக்தியைப் போல் அதையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே எவரெஸ்ட் படையெடுப்பினால் எவ்வித நன்மையுமில்லை என்று கூறிவிட முடியாதல்லவா?

இயற்கையுடன் போராடிக் கிடைக்கும் வெற்றி என்றும் சோடை போகாது என்பது மட்டும் நிச்சயம். ★

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயரும்"

—ஔவையார்.

# ஆற்றைத்தேக்குவோம்...
# ...அணைகட்டுவோம்

**ஆர். ராஜாராமன், எம்- ஏ.**

இன்று இந்தியாவின் பல பாகங்களில் மாபெரும் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. சில கட்டி முடிந்தும் விட்டன.


சென்னை மாகாண அணை திட்டங்களுக்கெல்லாம் ஆதிகர்த்தாவென ஆர்தர் காட்டன் என்பவரைத் தான் சொல்ல வேண்டும். இவர் எல்லா நதிகளையும் பார்வையிட்டு, எங்தெந்த இடத்தில் அணை கட்டினால் பாசனத்திற்கு மிக உதவியாக இருக்கும் என்று திட்டம் தயாரித்திருந்தாராம்.

# ஆற்றைத் தேக்குவோம்...


ஆர். ராஜாராமன் எம்.ஏ.

சமீப காலத்தில் நாம் கிருஷ்ணா நதி, கோதாவரி, கோஸி முதலிய நதிகளில் வெள்ளம் என்றெல்லாம் பத்திரிகைகளில் படித்தோம். மற்றும் பல வட இந்திய நதிகளிலும் அடிக்கடி வெள்ளம் ஏற்படுகிறது. சென்ற வருஷங்களிலும் இம்மாதிரி வெள்ளங்களும் அதனால் ஏற்படும் உயிர், பொருள் சேதங்களும் அடிக்கடி நேர்ந்திருக்கின்றன. ஆனால், இந்தியாவின் தென் கோடியில் வசிக்கும் நமக்கு வெள்ளம் என்றால் என்ன என்பது கூடத் தெரியாமல் இருக்கிறது. சுமார் பதினான்கு வருஷங்களுக்கு முன் சென்னையில் ஒரு வெள்ளம் வந்தது உண்டு. பல வருஷங்களுக்கு முன் காவேரி பாயும் பிரதேசத்தில் அடிக்கடி வெள்ளம் வருவது வழக்கம். இவை எல்லாம் கடந்த காலத்தைச் சேர்ந்தே இருப்பதற்கு முக்கிய காரணம், தெற்கு பாகத்திற்கே முக்கிய நதியான காவேரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கண்ணம்பாடி, மேட்டூர் அணைகள்.

நெல் பயிருக்கு ஒரு சாகுபடிக்கு சுமார் 60 அங்குலம் வீதம் தண்ணீர் வேண்டும். இத் தண்ணீர் மழை மூலமோ அல்லது நீர்ப்பாசனத்தின்



மைசூர் 'கிருஷ்ணராஜ சாகர்' — இதுவே 'கண்ணம்பாடி அணைக்கட்டு' என்றும் அழைக்கப்படுகிறது.




மேட்டூர் கால்வாய்த் திட்டத்தில் கட்டப்பட்ட ஒரு நீர்ப்பாலம்

மூலமோ பயிருக்கு, வேண்டிய பொழுது கிடைக்க வேண்டும். தண்ணீர் அளவுக்குமேல் அதிகமாகி வெள்ளப் போக்காக இருந்தாலோ அல்லது வேண்டிய அளவு கிடைக்காமல் இருந்தாலோ பயிர் நன்றாக விளையாது. மழை நமக்கு வேண்டிய காலத்தில் வேண்டிய அளவு பெய்யும் என்பது நிச்சயம் இல்லாததால், எக்காலத்திலும் நமக்கு வேண்டும் பொழுது கிடைக்கக் கூடிய தண்ணீர் வசதி இருந்தால்தான், பயிர்கள் சேதம் இல்லாமல் வளரும். நெல் சாகுபடிபோலவே மற்ற பயிர்களுக்கும் வெவ்வேறு அளவுகளில் தண்ணீர் வசதி வேண்டும். தஞ்சை ஜில்லாவில் எப்பொழும் பயிருக்குக் கேடு இல்லாமல் விவசாயம் நடப்பதற்கு முக்கிய காரணம் மேட்டூர் அணையும் நீர்த்தேக்கமுமே.

நம் முன்னோர்களுக்கு மேற்கூறிய உண்மைகள் நன்கு தெரியும். அதற்காகவே வெள்ளங்களைத் தடுப்பதற்கு ஆறுகளுக்கு கரைகளையும், நல்ல தண்ணீர் பாசன வசதிக்காக அணைகட்டுகளையும் கால்வாய்களையும் அமைத்திருக்கிறார்கள். காவேரியிலும், தாம்பரபரணியிலும் இம்மாதிரி திட்டங்கள் முற்காலத்திலேயே அமைக்கப்பட்டு இருந்து வருகின்றன.

சமீபகாலத்தில் ஜனத்தொகை விருத்தியாலும் மற்ற

# அணைகட்டுவோம்...



மண் அள்ளிச் செல்லும் 'யூக்லிட்' இயந்திரம்

காரணங்களாலும் தானியங்களில் பற்றாக்குறைவு ஏற்பட்டு வேண்டிய அளவில் மலிவான விலையில் தானியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருந்து வருகிறது. நம் அரசாங்கம் இந்த தானிய பற்றாக்குறையை நீக்க, அதிக தானியஉற்பத்தி திட்டங்களை அவசரமாக அமுல்செய்து கொண்டிருக்கிறது. நீண்ட கால ஏற்பாடாக நதி இயல் திட்டங்களையும் அமைத்துக் கொண்டு வருகிறார்கள்.

## நதி இயல் திட்டங்கள்


நதி இயல் திட்டங்கள், அந்தந்தப் பிரதேசங்களின் மேன்பாட்டுக்கு பலவகைகளில் காரணமாக இருக்கின்றன. வெள்ளங்களைத் தடுத்து அதனால ஏற்படும் சேதங்களைத் தவிர்த்து, வெள்ளத் தண்ணீரையும், சாதாரண காலங்களில் ஆற்றில் ஓடும் தண்ணீரையும் தேக்கி சேமித்து, நமக்கு வேண்டும்போது உபயோகிக்க உதவுவது இந்த நதி இயல் திட்டங்களில் கட்டப்படும் அணைகளே. அணையால் தேக்கப்பட்ட தண்ணீரை வெளியேவிடும் பொழுது உள்ள வேகத்தை உபயோகப்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்சார சக்தி குறைந்த விலையில் கிடைப்பது பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு அந்தப் பிரதேசம் அபிவிருத்தி அடைய காரணமாக இருக்கிறது. மற்றும், கால்வாய்களிலிருந்து தண்ணீர் நேராகப் பாயும்வசதி இல்லாத இடங்களில், மின்சாரத்தினால் இயங்கும் பம்புகளின் உதவியால் கிணறுகள், குழாய் கிணறுகள் முதலியனவகளிலிருந்து தண்ணீரை இறைத்து சாகுபடி செய்யவும் உபயோகமாகிறது. பெரிய கால்வாய்களில் படகு போக்குவரவுக்கும் நீர்த்தேக்கங்களில் மீன் பண்ணை ஏற்படுத்தவும், சமீபத்தில் உள்ள நகரங்களுக்கு குடிதண்ணீர் வசதிக்கும், நீர்த் தேக்கங்களில் நீந்துவது, படகு ஓட்டுவது முதலிய பொழுது போக்கு விளையாட்டுகளுக்கும், இந்த நதி இயல் திட்டங்கள் பயன்படுகின்றன.

ஒரு நதி இயல் திட்டத்தின் முக்கிய உறுப்பு நதியின் குறுக்கே கட்டப்படும் அணையும் நீர்த்தேக்கமுமே. வெள்ளக் காலங்களிலும், சாதாரண காலத்திலும் நதியில் வரும் தண்ணீரைத் தேக்கி சேமித்து நமக்கு வேண்டும் பொழுது கால்வாய்கள் மூலம் நிலங்களுக்குத் தண்ணீர் அளிப்பதே இதன் முக்கிய நோக்கம்.


ஒரு நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்படும் தண்ணீர், மழையின் மூலமாகவோ அல்லது பனிக்கட்டி உருகுவதன் மூலமாகவோதான் கிடைக்கவேண்டும். தென் இந்தியாவில் பனி மூடிய பிரதேசங்கள் இல்லை. அதனால் நம் நீர்த் தேக்கங்களுக்கு மழையின் மூலம்தான் வேண்டிய தண்ணீர் கிடைக்க வேண்டும். எந்தப் பிரதேசத்தில் பெய்யும் மழை எல்லாம் ஆற்றுக்கோ அல்லது நீர்த்தேக்கத்திற்கோ ஓடி வருகிறதோ அந்தப் பிரதேசத்திற்கு ஆற்றின் 'வடிநீர்ப்பிரதேசம்' என்று பெயர். இந்த இடத்தில் பெய்யும் மழையில் ஒரு பாகத்தை தரை உள்ளே இழுத்துக்கொள்ளுகிறது. ஒரு பாகம் ஆவியாக மாறி காற்றுடன் கலந்து விடுகிறது. மற்றொரு பாகத்தை தாவரங்கள் எடுத்துக் கொள்கின்றன. பாக்கி இருக்கும் தண்ணீர் தரையில் வழிந்தோடியோ அல்லது ஊற்றின் மூலமோ ஆற்றுக்குப் போய்ச் சேர்ந்து நீர்த்தேக்கத்தை அடைகிறது. ஆகையால் நீர்த்தேக்கத்தில் சேமிக்க கூடிய தண்ணீரின் அளவு, பிரதேசத்தின் விஸ்திரணத்தையும் அந்த இடத்தில் பெய்யும் மழையின் அளவையும் பொருத்து இருக்கிறது.

## அணை கட்டுமுன் பிரச்னைகள்

ஒரு அணையைக்கட்ட உத்தேசிக்கும் பொழுது கீழேவரும் பிரச்னைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும். நதியில் ஒரு வருஷத்தில் எவ்வளவு தண்ணீர் ஓடுகிறது? அதில் எவ்வளவு தற்போது இருக்கும் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்தப் படுகிறது? எவ்வளவு தண்ணீர் வீணா கடலுக்குப்போய்ச் சேருகிறது? நதியின் தண்ணீரில்



விஜயவாடாவில் கிருஷ்ணா நதியின்மேல் அமைக்கப் பட்டுள்ள பாலம்



விஜயவாடாவில் கிருஷ்ணாவின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு.

எந்தெந்த ராஜ்யங்களுக்கு எவ்வளவு பங்கு உண்டு?' இம்மாதிரியான விசாரணையிலிருந்து பயன்படுத்த எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதும் நிச்சயிக்கப்பட வேண்டும். இவ்வாறு கிடைக்கும் தண்ணீரை எந்தெந்த ஜில்லாக்களுக்குப் பாசனத்திற்கு கொடுக்க வேண்டும் என்பது அடுத்து நிச்சயிக்க வேண்டிய விஷயம்.

மேற்கண்ட பிரச்னைகள் தீர்மானமானதும் இந்தத் தீர்மானங்களை நிறைவேற்ற மிகவும் குறைவான பணச்செலவில் நிர்மாணிக்கக்கூடிய அணைக்குத் தகுந்த இடங்களையும் கால்வாய்களின் போக்கையும் நிர்ணயிக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள். இந்த ஆராய்ச்சியின் பொழுது பின்வரும் விஷயங்கள் கவனிக்கப்படும். அணைகட்டத் தேர்ந்தெடுக்கப்படடிருக்கும் இடத்தில் அணையின் நீளம், அகலம், மற்ற அம்சங்கள் எல்லாம் சிக்கனத்திற்கு உகந்ததாக இருக்கவேண்டும். அணை கட்டுவதற்கு தக்க அஸ்திவாரம் அந்த இடத்தில் இருக்கவேண்டும். அணை கட்டுவதனால் ஏற்படும் நீர்த்தேக்கம் விலை உயர்ந்த நிலங்களையும் நகரங்களையும் மூழ்கடிக்கக் கூடாது. ரயில் பாதைகள் ரஸ்தாக்கள், பாலங்கள் முதலியவைகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் கூடிய வரையில் ஏற்படக்கூடாது. அணை கட்டுவதற்கு வேண்டிய கற்கள், மண். மணல் முதலிய பொருள்கள் சமீபத்தில் வேண்டிய அளவில் கிடைக்க வேண்டும். அணை கட்டப்பட வேண்டிய இடம் சௌகர்யமாய் போய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். அணை கட்டும்போது வேலை செய்வோருக்கு தங்கி இருக்க வசதியான இடம் சமீபத்தில் இருக்க வேண்டும். கால்வாய்கள் அமைப்பதற்கும் வெள்ளத்தண்ணீரை வெளிப்போக்குவதற்கும் சௌகரியமான தரை அமைப்பு தேர்ந்தெடுக்கப்படும் இடத்தில் இருக்க வேண்டும்.

### உயரமான அணைகள்

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் அதிக உயரமான அணைகள் கட்டுவதே வழக்கம் இல்லை. அந்தக் காலத்து நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம்

உயரம் அதிகம் இல்லாத அணைக்கட்டுகளின் உதவியினுலேயே நடத்தப்பட்டு வந்தன. தற்காலத்தில் மிகவும் உயரமான அணைகளும் சிறிய அணைக்கட்டுகளும் உபயோகப்பட்டு வருகின்றன. தற்போது உலகத்திலேயே மிக உயரமான அணை 726' உயரமான போல்டர் அணை என்பதே. சமீப காலம் வரை உயரமான அணைகள் எல்லாம் கருங்கல்லாலோ அல்லது சிமெண்டு காங்கிரீட்டாலோ கட்டப்பட்டன. ஆனுல், இப்பொழுது அவசியமான சில பாகங்களுக்கு மட்டுமே கல் கட்டடமும் காங்கிரீட்டும் உபயோகப்படுத்தப்படுகிறது. மற்ற பகுதிகள் எல்லாம் மண்ணுலேயே கட்டப்படுகின்றன. முற்காலத்தில் ஆறுகளின் கரைகளும், ஏரி குளங்களின் கரைகளும் மண்ணுல் கட்டப்பட்டது உண்டு. ஆனுல், இவைகளின் உயரம் அனேகமாக 50 அடிக்கு குறைவாகவே இருந்தது. அதிக நீளமும் இல்லை. ஆனுல், இப்பொழுது அதிக உயரத்திற்கும் நீளத்திற்கும் மண் அணைகள் கட்டப்படுகின்றன. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் முதன் முதலாக கட்டி முடிக்கப்பட்ட கீழ் பவானி திட்டத்தில் நான்கு மைல்கள் நீளத்திற்கு மண் அணை அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாறுதலுக்கு முக்கிய காரணம் மண் உறுதி ஆராய்ச்சியில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுதான். வெளிநாடுகளில் 250 அடி உயரத்திற்கும் மண் அணைகள் கட்டப்பட்டிருப்பதே இதற்குச் சான்ருகும். நம் நாட்டிலும் மண் உறுதி ஆராய்ச்சி நிலையம் ஒன்று சென்னையில் மராமத்து இலாக்காவின் கீழ் இருந்து வருகிறது. இந்த ஆராய்ச்சி சாலையின் உதவியினுலேயே இந்தப் பெரிய மண் அணைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.


ஒரு அணையை மண்ணுல் கட்டுவதனுல் அனேக அனுகூலங்கள் ஏற்படுகின்றன. அவைகளில், குறைந்த செலவும், எஃகு, சிமெண்டு முதலிய கிடைப்பதற்கு அரிதான பொருள்களின் உபயோகத்தில் சிக்கனமும் முக்கியமானவை. மண்ணை வெட்டி எடுத்து வந்து அணையில் போடுவதற்கு அதிக தொழில் நுட்பம் தெரிய வேண்டியதில்லையாதலால், அணை கட்டப்படும் இடத்திற்கு சமீபத்தில் உள்ள பாமர ஜனங்களுக்கு வேலை செய்ய அதிக சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆனுல், விரைவில் குறிப்பிட்ட கெடுவுக்குள் அதிக மண்வேலையை செய்து முடிக்க இயந்திரங்களின் உதவி அவசியமாக இருக்கிறது. மண்ணை வெட்டி, அணைக்கு கொண்டு வந்து கொட்டி, மண்ணின் மேல் வேண்டிய தண்ணீரை தெளித்து, மண்ணை கெட்டி செய்ய பல விதமான இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஒரு நீர்த்தேக்கத்தின் முக்கியமான நோக்கம் ஆற்றில் வரும் தண்ணீரைத் தேக்கி வைத்து வேண்டும் போது பாசனத்திற்கு கொடுப்பதே. அனேகமாக எல்லா நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படும் இடங்களிலும் பல வருஷங்களுக்கு முன்னிருந்தே ஆற்றில் வரும் தண்ணீரின் அளவுக்கணக்கு வைத்திருப்பார்கள். இந்தக் கணக்குகளிலிருந்து எந்த மாதங்களில் எவ்வளவு தண்ணீர் வரும் என்று சுமாராக முன்கூட்டியே சொல்ல முடியும். ஆனுல், மழை பெய்வதில் வேறு பாட்டின


காரணமாக ஆற்றில் தண்ணீர் அதிகமாகவோ குறைவாகவோ வரக்கூடும். இதற்காகவே முதலிலிருந்தே வேண்டிய தண்ணீரை நீர்த்தேக்கத்தில் சேமித்து வைத்துக் கொள்ள ஆரம்பிப்பார்கள். இப்படி சேமித்து நீர்த்தேக்கம் நிரம்பி இருக்கும் பொழுது, அதிக மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டால், இந்த வெள்ளத்தை அணைக்கு சேதம் ஏற்படாமல், நீர்த்தேக்கத்திலிருந்து வெளிப்படுத்தி ஆற்றுக்கே கொண்டு சேர்க்க வேண்டும்.

அணையைக் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடத்தில் தரை அமைப்பு சௌகர்யமாக இருந்தால் இம்மாதிரியான உபரி தண்ணீரை ஆற்றுக்கே கொண்டுவிட ஒரு தனி வழி அமைப்பது உண்டு. மேட்டூர் அணையில் இம்மாதிரியான முறையே கையாளப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய தரை அமைப்பு இல்லாத இடங்களில் கல்லால் கட்டப்படும் பகுதியில் வழிந்தோடும் பாகம் ஒன்று அமைக்கிறார்கள். உபரி தண்ணீர் இந்த இடத்தில் அணையின் மேலேயே வழிந்து ஓடி ஆற்றுக்குப் போய் சேருகிறது. இம்மாதிரி வழிந்தோடும் தண்ணீரை கதவுகளின் மூலம் கட்டுப் படுத்தவதும் உண்டு. அதிக உயரத்திலிருந்து தண்ணீர் வழிந்து வருவதால் ஆற்று மட்டத்திற்கு வரும்போது தண்ணீர் அதிக வேகத்துடன் இருக்கும். இதனால் ஆற்றின் தரைக்கு சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

அணை எவ்வாறு கட்டப்பட்ட போதிலும் அணையின் வழியே சிறிதளவு தண்ணீர்



ஒரு கலுங்கின் அமைப்பு - கலுங்கின் நேர் தோற்றம்.



*புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ் வழி*

கசிந்து வருவது உண்டு. இக் கசிவுத் தண்ணீரால் அணைக்கு கெடுதி ஏற்படாமல் அதைத் தடுத்து சேகரித்து வெளியே கொண்டு வர, அணையைக் கட்டும் பொழுதே அணையின் முன் பாகத்தில் அநேக வடிகால்கள் அமைக்கிறார்கள். இந்த வடிகால்கள் அணையின் உட்புறத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. சுரங்கப் பாதைக்குக் கசிவுத் தண்ணீரைக் கொண்டு சேர்ப்பிக்கின்றன. இம்மாதிரியாக சுரங்கப் பாதைக்கு வந்து சேரும் தண்ணீர் எல்லாம் சௌகர்யம் போல் வெளிப்படுத்தப்படுத்தப்படுகிறது.

மண் அணைப் பகுதியிலும் சிறிதளவு தண்ணீர் அணையின் வழியே ஊறி வெளி வருகிறது. இந்தத் தண்ணீர் அணையின் அடிவாரத்தில் தேங்கினால் அதனால் மண் கரைந்து காலக்கிரமத்தில் அணைக்கே சேதம் ஏற்படலாம். இதைத் தடுத்து அணைக்கு பலம் அளிக்க அணையின் கீழ் அடிவாரத்தில் கற்கள் குவிக்கப்பட்டு, ஒரு தண்ணீர் வடிக்கட்டி அமைக்கப்படுகிறது. மண் கரையாமல் தண்ணீர் மட்டும் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது


நீர்த்தேக்கத்திலிருந்து வேண்டிய பொழுது வேண்டும் அளவில் தண்ணீரை வெளிவிட மதகுகள் அமைக்கிறார்கள். மதகுகள் என்பவை கல் அணைப் பகுதியில் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீரை அளவுபடி வெளிவிட அமைக்கப்படும் வழிகள். இந்த வழிகளை திறக்கவும் மூடவும் கதவுகளை உபயோகிக்கிறார்கள்.

அணைத்திட்டங்களில் இக் கதவுகளின் அமைப்பு மிக முக்கியமானதாகும். இவற்றை நுணுக்கமாக கவனித்து அமைக்கவேண்டும்.


நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்கப்பட்ட தண்ணீரின் உதவியால் சாகுபடி செய்யப்படும் நிலங்கள், அணைக்கு சமீபத்திலேயே இருந்தால் அணையிலிருந்து தண்ணீரை தலைவாய்க்காலிலேயே கால்வாய் மதகுகள் மூலம் வேண்டிய அளவுக்குத் திறந்துவிடுவார்கள். தலைவாய்க்காலிலிருந்து அனேக கிளைகள் மூலம் தண்ணீர் நிலங்களுக்கு போய் சேருகிறது. கீழ்பவானி திட்டத்திலும், மற்றும் தற்பொழுது கட்டப்பட்டு வரும் சிலதிட்டங்களிலும் இம்மாதிரியான ஏற்பாடுதான் செய்யப்பட்டிருக்கிறது.

### 'பிக்கப்' அணைக்கட்டு

சாகுபடிக்கு தகுந்த நிலங்கள் அணைகட்ட செளகர்யமான இடத்திற்கு சமீபத்தில் இல்லாமல், சாகுபடிக்கு தகுந்த நிலங்கள் சமவெளிப் பிரதேசத்திலும் அணைகட்ட செளகர்யமான இடம் மலைப் பிரதேசத்திலும் இருந்தால் மற்றொரு விதமான முறை கையாளப் படுகிறது. அணையை மிகவும் சிக்கனமாக கட்டக்கூடிய இடத்தில் அமைத்து, நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை மறுபடியும் ஆற்றிலேயே விட்டுவிடுவார்கள். சாகுபடிக்குத் தண்ணீர் தேவையான இடத்திற்கு சற்று முன்னால் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணைக்கட்டை அமைத்து, தண்ணீரை தடுத்து நிறுத்தி, தலைவாய்க்காலுக்கு மாற்றிவிடுவது வழக்கம். இம்மாதிரியாக அமைக்கப்படும் அணைக்கட்டுக்கு 'டிவர்சன் வேயர்' அல்லது 'பிக்கப் அணைகட்' என்று பெயர். பெரியாறு திட்டத்திலும், காவேரி மேட்டூர் திட்டத்திலும் இம்



கால்வாயில் ஒரு விழ்ச்சி




பக்கிங்ஹாம் கால்வாயில் ஒரு சாத்தும் கதவு

மாதிரியான முறைதான் கையாளப் பட்டிருக்கிறது.

சில இடங்களில், ஆற்றில் அல்லது கால்வாயில் ஓடும் தண்ணீரை அளப்பதற்கு ஒரு அணைக்கட்டை அமைப்பதுண்டு. அணைக்கட்டுகள் உள்ள இடங்களில் எல்லாம் ஆறு அல்லது கால்வாயில் ஓடும் தண்ணீரின் அளவை சரியாக மதிப்பிட முடியும்.

பெரியாறு திட்டத்தில், பெரியாறு நதியை, 158 அடி உயரமுள்ள ஒரு அணையால் தடுத்து, மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒரு சுரங்கத்தின் மூலம், நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீரை வைகையின் உப நதி ஒன்றுக்கு கொண்டுவந்து சேர்க்கிறார்கள். இத் தண்ணீர் வைகை நதி வழியே ஓடி பேரணையில் கால்வாய்களுக்கு மாற்றி அனுப்பப்படுகிறது.

காவேரி, மேட்டூர் திட்டத்தில், சேலம் நகரத்திற்கு சமீபத்தில் காவேரிக்கு குறுக்கே 176 அடி உயரமும், ஒரு மைல் நீளமும் உள்ள ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணையால் ஏற்பட்ட நீர்த்தேக்கம், 60 சதுர மைல் விஸ்தீரணம் உள்ளது. இந்த நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர், காவேரி ஆற்றிலேயே விடப்படுகிறது. இந்த தண்ணீர் காவேரி வழியாகவே ஓடி, தஞ்சை ஜில்லாவுக்கு மேற்கே, திருச்சிக்கு சமீபத்தில் உள்ள கல்லணையில் தடுக்கப்பட்டு, அங்குள்ள கலுங்கின் உதவியால் காவேரி, கொள்ளிடம், வெண்ணாறு, புதிய கல்லணை கால்வாய் முதலியவைகளுக்குள் வேண்டிய அளவுப்படி பிரித்துக் கொடுக்கப்படுகிறது.



நீர் வடிகட்டி

### கலுங்குகள்

இம்மாதிரியாகவே, இரண்டு அல்லது மூன்று கால்வாய்களோ, கிளைகளோ பிரியும் இடங்களில், கலுங்கு ஒன்றை அமைத்து, அதனால் ஒவ்வொரு பிரிவுக்கும் தேவைக்கு தகுந்தபடி தண்ணீரைப் பிரித்துக் கொடுப்பது வழக்கம். கலுங்கு என்பது ஒரு பாலம் போலவே அமைக்கப்பட்டிருக்கும். பாலத்தில் அதன் கீழுள்ள தரை மணலாக இருப்பதற்குப் பதிலாக, கலுங்கில் அந்த தரை கல்லால் கட்டப்பட்டு இருக்கும். தண்ணீர் ஓடும் வழி கதவுகளால் அடைக்கப்பட்டிருக்கும் பாலத்தின் மேல் இருந்தே கதவுகளை மேலே தூக்கவும் கீழே இறக்கவும் வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கும். இந்தக் கதவுகளால் தண்ணீரின் போக்கு கட்டுப்படுத்தப்பட்டு வேண்டிய அளவு திறந்துவிடப் படுகிறது.


ஒரு உயரமான அணையும் அதனால் உண்டாகும் நீர்த்தேக்கமும் இல்லாமலேயே ஒரு அணைக்கட்டின் உதவியாலேயே மட்டும் நீர்ப்பாசனம் நடத்தப்படலாம். முன்னாளில் இம்மாதிரியான திட்டங்கள் தான் அமைக்கப்பட்டு வந்தன. கிருஷ்ணா, கோதாவரி, பெண்ணாறு முதலிய நதிகளின் குறுக்கே விஜயவாடா, தவளேச்வரம், நெல்லூர், சங்கம் முதலிய இடங்களில் இம்மாதிரியான அணைக்கட்டுகளும் அதிலிருந்து தலைவாய்க்கால்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது கிருஷ்ணா அணைக்கட்டு ஒரு பாலம், கலுங்கு இரண்டும் சேர்ந்தாற் போல் இருக்கும்படியாக அமைக்கப்பட்டு வருகிறது.

இம்மாதிரியே, வேண்டிய இடங்களில், போக்கு வரவுக்கு வேண்டிய சாதனங்களையும், நீர்ப்பாசனத்துக்கு வேண்டிய அமைப்புகளையும் ஒன்றாகச் சேர்த்து அமைத்தால் சிக்கனத்திற்கு உகந்ததாக இருக்கும்.

தலை மதகிலிருந்து கால்வாய்களை அமைக்கும் பொழுது சில முக்கியமான விஷயங்களை கவனிக்க வேண்டும். தலை மதகு, தலை வாய்க்கால் முதலியவை நீர்ப்பாசனம் அளிக்க வேண்டிய நிலங்களுக்கு தேவையான தண்ணீர் எல்லாவற்றையும் அபாயம் இல்லாமல் கொண்டு செல்ல போதிய அளவு உள்ளவையாக இருக்க வேண்டும். நிலங்களுக்கு தண்ணீர் சௌகர்யமாகப் பாய்வதற்கு கால்வாயின் மட்டம், நிலங்களின் மட்டத்தை விட உயரத்தில் இருக்க வேண்டும். தலை வாய்க்கால், கிளைகள் எல்லாவற்றையும் அமைக்க ஏற்படும் செலவு கூடிய வரையில் குறைவாக இருக்க வேண்டும்.

கால்வாய்களை அமைக்கும் பொழுது முக்கியமாக இரண்டு முறைகளைக் கையாளுகிறார்கள். முதலாவது கால்வாயை எவ்வளவு உயரமான மட்டத்தில் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு உயரமான மட்டத்தில் அமைப்பது. இந்த முறைக்கு சமமட்ட கோட்டைத் தழுவிய அமைப்பு என்று பெயர். இரண்டாவது கால்வாயை இரண்டு பள்ளப் பிரதேசங்களை பிரிக்கும் உயர் மட்டத்தில் அமைப்பது. தலைமதகிலிருந்து அமைக்கப்படும் தலை வாய்க்கால் அனேகமாக சம மட்டக் கோட்டைத் தழுவின அமைப்பாகவும், தலை வாய்க்காலிலிருந்து பிரிந்து செல்லும் கிளைகள் இரண்டாவது முறைப்படி அமைக்கப் பட்டனவாயும் இருக்கும்.



கீழ்பவானி மண் அணைப்பகுதி

சமமட்டக் கோட்டைத் தழுவி அமைக்கப்பட்ட வாய்க்காலிலிருந்து அதன் ஒரு பக்கத்திற்குத்தான் தண்ணீர் பாசனத்திற்கு அளிக்க முடியும். ஏனென்றால் வாய்க்காலுக்கு ஒரு பக்கத்தில் நிலங்கள் வாய்க்காலைவிட உயரத்திலும் மற்ற பக்கத்தில் நிலங்கள் வாய்க்காலைவிட கீழ் மட்டத்திலும் இருக்கும். வாய்க்காலைவிட குறைந்த மட்டம் உள்ள பக்கத்திற்குத்தான் தண்ணீர் பாசனத்திற்கு அளிக்க முடியும். ஆகையால் இம்மாதிரியான வாய்க்கால்கள் அதிலிருந்து நீர்ப்பாசனம் அடையும் நிலப் பரப்பினுடைய ஒரு எல்லையாகவே இருக்கும். இரண்டாம் முறைப்படி அமைக்கப்பட்டுள்ள கால்வாய்களிலிருந்து இரண்டு பக்கங்களுக்கும் தண்ணீர் பாசனத்திற்கு அளிக்க முடியும்.

வண்டல்படியும் பிரச்னை

கால்வாயில் ஓடும் தண்ணீரில் சிறிதளவு வண்டல் மண் கலந்தே இருக்கும். தண்ணீரின் ஓட்டத்தைத் தடுத்து ஒரு இடத்தில் அதை தேக்கி வைத்தால் இந்த வண்டல் உடனேயே கீழே படிய ஆரம்பிக்கும் ஆறுகளிலும் கால்வாய்களிலும் தண்ணீர் ஓடிக்கொண்டே இருப்பதாலேயே இந்த வண்டல் கீழே படியாமல் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது. கால்வாயில் தண்ணீரின் வேகம் அதிகமானல் தரையிலிருந்தும் பக்கங்களிலிருந்தும் மண் அதிகமாக கரைக்கப்பட்டு பள்ளங்கள் ஏற்படும். வேகம் குறைவாக இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக வண்டல் படிந்து கால்வாய் மேடுதட்ட ஆரம்பிக்கும். ஆகையால் கால்வாய் வண்டலால் மேடாகாமலும், தண்ணீரின் வேகத்தால் பள்ளமாகாமலும் இருக்க அதில் ஓடும் தண்ணீரின் வேகம் ஒரு குறிப்பிட்ட அளவாகவே இருக்கவேண்டும். இந்த வேகத்தை ஏற்படுத்தவே வாய்க்காலின் தரையின் மட்டத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குறைத்துக்கொண்டே வரவேண்டும் சமமட்ட கோட்டை தழுவி அமைக்கப்படும் கால்வாயும் இம்மாதிரி அமைக்கப்பட வேண்டுமானல், கால்வாய் சமமட்ட கோட்டைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிக் கொண்டேவரும் கால்வாய் அமைக்கப்படும். சுற்று பிரதேசத்தின் சரிவு கால்வாய்க்கு வேண்டிய சரிவைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் கால்வாயை பல பாகங்களாகப் பிரித்து வேண்டிய சரிவில் அமைத்து. இரண்டு பாகங்களுக்கு இடையே ஒரு வீழ்ச்சியை அமைப்பது வழக்கம்.

சமமட்ட கால்வாய் அமைக்கும் பொழுது அது ஒரு மலையைச் சுற்றிக்கொண்டு செல்லும்படியாக நேர்ந்தால் கால்வாயின் நீளம் அதிகமாவதை தவிர்க்க ஒரு பள்ள வெட்டைக் கொண்டோ அல்லது ஒரு சுரங்கத்தைக் கொண்டோ அந்த மலைத் தொடரைக்குறுக்கே கடப்பதுண்டு. இதே மாதிரி ஒரு பள்ளத்தாக்கை குறுக்கே கடப்பதற்கு ஒரு மண் அணை அமைத்து, அதன்மேல் கால்வாயை அமைக்கலாம்.

ஒரு பிரதேசத்திலிருந்து வடியும் தண்ணீர் உயர் மட்டத்திலிருந்து கீழ்மட்டத்தை நோக்கியேஓடும். இதனல் அந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படும் சம

மட்ட கால்வாயை அந்தப் பிர தேசத்து வடிகால்கள் எல்லாம் ஆங்காங்கே குறுக்கிடும் இரண்டாம் முறைப்படி அமைக்கப்படும் கால்வாய் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பிரதேசங்களைக் காட்டிலும் அதிகமான உயரத்திலேயே இருப்பதால் வடிகால்கள் இந்தக் கால்வாயை குறுக்கிடாது.

இம்மாதிரி ஒரு வாய்க்காலும் வடிகாலும் குறுக்கிடும் இடங்களில் ஒவ்வொன்றும் மற்றொன்றால் தடைபடாமல் தாண்டிச் செல்வதற்கு ஒரு நீர்ப்பாலமோ அல்லது ஒரு கீழ்வழியோ அமைக்கப்படும். வடிகால் சிறியதாகவும், சுற்றுப்புறமுள்ள மட்டத்தைவிட அதிகம் கீழே இல்லாமலும், கால்வாய் சுற்றுப்புற மட்டத்தை விட கீழேயும் இருந்தால், கால்வாயை வடிகாலுக்கு கீழே கொண்டு செல்வது வழக்கம். இம்மாதிரியான இடங்களில் ஒரு கீழ்வழி அமைப்பார்கள். சில இடங்களில் கால்வாய்கள் கடப்பதற்கும் இம்மாதிரி கீழ் வழி அமைப்பதுண்டு.

மேற்கூறிய அமைப்பு இல்லாமல், கால்வாய் சுற்றுப் புறத் தரை மட்டத்தைவிட உயரத்திலும், வடிகால் அதிக அகலம் உள்ளதாகவும் அதிக தண்ணீர் கொண்டு செல்வதாகவும் இருந்தால்,கால்வாயை போதிய உயரத்தில் ஒரு பாலத்தின்மேல் கொண்டு செல்வது வழக்கம். இந்த அமைப்பிற்கு நீர்ப்பாலம் என்று பெயர்.

தற்பொழுது கட்டப்பட்டு வரும் மேட்டூர் கால்வாய் திட்டத்தில் மேட்டூர் அணையிலிருந்து ஆரம்பமாகும் தலை வாய்க்காலின் ஒரு கிளை, காவேரி ஆற்றை ஒரு நீர்ப்பாலத்தின் மூலம் கடந்து காவேரியின் மற்றொரு பக்கத்திற்கு நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் கொண்டு செல்கிறது. சமீபத்தில் பூர்த்தியான இந்த நீர்ப்பாலத்தில், பெரிய இரும்புக் குழாய்கள் மூலம் தண்ணீர். அமுக்கத்தில் கொண்டு செல்லப்படுகிறது.

சில பெரிய வாய்க்கால்களில் படகு போக்கு வரவு அனுமதிக்கப் படுவதுண்டு. ஆறுகளின் சில பாகங்களும் படகு போக்கு வரவுக்கு உபயோகப்படலாம். இம்மாதிரியான போக்கு வரவுக்கு சாதகமாக வேண்டிய இடங்களில் சாத்தும் கதவு அமைக்கப்படும்.

மற்றும், சாலைகள் இருப்பு பாதைகள், கால்வாய்களை குறுக்கிடும் இடங்களில் பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத்திற்கு மிகுதியான தண்ணீர் வடிவதற்கு சௌகர்யமாக வடிகால்கள் அமைக்க வேண்டும். இம்மாதிரி எல்லா சௌகர்யங்களும் அமைக்கப்பட்டால் பாசனத்திற்கு தண்ணீர் அதிக நஷ்டமில்லாமலும், தேவையான இடத்திலும் கிடைக்க வசதி ஏற்படும். இதனால் சாகுபடி நல்ல பலன் தரும். தானிய உற்பத்தி பெருகும்.

பொறியியல் கலையில் ஒவ்வொருநாளும் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே போவதால், பாசனத் திட்டமுறைகளிலும் மேன்மேலும் புதிய முறைகள் புகுத்தப்பட்டு வருகின்றன. பாசனத்தின் பொருட்டு நீர்த் தேக்கம் எவ்வாறு அமைக்கப்படுகிறது என்பதையும், தேக்கப்பட்ட தண்ணீர் பாசனத்திற்கு எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பதையும் ஓரளவு விவரமாக இக்கட்டுரை விளக்கி யிருக்கிறது. ★

# ஹாஸ்ய சம்பவம்



ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17. ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

## ரயிலிலே...!

நான் சென்ற மாதம் திருவிடைமருதூரிலிருந்து திருச்சிக்கு செங்கோட்டை பாசஞ்சரில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். நான் ஏறியிருந்த வண்டியிலே டிக்கட் பரிசோதகர் தஞ்சாவூரிலே ஏறி, எல்லோருடைய டிக்கட்டுகளையும் பரிசோதித்துப் பார்த்தார். பிறகு டிக்கட் இல்லாமலே பெஞ்சின் அடியிலே படுத்திருக்கும் கிழவனரைப் பார்த்து, 'ஏய்! டிக்கட் இல்லாமல் ஏன ஏறினாய்? வெளியே வா!'' என்று அதட்டினார். அந்தக் கிழவரும் வெளியே வந்து, ''ஐயா! நான் ரொம்ப ஏழை! என் மகள் கலியாணத்துக்குப் போகிறேன். கையிலே காசில்லை. நீங்கதான் காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். பரிதாபப்பட்ட டிக்கட் பரிசோதகர் சரியென்று அவரை விட்டுவிட்டு பெஞ்சுகளின் அடியைத் திருப்ப பரிசோதித்தார். மற்றொரு பெஞ்சுக்கடியிலே ஒருவன் படுத்திருந்தான். அவனை வெளியே இழுத்துவந்து, டிக்கெட் எங்கே என்று கேட்டார். ''ஐயா! நான் தானுங்க மாப்பிள்ளை! அவர் மகளைக் கட்டிக்கிறவன்.'' என்று சொன்னான். டிக்கெட் பரிசோதகர் உள்பட நாங்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டோம்.

டி. கே. கோவிந்தன்,
திருவிடைமருதூர்.

## நரகமாகி விடாதா?

ஒரு முறை எங்கள் கிராமப் பஞ்சாயத்து போர்டு பாடசாலை எப்படி நடக்கிறது என்று பார்க்க நான் அங்கு சென்றிருந்தேன். நான் நுழைந்தது மூன்றாவது வகுப்பு. அந்த வகுப்பின் உபாத்தியாயர் என் சினேகிதர் அவர் அப்பொழுது தெய்வம். நரகம், சுவர்க்கம் என்பவைகளைப்பற்றி மாணவர்களுக்கு விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். கடைசியில் அவர் வகுப்பிலிருந்த நாற்பத்திரண்டு பையன்களையும் பார்த்து, ''அட பசங்களா-இப்பொழுது சொல்லுங்கள்; உங்களில் எவ்வளவு பேர்கள் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார்

வகுப்பில் கிட்டு என்ற ஒரு பையனைத் தவிர, மற்றவர்களெல்லோரும் இடத்தில் எழுந்து நின்றனர் கிட்டு மாத்திரம் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தான்.

உபாத்தியார். ''ஏண்டா கிட்டு, நீ மாத்திரம் சொர்க்கத்துக்குப் போக விரும்பவில்லையா? ஏன் உனக்குச் சொர்க்கம் பிடிக்கவில்லையா?'' என்றார்.

''இந்த 41 பையன்களும் சொர்க்கம் போனால், அது நரகமாகி விடும் சார். அவ்வளவு விஷமம் பண்ணுவார்கள்; நான் இங்கேயே இருக்கிறேன் சார்!'' என்றான் அவன்.

உபாத்தியாயர், பையன்கள், நான் எல்லோருமே வயிறு குலுங்கச் சிரித்து விட்டோம்.

வி. சந்தானம்,
ஹைதராபாத்.

## சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

### சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மர்மம் நிறைந்த மாயவில்லா | 1 | 0 | 0 |
| சூனியக்காரி | 1 | 0 | 0 |
| பேய் வீடு | 1 | 8 | 0 |
| சூறைக்காற்று | 1 | 8 | 0 |
| மரணயாத்திரை | 1 | 8 | 0 |
| நீதிமயக்கம் | 1 | 0 | 0 |
| காதலன் கொலை வழக்கு | 1 | 4 | 0 |
| மர்மத்தீவு | 1 | 4 | 0 |
| கல்நெஞ்சன் | 1 | 8 | 0 |
| மர்மக்கொலை | 1 | 0 | 0 |
| ரத்தப் பசி | 1 | 4 | 0 |
| பயங்கர மனிதன் | 2 | 0 | 0 |
| பறக்கும் தட்டு | 2 | 0 | 0 |
| சவப்பெட்டி | 1 | 8 | 0 |
| ஆகாசக்கோட்டை | 2 | 0 | 0 |

### மேதாவி எழுதிய துப்பறியும் நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| துப்பறியும் ராஜு | 1 | 0 | 0 |
| ரகசிய அறை | 1 | 4 | 0 |
| பச்சை மாளிகை மர்மம் | 1 | 4 | 0 |
| மாய மனிதர்கள் | 1 | 4 | 0 |
| சூரக்கோட்டை மர்மம் | 1 | 8 | 0 |
| மலையாளச்சீட்டு மர்மம் | 1 | 8 | 0 |

### இளவெனில் எழுதியது

| | | | |
|---|---|---|---|
| புதுமணத் தம்பதிகளுக்கு | 2 | 4 | 0 |

### அரு. ராமநாதன் எழுதிய புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| கோழிப் பந்தயம் | 1 | 4 | 0 |
| பழையனூர் நீலி | 1 | 4 | 0 |
| வேதாளம் சொன்ன கதைகள் | 1 | 4 | 0 |

**வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்ப இயலாது.**

## ராமநாத் பப்ளிகேஷன்ஸ்,

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை-2.




கோவை, நீலகிரி: பாரதமாதா பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்;
வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.